www.tamilarangam.net


சரிநிகர்
SARINIHAR
# சரிநிகர்


உள்ளே...
3வது ஈழப்போர்
உரிமைகளும் சலுகைகளும்
கடலுக்கப்பால் புயலில் ஒரு தோணி
16 மாடிகளும் 17 வருடங்களும்
தேசியவாதமும் ஜனநாயகமும்

இதழ் 71 | மே.05 - மே.17, 1995 | விலை 7.00

## 3வது ஈழப்போர் ஆரம்பம்!

# இந்தியப் படை வரும்?

- ராவ்-சந்திரிகா பேச்சு!
- படையதிகாரிகள் புது டில்லி விரைவு!
- தமிழ் நாட்டை நோக்கி படையினர் நகர்வு!

**தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் கடந்த மூன்று மாதங்களாக இருந்து வந்த யுத்த தவிர்ப்பு ஒப்பந்தம் ஏப்ரல் 18ம் திகதியுடன் முடிவுக்கு வந்ததை அடுத்து, மூன்றாவது ஈழப்போர் ஆரம்பித்துள்ளது. இது ஒரு மூன்றாவது ஈழப் போர் அல்ல என்று ஜனாதிபதி அறிவித்துள்ள போதும், அரசின் நடவடிக்கைகள் யுத்தத்தை நடத்துவதில் அரசு தீவிரமாக உள்ளதாகவே காட்டுகின்றன. இம்முறை இந்த யுத்தத்திற்கு உதவியாக இந்தியப் படை உதவி கோரப்படலாம் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. இது சம்பந்தமாக இந்தியப் பிரதமர் நரசிம்மராவுடன் மே 2ஆம் திகதியன்று ஜனாதிபதி சந்திக்கும் போது பேசுவார் என்றும் அத்தகவல்கள் தெரிவிக்கின்றன.**

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது, பலாலியில் நடைபெற்ற புலிகளின் விமான தாக்குதலின் போது புலிகள் இரண்டு விமானங்களை சுட்டு வீழ்த்தியதை அடுத்து, இப்போதுள்ள ஆயுதவசதிகள் புலிகளுடன் மோதப் போதுமானவையாக இல்லை என்பது தெளிவாக உள்ளதால் இந்தியாவிடமிருந்து படையுதவியை கோருமாறு இராணுவ தரப்பிலிருந்து கோரிக்கைகள் எழுந்துள்ளதாக தெரியவருகிறது. இன்றைய நிலையில் அரசாங்கம் யுத்தத்தை நோக்கி செல்வதானால் இதைவிட வேறு சிறப்பான வழி இருக்க முடியாதென அவர்கள் தெரிவித்துள்ளதாகவும் அத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

### புதுடில்லி பயணம்

ஜனாதிபதி பாரிஸில் இருந்து திரும்பிய பின் நடைபெற்ற இலங்கை முப்படைகளின் உயரதிகாரிகள் அடங்கிய கிட்டத்தட்ட பன்னிரண்டு மணிநேரம் நடைபெற்ற முக்கிய கூட்டமொன்றின் போது பல இராணுவ சம்பந்தப்பட்ட தீர்மானங்கள் எடுக்கப்பட்டதாகத் தெரியவருகிறது. இக்கூட்டத்திலேயே வெளிநாட்டு உதவியின் அவசியம் பற்றி இராணுவ அதிகாரிகள் வலியுறுத்தியதாகவும் தெரியவருகிறது. இதன் ஒரு கட்டமாக இந்தியாவிடம் இருந்து பெறக்கூடிய ஆயுத, படை மற்றும் இராணுவ ஆலோசனைகளை பெறுவது பற்றிய பேச்சுக்களை நடாத்த ஏற்கெனவே உயர் இராணுவ அதிகாரிகள் குழுவொன்று ஜனாதிபதியின் இந்தியப் பயணத்திற்கு முன்பாவவே புதுடில்லி சென்றுள்ளதாகத் தெரியவருகின்றது.

### பிறநாடுகளின் ஆதரவு

புதிதாகத் தோன்றியுள்ள இந்த நிலைமை காரணமாக பிறநாடுகளின் ஆதரவைத்திரட்டுவதற்காக ஏற்கெனவே அனைத்து வெளிநாட்டுத் தூதரகங்களுடனும் தொடர்பு கொண்டு உதவி குறித்து பேசப்பட்டுள்ளதாகவும் இந்த வரிசையில் அமெரிக்கா, கனடா, ஜேர்மனி ஆகிய நாடுகளுடனும் பேசப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை, புலிகளுக்கும் அரசுக்குமிடையில் மத்தியஸ்தராக

→2

## இலங்கை படையினருக்கு இந்தியாவில் பயிற்சி!

இலங்கை இராணுவம் கடந்த பல காலமாக பாகிஸ்தானில் பயிற்சி பெற்று வருவது அறிந்ததே. (பாகிஸ்தான் இஸ்ரேலில் பயிற்சி பெறுவது வேறு கதை) இந்தியா இலங்கைப் படையினருக்கு பயிற்சி அளித்துவருவது பற்றி எத்தனை பேருக்குத் தெரியும்?

இந்திய தேசிய பாதுகாப்புப் பிரிவினரே (National Security Guards) இலங்கை இராணுவத்துக்கான பயிற்சியை அளித்து வருகின்றனர்.

மிக முக்கிய அரச தலைவர்களுக்கான. (VVIP) இப்பாதுகாப்பு வழங்கும் எட்டு பேருக்கு மட்டுமே இந்த பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது என பாதுகாப்பு வட்டாரங்கள் சொல்கின்றன.

எவ்வாறிருப்பினும் ஹரியானா மாநிலத்தில் அளிக்கப்படும் இப்பயிற்சிக்கு மேலதிகமாக இன்றும் பலரை சேர்த்துக் கொள்ளுமாறு தற்போதைய அரசாங்கம் இந்திய அரசாங்கத்தை கேட்டிருப்பதாக டைம்ஸ் ஒப் இந்தியா (Times of India) பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. ஏற்கெனவே மாலைதீவும் இவ்வாறு பயிற்சி பெற்று வருவதாக தெரியவருகிறது.

இலங்கையில் எழுந்துள்ள தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டம் தொடர்பாகவும் புலிகள் தொடர்பாகவும் இந்தியா தமது அவசியம் கருதி இதற்கு முன் இலங்கைப் போராளிகளுக்கு பயிற்சி அளித்தமை தெரிந்ததே. இன்று அந்த அவசியம் மறுபக்கம் திரும்பியுள்ள நிலையில் 'பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்ட இலங்கை அரசாங்கத்துக்கு ஆதரவு' வழங்குவதாகவும் அண்மையில் தெரிவித்திருக்கின்றது.

அண்மையில் இலங்கை ஜனாதிபதியின் இந்திய விஜயத்தின் போது இந்தியா இலங்கை தேசிய விடுதலைப் போராட்டம் பற்றி கொண்டிருக்கின்ற நிலைப்பாட்டை உறுதியாக தெரிந்து கொண்டதன் பின் தைரியம் கொண்டவராக தனது கருத்துக்களை தெரிவித்து வருவது தெரிந்ததே.

## ரத்துச் செய்யப்பட்ட ஆயுதக் கொள்வனவுக்கு அங்கீகாரம்

பொ.ஐ.மு. அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின் ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்கவினால் மோசடி இடம்பெற்றுள்ளதெனக் கூறப்பட்டு இரத்துச் செய்யப்பட்ட, ஐ.தே.க. அரசாங்கத்தின் பிரபல்யம் வாய்ந்த 1000 கோடி ரூபாய் ரஷ்ய ஆயுதக் கொள்வனவு தமிழீழ விடுதலைப் புலிகள் மீள யுத்தத்தை ஆரம்பித்திருப்பதைச் சாட்டாக வைத்து திரும்பவும் செயற்படுத்தவுள்ளதாகத் தெரியவருகிறது. இதற்காக வனசிங்ஹக்களும், வெத்த சிங்ஹக்களும் இப்போதே முயற்சி எடுத்துவருவதாகவும் அறியப்படுகிறது. இவ் ஆயுதக் கொள்வனவின் மூலம் மொத்தக் கொள்வனவுப் பெறுமதியில் 30%த்தினை இவர்கள் கொமிசனாகப் பெற்றுக் கொள்வார்கள் என்றும் தெரியவருகிறது.

மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்திலிருந்து தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஏப்ரல் 19ம் திகதி வாபஸ் பெற்றுக்கொண்டவுடன் பாதுகாப்புப் படைகளுக்கு உடனடியாக ஆயுதங்கள் வாங்க அரசாங்கம் எடுத்த முடிவின் போர்வையில் பாதுகாப்புப் பிரிவுத் தூதுக்குழுவொன்று ஏப்ரல் 21ஆம் திகதியே இரத்துச் செய்யப்பட்ட ஆயுதக் கொடுக்கல் வாங்கல்களைச் செயற்படுத்து முகமாக ரஷ்யாவுக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளது.

25 வருட நீண்ட கால அடிப்படையில் கடற்படைக்குத் தாக்குதல் படகுகளை வழங்க இலங்கையுடன் ஒப்பந்தமொன்றை மேற்கொண்டுள்ள சீனாவின் விலையை விட அதிகமாக 40% விலை கொடுத்து உடனடிப் பணத்திற்கு ரஷ்யாவிலிருந்தும், இஸ்ரேலிலிருந்தும் தாக்குதல் படகுகளை வாங்க நடவடிக்கை எடுப்பதே இவ் ஆயுதக் கொள்வனவில் பாரிய சந்தேகத்தைத் தோற்றுவிக்கும் சம்பவமாகும். தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதலென்ற போர்வையில் ஆயதக்கொள்வனவை தொடக்கியுள்ளவர்கள் இஸ்ரேலிலிருந்து "டோறா - (DOWRAS)" படகுகள் ஒன்பதையும், ரஷ்யாவிலிருந்து பல்நோக்கு (MULTI PURPOSE) கடற்படகுகள் இரண்டையும் வாங்குமாறு கடற்படைத்தளபதியை வற்புறுத்தியுள்ளதாகவும் தெரியவருகிறது.

இது இவ்வாறிருக்க, மூன்றாவது ஈழப்போரில் ஈடுபடவென இலங்கை அரசாங்கம் விமானங்கள், ஹெலி கொப்ரர்கள், (படையினரைக் கொண்டு செல்லக்கூடிய) கவச வாகனங்கள், கனரக ஆயுதங்களையும் (Artillery Weapons) வாங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

AN-32B விமானம் MI-IT ஹெலிகொப்ரர்களை வாங்கும் சாத்தியக்கூறுகளைக் கண்டறியவென ஒரு விமானப் படையைச் சேர்ந்த குழுவொன்று உக்ரெய்னிற்குக் கடந்த

→15

## யுத்தத்திற்கு மேலும் நிதி ஒதுக்கீடு!

புதிய போர்ச்சூழல் காரணமாக அமைச்சரவை கூடி போருக்காக 250 கோடி ரூபாயை ஒதுக்கத் தீர்மானித்திருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இத்தொகை மோட்டார் குண்டுகள், தோட்டாக்கள், துப்பாக்கிகள், யுத்த டாங்கிகளுக்குத் தேவையான பிற பொருட்களையும் கொள்வனவு செய்வதற்காகவே ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

'யுத்தத்துக்காக பல கோடிரூபாய வீணாக செலவழிக்கப்படுகின்றன' என கடந்த காலங்களில் கூறிய அரசாங்கம் தனது முதலாவது வரவுசெலவு திட்டத்தின் போது பாதுகாப்புக்காக ஒதுக்கிய நிதியானது கடந்த கால நிதி ஒதுக்குதலிலிருந்து பெரிய வேறுபாட்டை பெற்றிருக்கவில்லை என்பதை பலர் அறிவார்கள். இந்நிலையில் புதிதாக ஒதுக்கப்பட்டுள்ள இந்த 250 கோடி ரூபா கடந்த கால செலவினங்களை எட்டிப்பிடித்து விட்டதென்றே கூறலாம்.

இதைவிட பாரிஸில் நடைபெற்ற உதவிவழங்கும் நாடுகளின் மகாநாட்டில் கலந்து கொண்ட ஜனாதிபதி 85 கோடி டொலரை பெற அனுமதிபெற்றக்கொண்டு திரும்பியுள்ளார்.

85கோடி டொலர் (ஏறத்தாழ 4,165 கோடி இலங்கை ரூபாய்) பெற்றுக் கொண்ட அரசாங்கம் 250 கோடி ரூபாவை போருக்கு ஒதுக்கியுள்ளது. இது பெற்றுக்கொண்ட நிதியில் 6%-மாகும். இதற்கிடையில் அண்மையில் வீழ்த்தப்பட்ட 'அவ்ரோ' விமானம் 75கோடி ரூபாய் பெறுமதியிருக்கும் என கூறப்படுகிறது.


→15

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பொட்டு அம்மானை முறியடிக்கத் திட்டம்!



இலங்கை அரசாங்கத்தின் கோரிக்கைக்கிணங்க அமெரிக்காவிலிருந்து படை அதிகாரிகள் சிலர் அனுப்பப்பட்டிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

புலி கெரில்லாக்களை அழிப்பதற்கு இலங்கை இராணுவம் மேற்கொள்ள வேண்டிய தந்திரோபாய நடவடிக்கைகள் பற்றி பயிற்சியளிப்பதற்காகவே அவர்கள் இலங்கை வந்துள்ளதாக அத்தகவல்கள் கூறுகின்றன.

அமெரிக்காவிலிருந்து வந்திருக்கும் இக்குழுவினர் 'விசேட நடவடிக்கைகள் பிரிவை'ச் (Special Operation Unit) சேர்ந்தவர்களென்று தெரியவருகிறது.

தற்போதைய நடவடிக்கைகளுக்கு முகம் கொடுப்பதற்கு சில தற்காலிக யோசனையை இவ்வமைப்பு தெரிவித்திருப்பதாகவும், நிரந்தர நடவடிக்கைக்கான சில திட்டங்களை உருவாக்கிக் கொடுப்பதில் இக்குழு தற்போது செயற்பட்டுவருவதாகவும் திட்ட உருவாக்கம் முடிந்ததன் பின் முழு அறிக்கையும் ஜனாதிபதி சந்திரிகாவிடம் கொடுக்கப்படும் என்றும் இராணுவ வட்டாரங்களிலிருந்து கசியும் தகவல்கள் தெரிவிகின்றன.

பாதுகாப்புதுறையினருக்கு இக்குழு தெரிவித்திருக்கின்ற ஆலோசனைப்படி புலிகள் இயக்கத்தில் இருக்கும் பொட்டு அம்மான் தலைமையிலான உளவுப்பிரிவை முறியடிக்கக் கூடிய வகையிலான ஒரு விசேட உளவுப்பிரிவை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும்,

இந்த யோசனைகளுக்கிணங்க முப்படைகளும் ஒன்றிணைக்கப்பட்ட விசேட அதிகாரங்களையுடைய அதிகாரியொருவரை நியமிக்க திட்டமிடப்பட்டிருப்பதாகவும், இதற்காக புலிகளின் நடவடிக்கைகளுடன் அதிக அனுபவமுடைய மேஜர் ஜெனரல் ஏ.எம்.யு.செனவிரத்ன நியமிக்கப்படலாம் எனவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிகின்றன.

# புலிகளிடம் விமானப் படை!

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் வட - கிழக்கு அரச படைபிரிவுகளுடன் போராடுவதற்காக விமானப்படை பிரிவொன்றை அமைத்துள்ளதாக 'திவயின' என்ற சிங்கள நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

இதுவரை வடபகுதியில் 40 பேர் விமானப்படை வீரர்களாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ள அதேசமயம், மேலும் படை வீரர்களைச் சேர்த்துக் கொள்ள தற்போது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இளைஞர்கள் அதிக அளவில் விமானப்படையில் சேர விண்ணப்பித்துள்ளனர் என்றும், வவுனியாப் பகுதியிலிருந்து தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்குச் சென்றுள்ள ''சொர்ணீ'' என்பவர் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் விமானப்படையின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார் என்றும் அச்செய்திகள் கூறுகின்றன. அவா (மசாாண) விமான ஓட்டியாகப் பயிற்சி பெற்று விமானம் ஓட்டும் அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள ஒருவராவார் என்றும் 1985 ஆம் ஆண்டில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்காக சிறு விமானமொன்றை உருவாக்கி யாழ்ப்பாணத்தில் பறக்க விட்டத்தில் பிரதான பங்காற்றியவர் இவரென்றும் தெரியவருகிறது. அவரது பரீட்சித்துப் பார்த்தல் அனைத்தும் வெற்றிகரமாகியுள்ளன என்றும் கூறப்படுகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் விமானப்படையில் சேருமாறு, அதன் உறுப்பினர்கள் வடபகுதி இளைஞர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளதுடன், வடபகுதியிலுள்ள பிரதான பாதைகளிலுள்ள காவல் சாவடிகளிலுள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க இளைஞர்கள் அப்பாதைகளினூடாகச் செல்வோரிடம் இது பற்றி அறியத் தந்ததாகவும் வடபகுதி வாசிகள் தெரிவித்ததாக அச்செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மீண்டும் 'யுத்த பிமே'

ரூபவாஹினி நிறுவனத்தின் தலைவராக கடமையாற்றிய திரு. வசந்தராஜாவை தற்காலிகமாக அவரது பதவியில் இருந்து அகற்றுவது என அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் பத்திரிகைச் செயலாளர் சூலவன்ச சிறிலால் தனது பதவியை இராஜினாமா செய்வதால், அப்பதவிக்கு திரு.வசந்தராஜாவை நியமிப்பதற்காகவே இவ்வாறு செய்யப்படுகிறது என்று அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஆனால், அரசாங்கம் யுத்தத்தை தொடர்ந்து நடத்தப் போவதால் அதற்கு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தையும், ரூபவாஹினியையும் யுத்தப்பிரச்சாரத்திற்கும், புதிதாகச் சேர்க்கப்படவுள்ள 10,000 இராணுவத்தினரைச் சேர்ப்பதற்கு விளம்பரம் செய்யவும் பயன்படுத்த வேண்டியுள்ளதன் காரணமாக அதற்குப் பொருத்தமான ஒருவரை நியமிப்பதற்காகவே இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக வேறு செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த யுத்தப்பிரச்சார நடவடிக்கைகளுக்கு இப்பதவியிலுள்ள வசந்தராஜாவினால் இடையூறுகள் ஏற்படலாம் எனக் கருதுவதாலும் இவர் புலிகளுடன் தொடர்புள்ளவர் என்ற எதிர்கட்சியினரின் பிரச்சாரம் காரணமாகவுமே இவர் இப்பதவியில் இருந்து விலக்கப்படுகிறார் என நம்பகரமாகத் தெரியவருகிறது.

இந்த அரசாங்கம் பதவிக்கு வந்தபின் அதன் யுத்தப் பிரச்சாரத்தை உறுதிப்படுத்தும்வகையில் பிரேமதாசாவின் ஆட்சிக் காலத்தில், யுத்தத்திற்காக ஒலி/ ஒளிபரப்பப்பட்ட ''யுத்த பிமே தனிகளே நத்த கிசிதனே'' என்ற பாடல் 30ம் திகதி இரவு ஆங்கிலச் செய்திக்கு முன் முதன் முதலாக ஒலிபரப்பப்பட்டது.

புதிய அரசாங்கம் பதவி ஏற்ற காலம் முதல், நந்தா மாலினியின் பாடல்கள், நிரோஷா விராஜினியின் சமாதானம் தொடர்பான ''வெண்புறாவே....'' போன்ற பாடல்களே அனேகமாக ஒலிபரப்பப்பட்டு வந்துள்ளன என்பதும், யுத்த ஆதரவுப் பாடல்கள் நிறுத்தப்பட்டிருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது.

# 3வது ஈழப்போர்...

செயற்பட தம்மால் முடியுமென பிரெஞ்சு தலைவர் மிற்ரோன் அறிவித்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆயினும், இராணுவ உதவி தொடர்பாக இந்தநாடுகள் எவையும் எத்தகைய முடிவை தெரிவித்துள்ளன என்பது பற்றி எதுவும் தெரியவில்லை.

### சார்க் படைப்பிரிவு

இது இவ்வாறிருக்க தெற்காசியப் பிராந்தியத்துள் பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்டுவதற்காக பிரத்தியேகமான சார்க் நாடுகளின் படைப்பிரிவு ஒன்றை உருவாக்குவது பற்றி இம்முறை சார்க் மாநாட்டில் பேசப்படும் என்று தெரியவருகிறது. இவ்வாறான பிராந்தியப் படைகள் நடைமுறையில் அப்பிராந்தியத்துள் உள்ள சக்தி வாய்ந்த நாட்டின் கட்டுப்பாட்டிலேயே இயங்கும் என்பது தெரிந்ததே. நேட்டோ நாட்டுப்படையில் அமெரிக்காவின் தலைமைத்துவம் போலவே, சார்க் படைப்பிரிவில் இந்தியாவின் கை ஓங்கியிருக்கும் என்பதில் ஆச்சரியமில்லை.

### இந்தியப்படை நகர்வு


கடைசியாகக் கிடைத்த தகவல்களின்படி இந்தியப்படையினரில் சுமார் ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட துருப்புக்கள் தெற்கு நோக்கி நகர்ந்துகொண்டிருப்பதாக தெரியவருகிறது. ஆயினும் இத்துருப்புக்கள் இலங்கை ஜனாதிபதியின் வேண்டுகோளுக்கிணங்க இலங்கைக்கு அனுப்பப்படுவதற்காக நகர்த்தப்படுகின்றனவா என்பது குறித்து எத்தகைய ஊர்ஜிதமான செய்திகளும் கிடைக்கவில்லை.

இந்தியப்படை இலங்கையில் 1971ல் ஜே.வி.பி.யினரின் கிளர்ச்சியை அடக்க ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க அரசாங்கத்தால் தருவிக்கப்பட்டதும், பின்னர் 1987 இலங்கை இந்திய ஒப்பந்தத்தின்படி அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தனாவால் தருவிக்கப்பட்டதும் தெரிந்ததே. 1971 இல் இந்தியா 7போர் விமானங்களையும் விமான ஓட்டிகளையும் 153 கூர்க்காப் படைகளையும் வழங்கியிருந்தது. 1987ல் 1 லட்சம் இந்தியப் படைகள் தாங்கிகள், போர் விமானங்கள் சகிதம் வந்து இறங்கினர். 1971ல் 14000 பேரும், 1987-1989 இடைப்பகுதியில் 1000 'பேரும் (இது பாதுகாப்பு அமைச்சின் தகவல்) கொல்லப்பட்டதுடன், நூற்றுக்கணக்கான பெண்கள் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டதும், கோடிக்கணக்கான பெறுமதிமிக்க சொத்துக்கள் அழிக்கப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது.


''இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை முன்வைக்க அரசு தயங்கும் ஒவ்வொரு கணமும் இலங்கையின் எதிர்காலம் தவிர்க்க முடியாதபடி நெருக்கடிகட்குள்ளாகி வருகிறது'' என்று அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.



சபுதந்திரி



கிரம பியசோம



எட்வின் வீரசிங்க

**கடந்த 29ம் திகதி பலாலியில் இடம்பெற்ற விமானத்தின் மீதான தாக்குதலின் போது லேக் ஹவுஸ் பத்திரிகையைச் சேர்ந்த 'சிலுமின' இணை ஆசிரியர் கருணாரத்ன சபுதந்திரி, சிலுமின பிரதி செய்தி ஆசிரியர் கிரம பியசோம, மற்றும் அதன் புகைப்படப்பிடிப்பாளர் எட்வின் வீரசிங்க ஆகிய பத்திரிகையாளர்களும் பலியாகியுள்ளார்கள். வடக்கு கிழக்கு யுத்தத்தின் போது இதுவரை பல தமிழ் பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள் கொல்லப்பட்டிருந்த போதும் சிங்களப் பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டது இதுவே முதற்தடவையாகும். பத்திரிகையாளர்கள் என்ற முறையில், தகவல் சேகரிக்கச் சென்றவிடத்தில் பலியான இப்பத்திரிகையாளர்களின் குடும்பங்களுக்கு சரிநிகர் தனது அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கிறது.**

# விசேட அதிரடிப்படைக்கு நாலரைக் கோடி ரூபா!

கடந்த ஐ.தே.க. ஆட்சிக் காலத்தின் போது படுகொலை இராணுவமாகத் தனது திறமையை வெளிக்காட்டிய பொலிஸ் விசேட அதிரடிப்படைக்கும் (S.T.F.), தேசிய புலனாய்வுப் பணியகத்திற்கும் (N.I.B.) ''மனிதாபிமான'' பொ.ஜ.மு.அரசாங்கத்தின் கீழ் கோடிக்கணக்கான ரூபாய்கள் பணம் ஒதுக்கப்பட்டுள்ளதாகப் பாதுகாப்புப் பிரிவுத் தகவல்கள் மூலம் தெரியவருகிறது.

விசேட அதிரடிப்படைக்கும், தேசிய புலனாய்வுப் பணியகத்திற்கும் நவீன வீ.எச்.எஸ்., யூ.எச்.எப். உபகரணங்களை வாங்குவதற்காக 50 இலட்சம் ரூபாய்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. தேசிய புலனாய்வுத்துறையினருக்கு வீடுகள் சுவீகரித்தலுக்காக 10 இலட்சம் ரூபாய்களும் மேலதிகமாக வழங்கப்பட்டுள்ளது. ஏனைய நிர்வாகச் செலவுக்களுக்காக அவர்களுக்கு 25 இலட்சமும் விசேட அதிரடிப்படையினருக்கு பெருந்தொகைப் பணமான 4 1/2 கோடி ரூபாய்களும் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஒடுக்கி அழிக்கும் நிறுவனத்திற்காக இவ்வளவு பெருந்தொகைப் பணத்தை ஒதுக்கியிருப்பது தான் பொ.ஜ.ஐ.முவின் 'மனித முக' செயற்திட்டங்களா என்பதே இப்போதைய கேள்வி!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 3வது ஈழப்போர்



அது வரப்போகிறது என்பதற்கான சமிக்ஞைகள் தெளிவாகத் தெரிந்த பின்னும், அது வரக்கூடாது என்பதற்காகவே 'வராது வராது' என்று கூறிக்கொண்டிருந்த மக்கள் எதிர்பார்த்தபடியே அது வந்துவிட்டது.

ஆம், 19ம்திகதி அதிகாலை திருமலை துறைமுகத்தில் நடைபெற்ற கடற்படைப் படகுகள் மீதான தற்கொலைத் தாக்குதலுடன் மீண்டும் யுத்தம் ஆரம்பித்துவிட்டது.

''இது மூன்றாவது யுத்தம் அல்ல'' என்று ஜனாதிபதியும் ''நாம் சமாதானத்திற்காக எப்போதும் தயாராகவே இருக்கிறோம், அரசுதான் தயாராக இல்லை'' என்று புலிகளும் கூறிக்கொண்ட போதும், மக்களைப் பொறுத்தவரை யுத்தம் தொடங்கிவிட்டது. என்ன பெயரில் நடந்தாலும், அது அடையாள தாக்குதலோ, அளவு மட்டுப்படுத்தப்பட்ட தாக்குதலோ எப்படியாயினும் சரி யுத்தம் யுத்தம்தான். யுத்தத்தால் ஏற்படுவது அழிவுதான்.

இந்த யுத்தம் உருவாகும் என்பதற்கான நிலைமைகள் பேச்சுவார்த்தை தொடங்கிய ஆரம்பத்திலேயே இருந்தன. அரசு தரப்பினர் ஆரம்ப ஆர்வத்தை முதலாவது சுற்றுப் பேச்சுவார்த்தைக்குப் பின் காட்டவில்லை. புலிகளின் தலைவர் பிரபாகரன் சுட்டிக்காட்டுவது போலவே இழுத்தடிப்புக்களை மேற்கொள்ளுவதிலேயே அரசின் நாட்டம் இருந்தது. நடைமுறைப் பிரச்சினைகள் முதற்கட்டமாக பேசுவதாக முன்மொழிந்த போதும், அரசு அவற்றை நடைமுறைப்படுத்துவதில் தீவிரமாக இருக்கவில்லை.

அரசியல் தீர்வினைக் கூட - அது ஏற்கெனவே தயார் என்று பல தடவை அறிவித்த போதும் - வெளிப்படுத்தும் முயற்சியைக் கூட அரசு செய்யவில்லை. (இது பற்றிக் கேட்டால் மழுப்புகிறார் ஜனாதிபதி என்று இப்போது அவரது அரசாங்கத்திலேயுள்ள மற்றக் கட்சிகளே குற்றம் சாட்டுகின்றன)

இவற்றிற்கு, மேலும் பலமூட்டுவது போல புலிகளை அரசியல் ரீதியாக அம்பலப்படுத்துவதிலும், யுத்தத்திற்கும் நாம் தயார் என்று அறிவிப்பதிலுமே அரசுத் தலைவர்களின் கவனங்கள் குவிக்கப்பட்டிருந்தன. இதைத் தவிர புலிகள் கூறுவது போலவே, அரசு முடிவுகளை எடுக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், இராணுவத்தின் அங்கீகாரத்தை பெற்றுக்கொண்டே முடிவெடுக்கும் ஒரு நிலையே நிலவியது.

இவையெல்லாவற்றிற்கும் மேலாக சமாதானப் பேச்சுக்கள் தொடக்கத்திலிருந்தே பரஸ்பர சந்தேகத்துடன் தான் நடைபெற்றன. புலிகள் முன்வைக்கும் கோரிக்கைகளை வெறும் புலிகளது இராணுவப் பலப்படுத்தலுக்கான கோரிக்கைகளாக அரசு பார்த்ததே அன்றி, அவற்றை கொடுப்பதன் மூலம் தமிழ் மக்களை வென்றெடுக்கலாம், சமாதான முயற்சியை மேலும் வெற்றியை நோக்கி தள்ளலாம் என்று நினைக்கவில்லை. (உதாரணம், ''சீமெந்து அனுப்பினால் பங்கர் கட்டுகிறார்கள்'')


எனவே யுத்தம் தவிர்க்க முடியாத ஒன்றாக வெடிக்கும் என்பது முதலிலேயே தெளிவாகத் தெரிந்தது.

இந்தப் பத்தியில் இவைபற்றி ஏற்கெனவே பலதடவை எழுதியாயிற்று.

இப்பொழுது பலாலியில் நடந்த விமானத் தாக்குதலின் பின் இந்த யுத்த நிலையிலும் ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டுள்ளது.



அதாவது, இவ்வளவு காலமும் அரசின் தரைப்படை, கடற்படை நகர்வுகளுக்கு பாதுகாப்பளித்து வந்த விமானப்படை இனி தொடர்ந்து அதை செய்ய முடியுமா என்பதே அதுவாகும். புலிகளிடம் விமான எதிர்ப்பு ஏவுகணைகள் இருப்பதை உறுதிப்படுத்திய இந்த விமானத் தாக்குதல்கள் மூன்றாவது யுத்தத்தை அரசு நடாத்த விரும்பினாலும் அது மிகவும் கசப்பான அனுபவங்களையே அதற்கு தரும் என்பதனை எதிர்வு கூறுகின்றன.



இத்தாக்குதல் மூலம் புலிகள் அரசுக்கு தெளிவான ஒரு செய்தியை அனுப்பியுள்ளார்கள் என்று கொள்ளலாம். அதாவது, யுத்தத்தை நடாத்துவதில் உள்ள பலவீனம் காரணமாக நாம் சமாதானப் பேச்சுக்கு வரவில்லை. நீங்கள் தொடர்ந்து யுத்தம் செய்ய விரும்பினால் அதற்கும் நாம் தயாராகவே இருக்கிறோம். கடல், விமானப்படைகளுக்கும் மூன்றாவது ஈழப்போர் நடந்தால் அது நெருக்கடிமிக்கதாகவே இருக்கும் என்பதே அந்தச் செய்தியின் சாரமாகும். கூடவே, அமெரிக்காவில் ஒகோஹோமா நகரில் நடந்த குண்டு வெடிப்பு சம்பவத்திற்கு அனுதாபம் தெரிவித்து கொழும்பிலுள்ள அமெரிக்க தூதுவருக்கு அனுப்பிய அனுதாப கடிதத்தில் பிரபாகரன் எழுதியுள்ள விடயமும் இன்னொரு முக்கியமான செய்தியை கூறுகிறது. அக்கடிதத்தின் இரண்டாவது பந்தி இதுதான்.

''இந்த துயர் மிகுந்த நேரத்தில் இது போன்ற ஒரு நிகழ்வு ஒரு முக்கியமான பாடத்தை ஞாபகப்படுத்துவதாக நாம் கொள்ளலாம்; ஒரு நாடு எவ்வளவுதான் பலமானதாகவும் உயர்வானதாகவும் இருந்தாலும் கூட பலவீனமான தேசங்களையோ மக்களையோ, அவர்களது உரிமைகளை நசுக்குவதன் மூலமும், அவர்களது விருப்பங்களை உதாசீனம் செய்வதன் மூலமும் ஒதுக்கிவிட முடியாது. இவ்வாறு மக்கள் ஒடுக்கப்படும் போதெல்லாம், எத்தகைய நம்பிக்கையும் அற்றநிலைக்கு அவர்கள் தள்ளப்படும் போதெல்லாம் இவ்வாறான வன்முறையை நோக்கி அவர்கள் தள்ளப்படுகிறார்கள்''. இது புலிகள் தமது கடந்தகால வரலாற்றை தாம் எப்படி உணர்ந்துள்ளோம் என்பதை அரசுக்கு குறிப்பாலுணர்த்துவதாகவும் உள்ளது.

இந்த நிலையில் அடுத்ததாக என்ன செய்யலாம் என சிந்தித்தால் அரசு முன் உள்ள வாய்ப்புக்கள் மூன்று:

1. புலிகளுடன் அவர்களது கோரிக்கைகளை விட்டுக் கொடுத்து பேசப் போவது

2. யுத்தத்தை மேலும் தீவிரமாக நடாத்துவது

3. பிற நாடொன்றின் உதவியை நாடிப்போவது.



இந்த மூன்றில் முதலாவதை செய்வதில் அரசின் உயர்மட்டத்தில் உள்ளவர்கள் முதல் முப்படை அதிகாரிகள் உட்பட பலருக்கு உடன்பாடு கிடையாது என்று தெரியவருகிறது. இதில் ஆச்சரியப்பட ஒன்றும் இல்லை. ஏனென்றால், புலிகளிடம் சரணடைந்து விட்டது போன்ற ஒரு நிலையை இது ஏற்படுத்திவிடும் என்று அவர்கள் கருதுகிறார்கள். இரண்டாவது வாய்ப்பு, நடைமுறையில் சாத்தியமற்றதாக, அல்லது வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த முடியாததாக உள்ளது. ஏனென்றால் தீவிரமான யுத்தத்தை கடற்படையோ விமானப்படையோ செய்ய முடியாது. தரைப்படை இராணுவம் தான் நடாத்த வேண்டும். ஆனால் இவையிரண்டினதும் பக்கபலம் இல்லாமல் யுத்தத்தை வெற்றிகரமாக இராணுவத்தால் செய்ய முடியாது. எனவே இறுதியாக உள்ள வாய்ப்பு இன்னொரு வெளிநாட்டிடம் உதவி கோருவதே

அந்த உதவி பேச்சுவார்த்தையா யுத்தமா என்பது குறித்து அரசு இன்னமும் தீர்மானம் எடுக்கவில்லை. பல உயர்மட்ட படையதிகாரிகளது அபிப்பிராயத்தின்படி இந்தியாவிடம் படையுதவி கேட்பது நல்லது என்ற அபிப்பிராயம் நிலவுவதாக தெரியவருகிறது.

இந்தியப்படை யுத்தத்திற்கு வர முடியுமே தவிர சமாதானப் பேச்சுக்கு வரமுடியாது என்பது வெளிப்படை. ஏனென்றால் புலிகள் இதை ஒப்புக் கொள்ளப் போவதில்லை. தவிரவும் ராஜீவ் வழக்கு நடந்து கொண்டிருக்கையில் அது சாத்தியமுமில்லை. எனவே இந்திய அரசு மட்டத்திலான ஒரு சமாதான முயற்சி சாத்தியமில்லாததால் யுத்தத்திற்கு இலங்கை ஜனாதிபதியின் கோரிக்கையின் பேரில் இந்தியா உதவி செய்ய முன்வரலாம். அப்படி முன்வரும் பட்சத்தில் இந்தியா பின்வரும் முடிவுகளை மேற்கொள்ளுவது தவிர்க்க முடியாதது.

ஏனென்றால் இந்தியப்படை இங்கு தங்கியிருந்த கால கசப்பான அனுபவங்களை இந்திய அரசு மறந்திருக்க முடியாது)

1. பிரபாகரனை பிடித்து இந்தியாவிற்கு ராஜீவ் காந்தி கொலை விசாரணைக்காக கொண்டு செல்ல இலங்கை அரசு ஒப்புக்கொள்ள வேண்டும்.

2. ஆயுதங்களை, மற்றும் யுத்த தளபாடங்கள் அதிகாரிகள் மட்டத்திலான உதவிகளை மட்டுமே இந்தியா வழங்குதல் முடியும்.

3. இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை - விரும்பினால் மேலும் சில திருத்தங்களுடன் திரும்பவும் நடைமுறைப்படுத்தல்.

இந்த நிபந்தனைகளுக்கு இலங்கை அரசு ஒப்புக்கொள்ளுமானால், இந்தியப்படை இலங்கைக்கு வர ஒப்புக்கொள்ளக்கூடும். ஆனால் இது திரும்பவும் ஒரு பயங்கரமான யுத்த நிலைமையையே உருவாக்கும் என்பதில் சந்தேகமில்லை.

ஆக, சமாதானத்தின் பேரால் ஆட்சியமைத்த அரசு திரும்பவும் யுத்தத்தில் காலூன்றி நிற்கும் நிலைக்கே திரும்பி விடுகிறது என்ற பெயருக்கு முகம் கொடுக்க அரசு தயாராக வேண்டும். இதை இங்குள்ள பிற கட்சிகள் எவ்வாறு வரவேற்கும் என்பது கேள்விக்குறியே.

யுத்தத்தை எதிர்த்து, சமாதானத்தை வரவேற்றே 61% மக்கள் வாக்களித்தார்கள் என்றால், யுத்தத்தை நடாத்த விரும்பும் நிலைக்கு அரசாங்கம் தள்ளப்பட்ட பின்னும் அது பதவியில் இருப்பது நியாயமா என்ற கேள்வி எழவே செய்யும்.

பொ.ஜ.மு. அரசாங்கம், தனது அரசியல் தீர்வையும் முன்வைக்காமல் தேர்தல் கால வாக்குறுதிகளையும் கைவிட்டுவிட்டு ஆட்சியில் இருப்பது என்பது எந்த நிமிடமும் ஆட்சி கவிழலாம் என்ற நிலையையே தோற்றுவிக்கும். அதுவும் அந்நிய நாட்டு படையுதவி பெற்ற பின் நிலைமை இன்னமும் மோசமாகி விடும்.

இந்த நெருக்கடியான கட்டத்தில் உறுதியான முடிவெடுக்கும் ஆற்றல் - ஜனாதிபதி என்ற முறையில் சந்திரிகாவுக்கு அவசியம்.

நாட்டின் எதிர்கால நலனின் பேரால், ம்க்களின் உயிரின் பேரால் அவர் உறுதியான முடிவை சமாதானத்தை நோக்கி செல்வதென்ற முடிவை, எடுக்கவேண்டும்.

கூட இருந்து அவருக்கு புத்திகூறுபவர்களில் பலர் போர்களை நடத்தியவர்களோ, அவற்றை அனுபவித்தவர்களோ அல்ல.

நாட்டின் எதிர்காலம் பற்றியும் அவ்வளவு அக்கறை அவர்களிடம் இருக்கிறதா என்பது கேள்விக்குறியே.

அரசு தனது தற்காலிக வாழ்வை மட்டும் பார்க்காமல், நீண்ட கால மக்களின் நலனை கருதுமானால் இருக்கின்ற ஒரே வழி, சமாதானத்தை உறுதியாகக் கடைப்பிடித்தல் - புலிகளுடன் மீளப்பேச்சை தொடர்தல் அரசியல் தீர்வை முன்வைத்தல், அதை நடைமுறைப்படுத்த அனைத்து கட்சிகளுடனும் சேர்ந்து முயல்தல் - அவ்வளவு தான்.

**நாசமறுப்பான்**

“இந்த துயர் மிகுந்த நேரத்தில் இதுபோன்ற ஒரு நிகழ்வு ஒரு முக்கியமான பாடத்தை ஞாபகப்படுத்துவதாக நாம் கொள்ளலாம்; ஒரு நாடு எவ்வளவுதான் பலமானதாகவும் உயர்வானதாகவும் இருந்தாலும் கூட பலவீனமான தேசங்களையோ மக்களையோ, அவர்களது உரிமைகளை நசுக்குவதன் மூலமும், அவர்களது விருப்பங்களை உதாசீனம் செய்வதன் மூலமும் ஒதுக்கிவிட முடியாது. இவ்வாறு மக்கள் ஒடுக்கப்படும் போதெல்லாம், எத்தகைய நம்பிக்கையும் அற்றநிலைக்கு அவர்கள் தள்ளப்படும் போதெல்லாம் இவ்வாறான வன்முறையை நோக்கி அவர்கள் தள்ளப்படுகிறார்கள்''

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# உத்தேச புதிய யாப்பு:

# முஸ்லீம்களுக்கு எதையாவது தருமா?

**ஆர்.எம்.இம்தியாஸ்**

சட்டங்களுக்கெல்லாம் தாய் அரசியல் அமைப்புச் சட்டமாகும். அரசியல் அமைப்பில் உறுதிப்படுத்தப்படுகின்ற உள்ளார்ந்த விடயங்களே நாட்டின் தலைவிதியைத் தீர்மானிக்கின்றன. இலங்கையின் கடந்த காலத்தின் அரசியல் அமைப்புக்கள் மிகப்பொதுவாக சிறுபான்மை மக்களின் விசேடமாக இலங்கை முஸ்லீம்களின் அபிலாசைகளுக்கு எதிரான சுருக்குக் கயிறாகவே காணப்பட்டு வந்துள்ளன. இரண்டாம் குடியரசு யாப்பு இவை எல்லாவற்றிற்கும் ஒரு சிகரமாகவும் சிங்களப் பேரினவாதத்தின் சட்டபூர்வ நீதிப்புத்தகமாகவும் திகழ்ந்தது. இந்த கசப்பான நிலைமைகளை எல்லாம் கடந்து புதிய அரசாங்கம் முஸ்லிம்களது அபிலாசைகளுக்கு சாதகமான சரத்துக்களை முன்னெடுக்கும் என்று பொதுவாக முஸ்லீம்களாலும் விசேடமாக முஸ்லீம் காங்கிரஸினாலும் எதிர்பார்க்கப்பட்ட போதிலும் உத்தேச புதிய யாப்பின் இரண்டாம் நகல்வரை அந்த அழகிய கனவு ஒரு தொடர் கனவாகவே காணப்படுகின்றது.

புதிய அரசாங்கம் சிங்களப் பேரினவாதத்தில் இருந்து தன்னை நிறுவன ரீதியாக மாற்றியுள்ளது. முஸ்லீம்களின் பிரச்சினைகளை சந்திரிகா போன்று வேறுயாரும் உணரவில்லை என்று அமைச்சர் அஷ்ரஃப் வாய்கிழியக் கத்தினாலும் உத்தேச யாப்பின் சரத்துக்கள் அதனை திட்டவட்டமாகப் பொய்ப்பிக்கின்றன. சிங்களப் பேரினவாதத்தின் சரியான வடிவமாகவே இலங்கைத் தேசியக் கொடி கணிக்கப்படுகிறது. இவ்வாறான நிலையினை புதிய அரசாங்கம் மாற்றியமைக்கும் என்று பரவலாக நம்பப்பட்டாலும், நிகழ்கால அரசியல் பின்புலம் அதற்கான சாத்தியத்தை வெகுவாகக் குறைத்துள்ளது. அரசாங்கத்தில், அந்தரங்கமாக இருந்த இலங்கைத் தேசியக்கொடிச் சீர்திருத்தம் தொடர்பாக கேள்வியுற்ற மகாநாயக்க குழுவினர் இது தொடர்பாக அரசியல் அமைப்பு விவகார அமைச்சருக்கு கடுமையான ஆட்சேபனை தெரிவித்துள்ளதாக தெரியவருகிறது. இலங்கையின் அரசியலில் பௌத்தமதத்தை நிறுவன ரீதியாக்க முன்னின்ற பௌத்த மகாபீடாதிபதிகளது காருண்யமிக்க பிரயத்தனங்களே மேற்போன்ற ஆட்சேபனைக்குக் பின்னணிக் காரணங்களாகும். இதனை மீறும் அரசியல் ஆளுமை புதிய அரசாங்கத்துக்கு இல்லை என்று கருதப்பட்டாலும் முஸ்லீம் காங்கிரஸ் போன்ற வங்குரோத்து சிறுபான்மை அரசியல் கட்சிகள் புதிய அரசாங்கத்தில் நம்பிக்கையை ஏற்படுத்தின. இப்போது இந்த நம்பிக்கைகள் உதிர ஆரம்பித்துள்ளன. தேசியக்கொடியின் 'பழையபல்லவி' நிலை எவ்வாறு கடந்த காலத்தில் முஸ்லீம்களுக்கு சாதகமாக படவில்லையோ அவ்வாறே எதிர்காலத்திலும் இருப்புக் கொள்ளலாம்.

உத்தேச புதிய யாப்பின் இன்னொரு முக்கிய அம்சம் பௌத்தமதம் தொடர்பானதாகும். பௌத்தமதத்தைப் திரும்பவும் அரசமதமாக அங்கீகரித்துள்ள 'புதிய மனித முக' அரசாங்கம் அதனைப் பேணிப்பாதுகாப்பது அரசாங்கத்தின் தலையாயக் கடமையென்று சிறுபான்மை கட்சிகளது ஆதரவினை அவ்வாறே வைத்துக்கொண்டு வெற்றிகரமாய் தெளிவுபடுத்தியுள்ளது. அதேவேளையில் புதிய அரசாங்கம் ஐ.தே.கட்சி காலத்தில் முஸ்லீம் விவகார அமைச்சினையும் ஒழித்துக் கட்டியுள்ளது. சிறுபான்மை மக்களது எதிர்ப்பார்ப்புக்கு உட்பட்ட ஒரு அமைச்சினை இல்லாதொழிக்கும் ஆர்வம் மறுபுறமாக பௌத்த மதத்திற்கு அரச அங்கீகாரத்தை மீண்டும் ஒருமுறை உத்தரவாதப்படுத்தியுள்ளமையானது, முஸ்லீம்களது நலனில் பெரும் பின்னடைவாகும். அதேவேளை புத்தசாசன அமைச்சினை மேலும் உறுதிப்படுத்தி அரசியல் யாப்பிற்கு மேலதிக பாதுகாப்பினையும் புதிய அரசாங்கம் வழங்கவுள்ளது என்பது முஸ்லீம்களது எதிர்கால அரசியல் அபிலாசைகளுக்கு எதிரான பேரினவாத சதியாகவே கோடிகாட்டப்படுகிறது.

புதிய யாப்பு உருவாக்கம் நம்பிக்கையுடன் எதிர்பார்க்கப்பட்டது. முஸ்லீம்களது கணிசமானளவு வாக்குகள் பொ.ஜ.மு.வின் வெற்றிக்கு பலமான தாக்கத்தை விளைவித்துள்ளது இதற்கு மூலகாரணம். ஆயின் நிலைமைகள் சாதகமாக பரிமாணம் பெறவில்லை. சந்திரிகாவின் அரசாங்கம் சிங்களப் பேரினவாதத்தை மீறும் ஆற்றலை, ஆளுமையினை தன்னளவில் உட்படுத்தியிருக்கவில்லை. ஆதலால் புதிய யாப்பு முஸ்லீம்களுக்கு ''எல்லாவற்றையும்'' கொண்டுவரும் என்பதற்குப் பதிலாக ஒன்றுமே இல்லாத நிலையையே மிஞ்ச வைக்கும் இது.

மொழி விடயத்தில் நோக்குமிடத்து புதிய யாப்பு தமிழினையும் சிங்களத்தினையும் அரசமொழியாக மீண்டும் உறுதிப்படுத்தியமையானது முஸ்லீம்களுக்கு திருப்தியைக் கொடுத்தாலும் 19 (2) வது பிரிவு ஏற்கெனவே காணப்படுகின்ற ஏற்பாடுகள் நிர்வாக அளவில் அவ்வாறே பேணப்படும் என்ற அம்சமானது முஸ்லீம்களது நலனில் பெரும்பின்னடைவினை ஏற்படுத்தும்.

இவ்வாறான ஏற்பாடுகள் கிழக்கு மாகாண முஸ்லீம்களது நிர்வாக நலனையே மோசமாகப் பாதிக்கும். முஸ்லீம்கள் பெரும்பான்மையாக வாழும் ஒரே ஒரு நிர்வாக மாவட்டம் அம்பாறையாகும். இங்கு முஸ்லீம்கள் சராசரியாக 41% வாழ்கிறார்கள். ஆயினும் இங்கு நிர்வாக நடவடிக்கையானது தனிச்சிங்களத்தில் (அம்பாறையில்) நடக்கின்றது. இதேநிலைமையினையே நிகழும் அரசாங்கமும் தொடரவுள்ளது என்பது ஏமாற்றமான பதிலையே வழங்கும். இவ்வாறான ஒரு நிலையே திருமலை மாவட்டத்திலும் நடைமுறையில் உள்ளதும் குறிப்பிடத்தக்கது. இவ்வம்சங்களில் மூல அடிப்படையே சிங்களப் பேரினவாத அணுகுமுறையாகும். முஸ்லீம்கள் பெரும்பான்மையாக வாழும் மாவட்டத்தில் தமிழ் மொழி நிர்வாக மொழியாக அமுலாகவேண்டுமேயன்றி சிங்களத்தை நிர்வாகத்துக்காய் அரசியல் யாப்பு வசதிகள் செய்து கொடுப்பது தெளிவான மனிதவுரிமை மீறலாகும்.

சிங்களப் பேரினவாதத்தின் அபிலாசையான ஒற்றையாட்சி முறையே புதிய யாப்பிலும் சிபார்சு செய்யப்பட்டுள்ளது. மத்தியில் இருந்து அதிகாரங்களைப் பகிர்வதில் காணப்படும் விருப்பமின்மையும் அநாவசியமான சந்தேகமும் மீண்டும் ஒருமுறை எடுத்தாளப்பட்டுள்ளது. இது ஒருவகை ஜனநாயக மீறலாகும். இலங்கையில் மத்திய அதிகாரக்குவிப்பு சிங்கள மக்களுக்கு சார்பானதாகவே ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் அரசியல் அதிகாரத்தில் சமமாகப் பங்கு கொள்ள விரும்பும் சிறுபான்மை இனங்கள் மோசமாக அதிருப்தி அடைகின்றன. இதன் விளைவே நாம் இன்று கஷ்டத்துடன் அனுபவிக்கும் அரசியல் சூழலாகும். இவ்வாறான சூழல் புதிய யாப்பின் கீழ் மாற்றமடையும் என நம்பப்பட்டாலும் சிங்களப் பேரினவாத அணுகுமுறையும், அப்பேரினவாதிகளது சிறுபான்மை இனங்கள் தொடர்பான தர்க்க பூர்வமற்ற சுயநம்பிக்கைகளும் ஒற்றையாட்சி முறையினை சிபார்சுபடுத்த, பாதிப்புச் செலுத்திஉள்ளது. **முஸ்லீம்களைப் பொறுத்தவரையில் இது அவர்களது நிகழ்கால அரசியல் அபிலாசைகளுக்கு எதிரான ஒரு அரசியல் சிலுவையாகவே சித்திரிக்கப்படுகின்றது.**

இலங்கை இனப்பிரச்சினைக்கு ஒரு கௌரவ பூர்வமான தீர்வுக்கான அடிப்படைத் தேவைகளை முழுமையான சமஷ்டியே திருப்திப்படுத்தலாம். இவ்வாறான சூழலில் ஒற்றையாட்சி எனும் அரசியல் அலகு பரிசீலனைக்குரியதாக அமைதல் அவசியம். அத்துடன் முஸ்லீம்களது அரசியல் உரிமைகளை பாதுகாக்கும் முஸ்லீம் நிர்வாக அலகும் சாத்தியமாகுதல் அடிப்படைத் தேவைகளாகும். முஸ்லீம்களைப் பொறுத்தவரையில் இருபக்க அச்சுறுத்தல் அவர்களுக்கு நிரூபணமாகியுள்ளது.

சிங்களப் பேரினவாதம் முஸ்லீம் தலைவர்கள் என்று நம்பப்பட்ட தலைவர்களையெல்லாம் பக்கத்தில் வைத்துக்கொண்டு அம்பாறை மாவட்டத்தில் கணிசமானளவு சிங்கள மக்களை குடியேற்றியுள்ளது. முஸ்லீம்களது காணிகளும் அபகரிக்கப்பட்டுள்ளன. இவ்வாறான அரசியல் அநீதிகளை முஸ்லீம் காங்கிரஸ் தலைமையும் தனது அரசியல் வங்குரோத்தால் தட்டிக்கேட்கத் தவறியுள்ளது. மறுபுறமாய் சிங்களப் பேரினவாதத்திற்கு எதிராய் போராடுவதாகச் சொல்லிக் கொண்டு தமிழ்ப்புலிகள் யாழ்ப்பாணத்தில் இருந்து இரவோடிரவாக முஸ்லீம்களை விரட்டியடித்தனர். முஸ்லீம்களை மஸ்ஜிதுகளில் வைத்து ஈவிரக்கமின்றிப் படுகொலை செய்து தமது அடிப்படைப்பண்பான பாசிசத்தை பறைசாற்றினர் இவ்விரண்டு தீவிர எதிர்ப்பு நடவடிக்கைகள் எதை உணர்த்துகின்றன என்றால் முஸ்லீம்கள் தமது பாதுகாப்பை தாமே உறுதிப்படுத்த வேண்டும் என்பதனையும், அவர்களுக்கான அரசியல் நிர்வாக அலகின் அவசியச் சூழலையும் ஆகும். ஆயின் புதிய யாப்பில் இது பற்றி எந்தவொரு நம்பத்தகுந்த வார்த்தைகளும் காணப்படவில்லை. இலங்கையில் மீண்டும் ஒற்றையாட்சியினை அக்குவேறாக ஆணிவேறாக அமுல் நடத்த முனையும் நடவடிக்கைகளின் மறுபுறமாய் முஸ்லீம்களது அடிப்படை அரசியல் கோரிக்கைகள் மூர்க்கத்தனமாய் முடமாக்கப்படுவதனையே மிஞ்சவைக்கும்.

புதிய யாப்பின் தேர்தல்முறை முன்னைய முறையினையையும் இன்றைய முறையினையும் இணைந்த கலப்புமுறைத்தன்மை கொண்ட ஜேர்மனி மாதிரியாகும். இதன்படி விகிதாரசாரமுறை மாவட்ட ரீதியில் 77 உறுப்பினர்களும் தொகுதி வாரியாக 168 உறுப்பினர்களும் பாராளுமன்றத்துக்குத் தெரிவாவர். தேர்தல்முறை, பிரதிநிதித்துவத்தை ஒழுங்குபடுத்தும் ஒரு அரசியல் பாதையாகும். அரசியல் பாதையில் ஏற்படும் இடர்கள் பிரதிநிதித்துவத்தை பாதிப்படையச் செய்வதுடன் சமூகத்தின் அபிலாசைகளையும் நிராகரிக்கும். இதனை முஸ்லீம்களின் இடத்தில் நோக்குமிடத்து இம்முறை திருப்திகரமாய்க் காணப்படவில்லை என்று திடமாய் அபிப்பிராயப்பட வேண்டியுள்ளது.



புதிய முறைப்பிரகாரம் வடகிழக்கில் பிரதிநிதித்துவம் நிகழும் முறையில் இருந்து குறைவான பிரதிநிதித்துவத்தையே தக்கவைக்கும். புதிய முறைப்படி வடக்கிலிருந்து எநதவகையிலும் பிரதிநிதித்துவம் சாத்தியமாகா சூழல் ஏற்படும். இப்போது வடக்கிலிருந்து பெறப்பட்ட பிரதிநிதித்துவம் தமிழர்களின் இடம்பெயர்ந்த, அல்லது வாக்களிக்காத சூழ்நிலை காரணமாக பெறப்பட்ட பிச்சையாகவே விளங்குகிறது. ஆயின் ''நிலைமைகள் வழமைக்குத் திரும்பிவிடும்'' என்ற நிலையில் நோக்கின் வடக்கு முஸ்லீம்களால் தமக்கான பிரதிநிதித்துவத்தை உத்தரவாதப்படுத்த முடியாத சூழல் ஏற்படும். மாறாக அம்பாறை மாவட்டத்தில் மூன்று பிரதிநிதிகளும், மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து ஒரு பிரதிநிதியும், திருமலை மாவட்டத்தில் இருந்து ஒரு பிரதிநிதியும் தொகுதி ரீதியான முறையில் தெரிவாகும் சாத்தியமே உள்ளது. அதேவேளை, வடகிழக்கு அல்லாத பகுதிகளின் நிலைமையினை நோக்குமிடத்து நிகழும் பிரதிநிதித்துவத்தில் இருந்து குறைவான பிரதிநிதித்துவமே சாத்தியமாகும். அத்துடன் போனஸ்முறை புதிய முறையிலிருந்து அகற்றப்படுவதனால் முஸ்லீம் பிரதிநிதித்துவம் பாதிப்படைவதுடன் தனது பேரம் பேசும் ஆற்றலை அல்லது தீர்மானிக்கும் தளத்தினை இழக்கும் நிலை ஏற்படுகிறது. புதிய யாப்பின் இன்னொரு அமசம் மீண்டும் பாராளுமன்ற முறைக்குச் செல்வதற்கான ஏற்பாடுகளாகும். ஜனாதிபதிமுறை அடிப்படையில் அதன் போக்கில் சர்வாதிகாரத்தை பூரணமாக்கியுள்ளது. **குறைவான அரசியல் கலாசாரமுடைய மக்கள் மத்தியில் நிறுவன ரீதியான அரசியல் ஏற்பாடுகள் காணப்படாத சூழலில் சர்வாதிகாரம் இலகுவில் வெற்றிபெறும். ஆயின் பாராளுமன்ற முறையில் ஜனநாயகம் பூத்துக்குலுங்கும் என்பதற்கு எந்தவொரு ஆதாரத்தையும் இலங்கை அரசியலில் இருந்து கண்டுபிடிக்க முடியாது.** ஜனாதிபதிமுறை எவ்வாறுதான் சர்வாதிகாரமாகக் காணப்பட்டாலும் இயல்பான மனிதநேசம் கொண்ட சிங்களப் பேரினவாதத்துக்கு அப்பாலான ஒரு பிரதிநிதி இப்பதவியினை அடைவதன் மூலமாக எதிர்முர்ண் நன்மைகளை எதிர்பார்க்கலாம். இவ்வாறான சூழலுக்கு அதன் தெரிவுத்தன்மை, வாய்ப்பை ஏற்படுத்துகிறது. ஜனாதிபதி தெரிவு என்பது முஸ்லீம்களது வாக்குகளிலும் கணிசமானளவு தங்கியுள்ளது. இங்கு முஸ்லீம்களது வாக்குகள் தீர்மானிக்கும் வாக்குகளாகவே காணப்படுகின்றது ஆயின் பாராளுமன்ற அதிகாரத்துக்கு இது சாத்தியமில்லாது செல்லுகின்றது. இன்னொரு புறமாக முஸ்லீம்களுக்கான நிர்வாக அதிகாரங்கள் பலமான முறையில் பகிரப்பட்ட பிறகு ஜனாதிபதிமுறை ஒழிப்பினை சாத்தியமாக்குவது இப்பாதிப்பை பலவீனமடையச் செய்யும். புதிய யாப்பின் ஏற்பாடுகளின் பிரகாரம் அரசியல் அமைப்புக் கவுன்சில் அமைக்கப்படவுள்ளது. இதில் முஸ்லீம்களின் பிரதிநிதித்துவம் பற்றி எந்த ஏற்பாடும் இல்லை. அத்துடன் முஸ்லீம்களுக்கான விசேட ஏற்பாடுகளும் புதிய யாப்பில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை என்பதனையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

புதிய யாப்பு உருவாக்கம் நம்பிக்கையுடன் எதிர்பார்க்கப்பட்டது. முஸ்லீம்களது கணிசமானளவு வாக்குகள் பொ.ஜ.மு.வின் வெற்றிக்கு பலமான தாக்கத்தை விளைவித்துள்ளது இதற்கு மூலகாரணம். ஆயின் நிலைமைகள் சாதகமாக பரிமாணம் பெறவில்லை. சந்திரிகாவின் அரசாங்கம் சிங்களப் பேரினவாதத்தை மீறும் ஆற்றலை, ஆளுமையினை தன்னளவில் உட்படுத்தியிருக்கவில்லை. ஆதலால் புதிய யாப்பு முஸ்லீம்களுக்கு ''எல்லாவற்றையும்'' கொண்டுவரும் என்பதற்குப் பதிலாக ஒன்றுமே இல்லாத நிலையையே மிஞ்ச வைக்கும் இது.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# முஸ்லீம் மக்களும் தமிழ் மக்களும்:

## தமிழ் மக்களே தலைவர்களே உங்கள் பதில் என்ன?



ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் அரசியல் அமைப்பு சீர்திருத்தம் தொடர்பாக தனது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தியுள்ளது. ''இணைந்த வடகிழக்கு மாகாணத்துக்குள் முஸ்லீம்களுக்கு என்று தனியான அலகு ஒன்று அம்பாறை மாவட்டத்தில் முஸ்லீம்கள் பெரும்பான்மையாக வாழும் கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில் பிரதேசங்களை அடிப்படையாக கொண்டு அமைய வேண்டும்'' என்று சீர்திருத்தம் தொடர்பாக ஆராய இருக்கும் பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் முன் வைக்கத் தீர்மானித்திருப்பதாக முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் எம்.எச்.எம். அஷ்ரஃப் தெரிவித்திருக்கிறார் மேலும் இதுவே அரசியல் தீர்வு தொடர்பான முஸ்லீம் காங்கிரஸின் நிலைப்பாடாகும் என்பதையும் அவர் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

நன்றி. அஷரஃப் அவர்களே! நன்றி எம்.ஐ.எம்.முகைதீன் அவர்களே நன்றி. ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் அமைப்பாளர்களே. நன்றி கடந்த காலங்களில் வடகிழக்கு இணைப்பு அடிப்படையில் முஸ்லீம் மக்களது உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும் என்று குரல் கொடுத்த சகல தரப்பு முஸ்லீம் தலைவர்களே அறிஞர்களே தொண்டர்களே!

உங்களது இத்தகைய தீர்மானத்தின் மூலம் ஐம்பது வருட தமிழ் மக்களது உரிமை போராட்டம் தொடர்பாக இருந்த ஒரு பெரும் தடைக்கல்லை நீங்கள் பெயர்த்தெறிந்திருக்கிறீர்கள். மீண்டும் தமிழர் முஸ்லீம் நல்லுறவுக்கான ஒரு வாய்ப்பை உருவாக்கித் தந்திருக்கிறீர்கள்.

தமிழ் முஸ்லீம் மக்களை பிரித்தாளுவதன் மூலம் அரசியல் தீர்வை இழுத்தடிக்கலாம் என்று கனவு கண்ட சக்திகளுக்கு உங்களது நிலைப்பாடு மரண அடி கொடுத்திருக்கிறது. இதற்காக வரலாறு முழுவதும் தமிழ் மக்கள் முஸ்லீம் மக்களுக்கு கடமைப்பட்டிருக்கிறார்கள்.

கடந்த கால வரலாற்றில் தமிழ் முஸ்லீம் மக்களது உறவுக்காக உண்மையுடன் உழைத்த தமிழர்களுள் முதன்மையானவர் அமரர். கு. வன்னியசிங்கம் (தலைவர் தமிழரசுக் கட்சி) ஆவார். தமிழரசுக்கட்சிக்குள் நிலவிய யாழ்ப்பாண மையவாதத்துக்கும், முஸ்லீம் விரோத பேரினவாதப் போக்கிற்கும் எதிராகத் தொடர்ந்து போராடியவர் அவர். அவருடைய கனவு இணைந்த வடகிழக்கு மாகாண சமஷ்டி அமைப்பும், அம்பாறை மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்ட முஸ்லீம் சுயாட்சிப் பிரதேசமும் உருவாக வேண்டும் என்பதாகும். இத்தகைய மனிதர்கள் தமிழர் மத்தியில் எப்போதும் இருந்திருக்கிறார்கள்.

வடபகுதி முஸ்லீம் மக்களுக்கு தவறிழைக்கப்பட்டுள்ளதாக விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர்கள் ஒத்துக்கொண்ட போது பல்வேறு எதிர்பார்ப்புக்கள் ஏற்பட்டன. வடபகுதி முஸ்லீம் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு பிராயசித்தம் கிட்டும் என்ற எமது எதிர்பார்ப்புகள் கானல் நீராகி விடுமா என்ற அச்சம் ஏற்படுகிறது. தொடர்ந்த செயற்பாடுகள் இன்மை ஒரு புறத்திலும், மீண்டும் யுத்தம் வெடித்துள்ளது மறுபுறத்திலும் நம்மை அச்சுறுத்துகிறது.

வடபகுதி முஸ்லீம்கள் மட்டும் இன்னமும் தமிழர் விரோதப் போக்கு சிறிதும் இன்றி தாயகக் கனவுகளோடும் விடுதலைப் புலிகள் அமைப்பினர் தங்களுக்கு நீதி வழங்குவார்கள் என்ற நம்பிக்கையோடும் இருக்கிறார்கள். கடிது இவர்களது நம்பிக்கை.

விடுதலைப் புலிகள் அமைப்பும், தலைமையும் தொடர்ந்தும் மௌனம் சாதிப்பது தர்மமாகாது. முஸ்லீம் மக்களது நிலைப்பாட்டை தமது தவறுகளை திருத்தி மீண்டும் முஸ்லீம் மக்களது நல்லெண்ணத்தைப் பெற்றுக்கொள்ள கிடைத்த ஒரு அரிய சந்தர்ப்பமாக விடுதலைப் புலிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

வடபகுதியில் தடுத்து வைக்கப்பட்டுள்ள முஸ்லீம் மக்களது விடுதலை, வடபகுதி அகதிகள் மீள்குடியமர்த்தலும் புனர்வாழ்வும், இணைந்த வடகிழக்கு மாகாணத்துள் அம்பாறை மாவட்ட முஸ்லீம் பகுதிகளை அடிப்படையாக கொண்ட இணைந்த முஸ்லீம் அரசியல் அலகை ஏற்றுக்கொள்ளுதல் என்ற வகையில் விடுதலைப் புலிகளின் தலைமை தனது மௌனத்தைக் கலைக்க வேண்டும்.

முஸ்லீம் காங்கிரஸினதும், ஸ்ரீ.ல.சு.க., ஐ.தே.க. மற்றும் இடதுசாரி கட்சிகளினதும், முஸ்லீம் தலைவர்கள் தென்னிலங்கை முஸ்லீம்களது நீண்டகால கோரிக்கைகள் தொடர்பான ஒரு பொதுத்தீர்மானத்துக்கு வரவேண்டிய ஒரு வரலாற்றுக் காலகட்டமிது. அரசியல் சீர்திருத்தம் தொடர்பான பாராளுமன்ற தெரிவுக்குழுவின் முன் தென்பகுதி முஸ்லீம்களது நீண்டகால நலன்களைப் பாதுகாக்க சகல தரப்பு முஸ்லீம் தலைவர்களும் தமது அரசியல் வேறுபாடுகளைமறந்து கூடி முடிவுகளை எடுக்க வேண்டிய கடைசித் தருணம் இது. எல்லாம் வல்ல இறைவன் செயலால் ஆவது இத்தகைய ஒரு கடைசி வாய்ப்பை நழுவவிட்டுவிடாத கடமை உணர்வு தென்னிலங்கை முஸ்லீம் தலைவர்களது மனதில் தோன்றிவிட வேண்டும் என்பது. அதற்கான ஒரு நெருக்குதலை- தென்பகுதி முஸ்லீம் மக்களது நலன்களுக்கு தமது சொந்த அரசியல் நலன்களை கீழ்ப்படுத்தி அரசியல் வேறுபாடுகளுக்கு வெளியில் ஒற்றுமைப்படுகிறதற்கான ஒரு சூழலை உருவாக்க தென்பகுதி பள்ளிவாசல் குழுக்கள் உட்பட சகல அரசசார்பு, அரசுசாராத நிறுவனங்கள், கலைஞர்கள், அறிஞர்கள் அனைவரும் உழைத்திட வேண்டும். உருவாக வேண்டிய அரசியல் அமைப்பு சீர்திருத்தம் தொடர்பான தென்பகுதி முஸ்லீம்களது இணைப்புக்குழு முன் பின்வரும் ஆலோசனைகளை முன்வைக்கிறேன்.

தென்பகுதி கிராமங்கள் வட்டாரங்கள் என்பனவும் அவை சம்பந்தப்பட்ட பிரதேசங்களின் வளங்கள் வாய்ப்புக்களில் அவற்றுக்குகிட்ட வேண்டிய பங்கு பாத்தியதை என்பவையும் வரையறுக்கப்பட வேண்டும்.

கற்பிட்டி, புத்தளம் அரசாங்க அதிபர் பிரிவுகளையும், வில்பத்து சரணாலயத்தையும் உள்ளடக்கும் வகையில் புதிய மாவட்டம் ஒன்றை உருவாக்குதல் வேண்டும்.

சரிநிகர் சமானமாக வாழ்வம் இந்த நாட்டிலே!

**வ.ஐ.ச.ஜெயபாலன்**

---

# பாலம்

## ‘உடின் மித்துறு யடின் ஹத்துறு’

மூன்று மாத காலத்திற்கும் அதிகமாக அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்குமிடையே நடைமுறையிலிருந்து வந்த பகைமை தவிர்ப்பு ஒப்பந்தம் கடந்த ஏப்ரல் 19ம் திகதி முடிவுக்கு வந்ததானது இலங்கையில் சமாதானத்தை விரும்பும் மக்கள் அனைவரதும் எதிர்பார்ப்புக்களை சிதறடித்துள்ளது. இந்நிலைமைகளின் கீழ் மீண்டும் வட - கிழக்கில் மட்டுமன்றி, நாட்டின் தலைநகரத்திலும் மற்றும் ஏனைய பிரதான நகரங்களிலும், பொது இடங்களிலும் கூடவே குண்டு வெடிப்புச் சம்பவங்களுக்கு இடமுள்ளதாக பேசப்படுகிறது. அதனால் அவர்கள் மத்தியில் அச்சமும், அதிர்ச்சியும் நிலவுகிறது. அதே போலவே வடபகுதி சாதாரண மக்கள் மத்தியிலும் யுத்தத்தின் கோர அனுபவங்களை மீண்டும் அனுபவிக்க வேண்டி வருமோ? என்ற சந்தேகம் நிலவ ஆரம்பித்துள்ளது. வடக்கிலும், தெற்கிலும் இவ்வாறாக அச்சமும், அதிர்ச்சி நிலையும் நிலவக் காரணம் 10 ஆண்டுளுக்கும் அதிகமாக நடைபெறும் சிவில் யுத்தம் இவ் அரசாங்கத்தினால் முடிவுக்குக் கொண்டு வரப்படும் என்ற நம்பிக்கை சிதறடிக்கப்பட்டதனால் ஆகும்.

புதிய அரசாங்கத்திற்கும் - தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்குமிடையே நம்பிக்கை இழப்புத் தொடங்கியது யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற 2ஆம் சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் பின்பு என்பது எனது கருத்தாகும். இந்நம்பிக்கை இழப்புக்குக் காரணம், குறிப்பிட்ட தூரம் வரை நல்லதும், முறையானதுமான அணுகு முறையைக் கையாண்ட அரசாங்கம். இடைநடுவில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கோரிக்கைகள் தொடர்பாக நம்பிக்கையீனத்துடன் நோக்கியதாகும். அரசாங்கம் விசேடமாகப் பூநகரி இராணுவ முகாமை அகற்ற மறுத்தது மட்டுமன்றி, நிலையான சமாதானம் ஏற்படுத்தப்படும் வரை ''அதனை அகற்ற இயலாது'' என்றும் தெரிவித்தது.

இச்சிக்கல் தொடர்பாக நிலவிய முரண்பாட்டின் காரணமாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் பூநகரி இராணுவ முகாம் அகற்றப்பட வேண்டுமென்ற கோரிக்கையில் ஊன்றி நின்றனர். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அக்கோரிக்கையில் ஊன்றிநின்றது அண்மைக்காலத்தினுள், பூநகரி இராணுவ முகாமை அகற்றும் விடயத்தில் அரசாங்கத்தினால் எதனையும் செய்ய முடியாதிருக்கும் என்பதைத் தெரிந்து கொண்டேயாகும்.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் முறிவடையக் காரணம் பூநகரி இராணுவ முகாமை அகற்றுவது தொடர்பான கோரிக்கையே எனப்பெரும்பாலானோர் கருதுகின்றனர்.

ஆனால் நான் அவ்வாறு நோக்கவில்லை.

அரசாங்கம் ஆரம்பத்தில் சமாதான வழி முறைக்கு நல்லதும், முறையானதுமான அணுகுமுறையைக் கையாண்டிருந்தாலும், இடை நடுவில் தனது உத்தியோகபூர்வ, உத்தியோகபூர்வமற்ற ஆலோசனைச் சபைகளின் முடிவுகளுக்குக் கட்டுப்பட்டது/ கீழ்ப்பட்டது. இவ் ஆலோசனைச் சபைகளிலுள்ள பெரும்பான்மையானவர்களுக்கு இளைஞர்கள் ஏன் போராடுகிறார்கள் என்பது தெரியாது. அதனால் இவ் விடயம் தொடர்பாக ஆலோசனை வழங்குவோர் வடக்கில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க (எல்.ரி.ரி.ஈ) - விரோத நிலைப்பாட்டையும், அதேபோல் தெற்கில் மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) - விரோத நிலைப்பாட்டையுமே கொண்டுள்ளனர். இந்நிலைமையைத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் நன்கு விளங்கி வைத்துள்ளது. அதனால் அரசாங்கத்திற்கும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்குமிடையே நம்பிக்கை இழப்புப் பாரிய அளவில் தோன்றியது. அந்நம்பிக்கை இழப்பினால் ஏற்பட்ட உடைவின் தொடர்ச்சியாக இலங்கைப் பாதுகாப்புப் படைகள் ஜனாதிபதியினூடாகத் தமது நோக்கங்களை அடையவே தற்போது முயற்சிக்கின்றன. (பாதுகாப்பு படைகள் என நான் கருதுவது பாதுகாப்பு விடயங்களில் முடிவுகளை மேற்கொள்ளும் இராணுவத்தின் உயர் அதிகாரிகளையே.)

இராணுவ உயர் அதிகாரிகள், சிவில் யுத்தமொன்றை நோக்கிச் செல்லத் தயாராகிறார்கள். ஏனெனில் அது அவர்களின் ''தேவை'' என்பதனாலாகும். சிவில் யுத்தமொன்று நிலவினால் மட்டுமே அவர்களால் சமூகத்திலுள்ள அதிகாரத்துவக்கட்டமைப்பில் செல்வாக்கைப் பெறவும், பணம் சம்பாதிக்கவும் முடியும். யார் என்ன கூறினாலும் மோசடி, துஷ்பிரயோகம் போன்ற சாதனங்களிலேயே முதலாளித்துவ சமூகம் நிலைத்து நிற்கிறது. அதனது இருப்புக்கு இவை அத்தியாவசியமானவை.

அரசாங்க ஆலோசகர்களின் பயனற்ற தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க - விரோத உணர்வு காரணமாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தரப்பிலிருந்து அரசாங்கத்திற்குக் கிடைத்த சந்தர்ப்பம் துரதிர்ஷ்டவசமாக இழக்கப்பட்டுக் கொண்டு செல்கிறது. திருக்கோணமலையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் நடாத்திய தாக்குதலுக்கு முன்பு அது முன்வைத்த நிரந்தர யுத்த நிறுத்தம் பற்றிக் கலந்துரையாட, அரசாங்கம் அக்கறை செலுத்தவில்லை. நான் இதற்கு முன்பு கூறியது போலவே, கெரில்லா இயக்கமொன்றை முழுமையான ஜனநாயக இயக்கமொன்றாக மாற்ற எந்த முதலாளித்துவ அரசாங்கத்தினாலும் இயலாது.

ஏனெனில், கெரில்லா இயக்கத்தின் தோற்றமே முதலாளித்துவ அமைப்புக்கு எதிரானது ஆகும். ஆனால் கெரில்லா இயக்கமொன்று நம்பிக்கையுடன் ஜனநாயக வழிமுறைக்கு வரவேண்டுமாயின் 'கரடு முரடற்ற வழி'யொன்று தொலை நோக்குள்ள அரசாங்கமொன்றிற்கு இருக்க வேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் பேச்சுவார்த்தைகளின் இடைநடுவில் பாரிய மாற்றங்களைக் காட்டி நின்றது. அது ஆரம்பம் முதலே இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பதைவிட நடைமுறையில் (Practical) தனக்குச் சாதகமான விடயங்களுக்கே நிகழ்ச்சி நிரலில் முன்னுரிமை அளித்திருந்தது. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் சில வேளைகளில் வடபகுதி மக்களின் அத்தியாவசியக்

→15

**நிஷாந்த எழுதுவது**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






டொனமூர் விசாரணைக் காலப்பகுதியில் வெளிவந்த பெரும்பாலான பத்திரிகைகள் கூட பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்படுவதை எதிர்த்தும், நையாண்டி புரிந்தும் செய்திகள், கட்டுரைகள் என்பவற்றைப் பிரசுரித்திருந்தன.

ஈழகேசரி 1930-09-10 இதழில் பெண்களும் வாக்குரிமையும் என்ற ஆசிரியத் தலையங்கத்தில் கீழ்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது.

***"... தமக்கென்று ஓர் சொந்த அபிப்பிராயத்துடன், விஷயங்களைப் பூரணமாக ஆலோசனை செய்து சரி பிழையறியும் ஆற்றலும் பெண்களிடத்திலிருக்கிறதா...? ஆண்களே வாக்குரிமையைப் பற்றி சரியாக அறியாதிருக்க பெண்கள் எப்படி அறியப் போகிறார்கள்?... பெண்களுக்கு இதனை வழங்கியதன் மூலம் நன்மையைக் கொண்டு வரும் என்பது ஐயத்துக்கிடமானதாகும்..."***

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த "இந்து சாதனம்" பத்திரிகையில் (8.11.1928) பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது.

***"...கொழும்பிலுள்ள ஆண் தன்மை பூண்ட தன்னிஷ்டப் பெண் ஜென்மங்கள் சிலரின் கேள்விக்கிசைந்தே விசாரணைச் சபையாரும் 'பெண்னென்றால் பேயுமிரங்கு' மென்னும் பழமொழிப்படி உடன்பட்டு விட்டார்கள். இது எங்கள் சமயம், சாதி, தேசம், பழக்கவழக்கம், கொள்கை என்று சொல்லப்படுவன எல்லாவற்றிற்கும் முழு மாறானதாகும்... மேலும் பறங்கியர், ஒல்லாந்தர் முதலான அந்நிய சமயத்தினர் இலங்கையைப் பரிபாலித்த போது கூட சமயநிஷ்டூரம் செய்தனரேயன்றி இந்த விதமாக எங்கள் சாதிக்கட்டுப்பாட்டையழித்து இங்குள்ள பெண்களைப் பொதுக்கருமங்களிற் பிரவேசிக்கச் செய்து பொது மகளிராக்கி விடவில்லை".***

இவ்வாறு அன்றைய பத்திரிகைகள் கூட "பெண்களுக்கு வாக்களிக்கும் ஆற்றல் இல்லை" என்றும் வாக்குரிமை கோரிய பெண்களை 'தன்னிஷ்ட பெண் ஜென்மங்கள்' என்றும் பொதுக் கருமங்களில் ஈடுபடும் பெண்களை "பொது மகளிர்" என்றும் அதிகளவு ஏளனம் புரிந்தும் எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர்.

**பெண்களின் வாக்குரிமைக்காக போராடியவர்கள் :**

ஒருபக்கம் பெண்களின் வாக்குரிமைக்கு எதிராக பலர் குரல் கொடுத்து வந்த அதே நேரம் பெண்களுக்கான வாக்குரிமையைக் கோரியும் அதற்கு ஆதரவளித்தும் சில முயற்சிகள் நடந்தன.

கோ.நடேசய்யர், பெரி. சுந்தரம் ஆகியோர் (முறையே சாட்சியம் எண் 36, 38) 07ம் திகதி டிசம்பர் 1927 இல் டொனமூர் குழுவின் முன் சாட்சியமளிக்கையில் "பெண்களுக்கு சம உரிமை வழங்கப்பட வேண்டும்" என்பதை வலியுறுத்தியிருந்தனர்.

(டொனமூர் சீர்திருத்தம் அமுலுக்கு வருமுன் அறிக்கை வெளியிடப்பட்ட சந்தர்ப்பத்தில் **"டொனமூர் அறிக்கை வெளிவந்தது; பெண்களுக்கும் வாக்குரிமை"** என தேசபக்தனில் மிகவும் பாராட்டியிருந்தார். ஆனால் அவர் பாராட்டிய பெண்களுக்கான வாக்குரிமை அம்சம் என்பது " 31 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்குமட்டுமே" என்பது குறிப்பிடத்தக்கது. கோ.நடேசய்யர், இதுவேனும் கிடைத்ததே என்ற நோக்கிலிருந்தே அன்று அக்கருத்தை வெளியிட்டிருக்கக்கூடும்.

இன்னொரு புறம் 1928 ஜனவரியில் ***"பெண்கள் வாக்குரிமைச் சங்கம்"*** என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது.

பெண்கள் வாக்குரிமைச் சங்கத்தின் ஸ்தாபக அங்கத்தவரில் **திருமதி ஈ.ஆர்.தம்பிமுத்துவும்** ஒருவர் ஆவார். இவரது கணவர் திரு.தம்பிமுத்து கிழக்கு மாகாணத்துச் சட்டசபைப் பிரதிநிதியாக இருந்த போது சட்ட சபையில் 1920 ஒகஸ்ட் 13ம் திகதியன்று வாக்குரிமையைப் பயன்படுத்துவதில் பால்வேறுபாடு காரணமாக ஒடுக்கப்படுவதில் இருக்கும் தடைகளை நீக்குமாறும், பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட வேண்டும் என்ற பிரேரணையையும் அறிமுகப்படுத்தியவர். ஆனால் அப்போது அப்பிரேரணை சட்டசபையில் ஆதரவு பெறவில்லை. (The Hansard CNC -649) பின்னர் "பெண்கள் வாக்குரிமைச் சங்கம்" நிறுவப்பட்ட போது அதன் உபதலைவர்களில் ஒருவராக தெரிவு செய்யப்பட்டார். 1927 ஆம் ஆண்டு டிசம்பர் 7ம் திகதி முதன் முதல் இச்சங்கத்தை ஸ்தாபிப்பதற்காகப் பெண்கள் கூடிய போது திருமதி தம்பிமுத்துவே பெண்கள் வாக்குரிமைச் சங்கம் (Women Franchise Union) என்ற பெயரைப் பிரேரித்தார்.

டேசி பண்டாரநாயக்காவின் (இவர் பின்னாளில் பிரதமராக பதவி வகித்த எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்காவின் தாயார்) தலைமையில் ஆரம்பிக்கப்பட்டிருந்த இவ்வமைப்பில் திருமதி.ஈ.ஆர்.தம்பிமுத்து உட்பட திருமதி. நல்லம்மா, டொக்டர்.மேரி ரட்னம் டபிள்யூ ஏ.டி.சில்வா, அக்னஸ் டீ சில்வா ,திருமதி கேரோட் வீரக்கோன் ஆகியோரும் அங்கம் வகித்தனர். அவ்வமைப்பின் முதல் தலைவியாகவும் டேசி பண்டாரநாயக்கா இருந்தார்.

## "பெண்களென்றால் பேயுமிரங்கும் என்றாற்போல் டொனமூர் விசாரணைச் சபையாரும் இரங்கினராம்"



டேசி எஸ்லின் ஒபேசேகர பண்டாரநாயக்கா
(இவர் முன்னாள் பிரதமர் S.W.R.D.பண்டாரநாயக்காவின் தாயார்)

உப தலைவர்களில் ஒருவராக ஈ.ஆர்.தம்பிமுத்து இருந்தார். (பெண்களின் வாக்குரிமைப் போராட்டம் முற்றுப்பெற்றதும் இவ்வமைப்பு, அகில இலங்கைப் பெண்கள் சம்மேளனமாக (All Ceylon ,Women Conferance) மாறியது)

இச்சங்கத்தின கிளையொன்றை 'ரய்கம்' பகுதியில் 1929 நவம்பர் 22ஆம் திகதி ஆரம்பித்த போது அதற்கு டேசி டயஸ் பண்டாரநாயக்க தலைமைதாங்கினார். அவரோடு 'சத்தியவாகீஷ்வர அய்யர், ஏ.சீ.ஜீ.விஜேகோன் ஆகியோரும் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் டேசி டயஸ் பண்டாரநாயக்க கீழ்வருமாறு உரையாற்றினார்.

***"அரசியல் வேறுபாடு இன, மத, ஜாதி போன்ற வேறுபாடுகளுமின்றி பெண்கள் வாக்குரிமைச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எமது குறிக்கோள்; சகல தேர்தல் களிலும் பங்கு கொள்ள பெண்களுக்கும் வாக்குரிமை கிடைக்கச் செய்வது, இலங்கைப் பெண்களின் கடமை, பொறுப்பு ஆகியவை தொடர்பான அனுபவத்தை கிடைக்கச் செய்வது போன்றவையே."***

**என்.சரவணன்**

பெண்களுக்கு வாக்குரிமை வேண்டுமெனக் கோரி 1928ஆம் ஆண்டு ஜனவரி 14ம் திகதி இவ்வமைப்பு சாட்சியமளித்தது. (டொனமூர் குழுவிடம் இறுதியாக இவ்வமைப்பே சாட்சியமளித்திருந்தது. சாட்சியம் இலக்கம் -141)

டொனமூர் ஆணைக்குழுவின் முன்னிலையில் பெண்கள் வாக்குரிமைச்சங்கம் சாட்சியமளித்ததன் பின் **பெண்களுக்கு ஏன் வாக்குரிமை தேவை?** என்ற தலைப்பில் நீண்ட துண்டுப்பிரசுரம் ஒன்றை அவ்வமைப்பு வெளியிட்டது. பெரும்பாலும் ஆணைக்குழு முன்னிலையில் அவ்வமைப்பு அளித்த சாட்சியத்தை அடிப்படையாகக் கொண்டே மேலும் பல தகவல்களுடன் இது வெளியிடப்பட்டிருந்தது. பெண்களுக்கு வாக்குரிமை தேவையில்லை என வாதிடுவோருக்கு தாக்க ரீதியிலான பதில் அதில் கொடுக்கப்பட்டிருந்தது. அத்துண்டுப் பிரசுரத்தில் இருந்த சில குறிப்புக்கள் கீழ்வருமாறு.

***"வாக்குரிமையை பயன்படுத்துவதற்கு வாக்குச்சீட்டில் புள்ளியிடுவது எப்படியென்று தெரிந்திருத்தலே போதுமானது..... பால் ரீதியான பாகுபாட்டைக் காரணமாக வைத்து நாட்டுப்பிரஜைகளின் வாக்குரிமையை இல்லாமல் செய்வது நாட்டுக்கு முன்னேற்றத்தை அளிப்பதாகாது..... பெண்கள் சுதந்திரமாக முன்னேற அவர்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட்டே ஆக வேண்டும்.***

***பெண்களின் உரிமையை தட்டிக்கழிக்கும் உரிமை எந்தவொரு அரசாங்கத்துக்கும் கிடையாது. இன்று பெண்களுக்கு வாக்குரிமை கிடைத்தால் வீட்டு நிலைமை மோசமாகும், வீட்டு ஐக்கியம் பாதிக்கப்படும் என்றெல்லாம் பேசப்படுவது பெரும் முட்டாள்தனமானவாதம். பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்ட நாடுகளில் இதற்கு உதாரணங்களைக் காணலாம். பெண்களுக்கான சுதந்திரமில்லை எனக் கூறப்படும் மத்திய கிழக்கு நாடுகளில் கூட பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டிருக்கிறது. பலஸ்தீன சட்டசபையில் பிரதிநிதித்துவம் வகிக்கும் 334 பேரில் 14 பேர் பெண்களாவர்...."***

டொனமூர் குழுவின் முன் சாட்சியமளித்தவர்களில் பெண்களின் வாக்குரிமையைப் பற்றி குரலெழுப்பியோர் குறைவாகவே காணப்பட்டனர். குறிப்பாக தமிழ் தலைவர்களில் பலர், ஏனைய இனத்தவர்களையும் விட பெண்களின் வாக்குரிமைக்கு எதிராக குரலெழுப்பியிருந்தனர். இதுபற்றி டொனமூர் அறிக்கையில் கீழ்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது.

***"தமிழ் (இந்து) சமூகத்தின் தலைவர்கள் பலர் வாக்குரிமை மேலும் விஸ்தரிக்கப்படுவதை விரும்பவில்லை"***

ஆனாலும் பெண்களின் சாட்சியங்களைத் தொடர்ந்து டொனமூர் குழுவினர் பெண்களின் வாக்குரிமைக்கு ஆதரவாக கருத்துத் தெரிவித்தனர். எமது நாட்டுப் பெண்களின் வாக்குரிமையின் அவசியத்தை வேற்று நாட்டவர் நியாயப்படுத்திப் பேச வேண்டிய மோசமான நிலை அன்றிருந்தது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

டொனமூர் குழுவினர் **"பெண்களுக்கு வாக்குரிமை வழங்குவதன் மூலம் இலங்கையில் குழந்தை இறப்பு வீதம், விடமைப்பு, சுகாதாரம், குழந்தை சார் நலம், மருத்துவம், கற்பிணிகளுக்கான நடவடிக்கைகள் என்பவற்றில் வளர்ச்சி ஏற்படும்"** என கருத்து தெரிவித்தனர். அதன்படி அவர்கள் பெண்களுக்கான வாக்குரிமை வழங்கப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டாலும் அது 31 வயதாக இருக்க வேண்டுமென மட்டுப்படுத்தினர். ஆனால் இது நடைமுறைக்கு வந்த போது அன்றிருந்த அரசாங்க காரியதரிசியால், தேசாதிபதி சேர் கோர்பஸ் ஸ்டேன்லி என்பருக்கு முன்வைத்த சிபாரிசு காரணமாக பெண்களுக்கும் 21 வயதில் வாக்குரிமை வழங்கப்பட்டது.

பிரித்தானியாவில் சகலருக்கும் 1918ல் வாக்குரிமை வழங்கப்பட்ட போதும் பெண்களின் வாக்குரிமை வயது 30 ஆகவே இருந்தது. 10 வருட போராட்டத்தின் பிறகு அதாவது, 1928 இலேயே பெண்கள் 21 வயதில் வாக்களிக்கும் உரிமையைப் பெற்றுக்கொண்டனர்.

ஆனால் இலங்கையில் 1931இல் ஒரே தடவையில் இலங்கைப் பிரஜைகளுக்கு சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்டது. ஆண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்ட போதே பெண்களும் ஒரே நேரத்தில் வாக்குரிமையைப் பெற்றுக் கொண்டனர்.

இலங்கைப் பெண்களின் வாக்குரிமைப் போராட்டம் என்பது சந்தர்ப்பத்திற்கமைய குரலெழுப்பி அதை உடனேயே பெற்றுக்கொண்டதனாலேயே 'பெண்கள் எவ்வித போராட்டப் படிநிலைகளுமின்றி வாக்குரிமையைப் பெற்றுக்கொண்டனர்' என இலகுவாக கூறக்கூடியதாகவுள்ளது.

அதாவது, 1931இல் சர்வஜன வாக்குரிமை தொடர்பில், தங்களுக்கு பாரபட்சம் காட்டக்கூடிய சூழல் மேலெழுந்தவேளை, தாங்கள் அதற்காக போராடினார்கள். அது ஒரு உடனடி எழுச்சியாகவே காணப்பட்டது என்று கூட கூறலாம்.


பெண்களுக்கான வாக்குரிமை வழங்கப்பட்ட முதன்மை நாடுகளில் இலங்கையும் அடங்குகின்றது. அதே போல் வாக்குரிமை வயதெல்லை 21 இலிருந்து 18க்கு குறைத்த முதன்மை நாடுகளில் இலங்கையும் ஒன்று. இன்று இலங்கைப் பெண்கள் 18 வயதிலேயே வாக்களிக்கத் தகுதி படைத்துள்ளனர்.

– வரும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# தேசியவாதமும் ஜனநாயகமும்

கடந்த இரு கட்டுரைகளில் ''நல்ல தேசியவாதம் தேசியவாதம், கூடாத தேசியவாதம் இனவாதம்'', ''தேசியவாதமும் மாக்சியமும்'' - நாம் தேசியவாதத்துக்கும் இனவாதத்துக்கும் உள்ள உறவைப் பற்றியும் தேசியவாதத்துக்கும் மாக்சியத்துக்கும் இடையிலான முரண்பாட்டைப் பற்றியும் பார்த்தோம். தேசியவாதம் என்பது, இனவாதத்தைப் போல் தர அடுக்குதலைக் (Hierarchy) கொண்டுள்ள போதும், அத்தர அடுக்குதல் விஞ்ஞானவாத அதாவது உயிரியல் ரீதியானது அல்ல என்பதை எடுத்துக் காட்டினோம். தத்துவ ரீதியில் தேசியவாதிகள் பிற தேசியவாதங்களுக்கு சம அந்தஸ்து வழங்க வேண்டும் என்று கூறினாலும், நடைமுறையில் இச்சம அந்தஸ்தை இயல்பாக மறுக்கின்றனர். ஒரு தேசம் மேலானது மற்றையது கீழானது என்ற கருத்து எவ்வாறு ஹோர்டர் போன்ற ''சர்வதேச'' தேசியவாதிகளின் தத்துவத்தினுள் நுழையலாம் என்பதையும் ஆராய்ந்தோம்.

இரண்டாவது கட்டுரையில் தேசியவாதத்தை மார்க்சிய அடிப்படையிலிருந்து நியாயப்படுத்தல் இயலாத காரியம் என்பதையும் வாதாடினோம். சில மார்க்சியவாதிகள் தேசிய சுயநிர்ணய உரிமையின் முக்கியத்துவத்தை அங்கீகரிக்கலாம். எனினும் **லெனின்** ஸ்டாலின் போன்றவர்கள் அச்சுயநிர்ணய உரிமை என்பது சோசலிச புரட்சிக்கு அல்லது பாட்டாளி வர்க்கத்தின் மேம்பாட்டிற்கு வழிவகுத்தால் மட்டுமே நியாயமானது என்ற நிலைப்பாட்டைக் கொண்டனர். எனவே நல்ல தேசியவாதத்தைக் கூடாத தேசியவாதத்திலிருந்து வேறுபடுத்துவதற்கு தேசியவாதத்தை முற்றாக மறுதலிக்கும் மார்க்சியத்தையோ, தேசியவாதத்தை முற்றாக ஏற்றுக்கொள்ளும் தேசியவாதத் தத்துவத்தையோ பயன்படுத்த முடியாது என்று இவ்விரு கட்டுரைகளில் முடிவுக்கு வந்தோம்.

இக்கட்டுரையில் தேசியவாதத்துக்கும் ஜனநாயகத்துக்கும் இடையிலுள்ள சிக்கலான உறவைப்பற்றி ஆராய்வோம். ஜனநாயகத்துக்கும் தேசியவாதத்துக்கும் இடையிலான நெருக்கமான உறவை ஆராய்வதன் மூலமே தேசியவாதத் தத்துவத்தைப் பற்றி தெளிவான விளக்கத்தைப் பெறலாம். ஏனெனில் ஜனநாயகமும் தேசியவாதமும் அரசியல் சரித்திரத்தில் மட்டுமல்ல, தத்துவத்திலும் பின்னிப்பிணைந்துள்ளன. எனினும் சில தேசியவாதிகள் புரிந்து கொண்டிருப்பது போலன்றி இத்தொடர்பானது நேரடியான ஒன்றல்ல. மாறாக மறைமுகமானதாகும். சாராம்சத்தில் இது பற்றிய தர்க்கம்; ஒரு மக்கள் கூட்டத்தின் சுயாட்சிக்கு இரு நியாயங்கள் உண்டு. I. ஜனநாயக நியாயம் II. தேசியவாத நியாயம். இவ்விரு நியாயங்களும் வேறானவை. எனினும் அவை ஒன்றுக்கொன்று தொடர்புடையன. சுயாட்சிக்கான ஜனநாயக நியாயம் என்னவெனில் ஒவ்வோர் பிரஜைகளினதும் பங்களிப்புடனான அரசாலும், சட்டங்களாலும் அவர்கள் ஆளப்பட வேண்டும் என்பதாகும். ஆனால் ஜனநாயக நியாயத்தில் இவ்வரசின் சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய அரசியல் அலகைப்பற்றியோ அதன் எல்லைகளைப் பற்றியோ எந்த விடயமும் இல்லை. அதாவது ஓர் அரசியல் அலகுக்குள் இருக்க வேண்டியவர்கள் யார். அங்கிருந்து புறக்கணிக்கப்பட வேண்டியவர்கள் யார் என்ற எந்த நியாயமும் இதில் அடங்காது. உதாரணமாக இந்தியாவும், இலங்கையும் என்ற இரு அரசியல் அலகுகளும் ஜனநாயக அடிப்படையிலானவை என்றால், இவ்விரு அலகுகளையும் ஒன்றாக்கி ஏன் கொழும்பிலிருந்தே ஆட்சி செய்ய முடியாது? என்ற கேள்விக்கு ஜனநாயக நியாயத்தில் பதில் இல்லை. இதற்குப்பதில் தேசியவாதத்திடமே உண்டு.

சுயாட்சிக்கான தேசியவாத நியாயம் என்பது ஓர் இனத்திற்கு உரித்தான சாராம்சத்தை வளர்த்தெடுப்பதற்கு அவ்வினத்திற்கு விசேடமான ஓர் அரசியல் அலகு அத்தியாவசியமானது. உதாரணமாக சிங்கள பௌத்த சாராம்சத்தை பாதுகாக்கவும், வளர்ப்பதற்கும் ஸ்ரீலங்கா என்ற அரசியல் அலகு அவசியமாகும். அல்லது சைவ தமிழ் கலாசாரத்தை வளர்த்தெடுப்பதற்கு தமிழ் ஈழம் என்ற அரசியல் அலகு அவசியமாகும். ஜனநாயக நியாயத்தைப் போலவே நவீன தேசியவாத நியாயங்களிலும் அத்தேசிய இனத்தின் அனைத்து அங்கத்தவர்களுக்கும் ஏதாவதொருவகையில் சமஅந்தஸ்து வழங்கப்பட வேண்டும் என்ற கருத்து அடங்கியுள்ளது. எனினும் இச்சம அந்தஸ்து எவ்வாறு அரசியலமைப்பிற் பிரதிபலிக்கப்பட வேண்டும் என்ற கேள்விக்கு தேசியவாத நியாயத்தில் பதில் இல்லை.. இதற்கான பதில் ஜனநாயகத்திடமே உண்டு. ஆகவே, தேசியவாதத்தை எதிர்க்க ஜனநாயகத்தைப் பயன்படுத்துபவர்களும் தேசியவாதத்தை ஆதரிக்க ஜனநாயகத்தைப் பயன்படுத்துபவர்களும், தேசியவாதத்திற்கும் ஜனநாயகத்திற்குமிடையில் இருப்பது நேரடித் தொடர்பல்ல மாறாக ஓர் சிக்கலான, மறைமுகத் தொடர்பே உள்ளதனை புரிந்து கொள்ள வேண்டும்.

அடுத்து ஜனநாயக நியாயம் பற்றியும், தேசியவாத நியாயம் பற்றியும் இறுதியில் சுயநிர்ணய உரிமை என்ற கருத்தில் இவ்விரு நியாயங்களும் எவ்வாறு குழப்பப்படுகின்றன என்பதை ஆராய்வோம்.

## ஜனநாயகவாத நியாயம்

ஜனநாயகத்தில் தனி நபர்கள் தொடர்பாக இரு அரசியல் ஒழுக்கவியல்கள் உண்டு. I. தனிநபர்களின் சமத்துவம் (Individual equality), II தனிநபர் சுதந்திரம் (Individual Autonamy).

தனிநபர் சமத்துவம் என்ற எண்ணக்கரு பல்வேறு வகையில் விளங்கப்படுகிறது. சிலர் இதனை வெறும் ஒழுக்கவியல் அடிப்படையிலேயே அணுகுகின்றனர். உதாரணமாக ஜோன்லொக் (John Locke) என்ற 18ம் நூற்றாண்டின் ஆங்கிலேய தத்துவஞானி ஒழுக்கவியல் ரீதியில் தனிநபர் சமத்துவத்தை ஏற்றுக்கொண்ட அதேவேளை, நடைமுறையில் சொத்துள்ளவர்கட்கு அரசியல் உரிமைகளையும், சொத்தில்லாதவர்கட்கு சிவில் உரிமைகளையும் மட்டும் வழங்குவதை நியாயப்படுத்தினார். தற்போதைய அனைத்து ஜனநாயகவாதிகளும் எல்லாப் பிரஜைகட்கும் சம அரசியல் உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்பதை அங்கீகரிக்கின்றனர். தனிநபர் சமத்துவக் கருத்தை மேலும் மெருகூட்டும் வகையில் ஜோன்றோல்ஸ் என்ற தத்துவஞானி நாம் அரசியல் ஒழுக்கவியல் சமத்துவத்தை ஏற்றுக்கொள்ளுவோமாயின் சமூக, பொருளாதார சமத்துவத்தையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று வாதாடினார். ஆகவே, தனிநபர் சமத்துவம் என்ற ஜனநாயகக் கருத்துக்கு பாரம்பரியவாத தாராண்மைவாதத்திலிருந்து (Traditional Liberals) முற்போக்கு ஜனநாயகம் (Progressive Democrats) வரை பல்வேறு வகையான விளக்கங்கள் உண்டு.

தனிநபர் சுதந்திரம் என்ற கருத்தின் அடிப்படை விளக்கம் என்னவெனில்; ஓர் தனிநபர் தான் விரும்பிய வகையான வாழ்க்கை முறையைத் தேர்ந்தெடுக்கவும் அதனைப் பின்பற்றவும் அவருக்கு முழுச்சுதந்திர வழங்கப்பட வேண்டும் என்பதாகும்.

இவ்விரு கருத்துக்களின் சேர்க்கையின் பிரதிபலிப்பே ஓர் ஜனநாயக அமைப்பில் ஜனநாயக நடைமுறைகளையும் (Democratic process) உள்ளடக்கங்களையும் (Democratic substance) உருவாக்குகிறது.

ஜனநாயக நடைமுறையில் தனிநபர் உரிமைகளும், பெரும்பான்மை ஆட்சியும் இரு அடிப்படை அம்சங்களாகும். இங்கு தனிநபர் உரிமைகள் என்பது பேச்சுச்சுதந்திரம், எழுத்துச்சுதந்திரம், கூட்டம் கூடும் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் ஆகியனவாகும்.

பெரும்பான்மை ஆட்சி என்பது ஓர் அரசியல் அலகினுள் ஓர் பிரச்சினை அல்லது ஓர் விடயம் தொடர்பாக கூட்டுமுடிவு எடுக்க வேண்டிய சந்தர்ப்பத்தில், அக்கூட்டு முடிவானது பெரும்பான்மையோரின் விருப்பத்தின் வெளிப்பாடாக அமைவதைக்குறிக்கிறது. இவ்வகையில் கூட்டுத் தீர்மானம் எடுக்க வேண்டிய விடயம் பொருளாதாரம் தொடர்பானதாகவோ, அரசியல் தொடர்பானதாகவோ கலாசாரம் தொடர்பானதாகவோ இருக்கலாம்.

ஆழமான பிளவுகள் உள்ள ஓர் சமுதாயத்தில் பெரும்பான்மை ஆட்சி என்ற நடைமுறை ஒரு சிறுபான்மையை திட்டமிட்ட முறையில் தொடர்ச்சியாகப் புறக்கணித்தும் செயற்படலாம். இச்சிறுபான்மை இனரீதியானதாகவோ, வர்க்க ரீதியானதாகவோ, அரசியற்கட்சி ரீதியானதாகவோ இருக்கலாம். இங்கு தனிநபர் சுதந்திரத்தையும், தனிநபர் சமத்துவத்தையும் நடைமுறைப்படுத்துவதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்டு பின்பற்றப்பட்டுவரும் பெரும்பான்மை ஆட்சி என்ற நடைமுறை சில சமயம் தனிநபர் சுதந்திரத்தையும், தனிநபர் சமத்துவத்தையும் மறுதலிப்பதாகக்கூட அமையலாம் என்பதையும் நோக்க வேண்டும். இதனாலேயே ஜனநாயகவாதிகள் ஜனநாயக நடைமுறைகளை மட்டுமன்றி ஜனநாயக உள்ளடக்கம் பற்றியும் வலியுறுத்துகின்றனர்.

ஜனநாயக உள்ளடக்கம் என்ற கருத்தின் அர்த்தம், சம உரிமைகளை அங்கீகரிப்பதுடன் அவ்வுரிமைகளை அனுபவிப்பதற்கு அவசியமான சமூகப்பொருளாதார சூழ்நிலையை ஏற்படுத்துவதும் ஓர் ஜனநாயக அரசின் கடமையாகும். அனேகமான ஜனநாயக அரசுகளில் தற்போது நலன்புரிச் சேவைகளை வழங்குதல், சிறுபான்மை இனங்களின் மொழிகலாசாரத்தைப் பேணிப்பாதுகாப்பதற்கான உதவிகளை வழங்குதல், தேர்தல்களின் போது தொலைக்காட்சி, வானொலி வேட்பாளர்கட்கு தமது கருத்துக்களைப் பரப்ப சம சந்தர்ப்பம் வழங்குதல் என்பனவற்றைக் கூறலாம்.

ஆகவே, சுயாட்சி தொடர்பான ஜனநாயக நியாயத்தில் ஓர் குறிப்பிட்ட அரசியல் அலகினுள் அங்கத்துவம் வகிக்கும் பிரஜைகள் சமத்துவத்தையும் சுதந்திரத்தையும் நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமான உரிமைகளைப்பற்றியும் அவ்வுரிமைகளை அனுபவிப்பதற்கு அவசியமான அமைப்புக்களைப் பற்றியும் வாதங்கள் உண்டு. உதாரணமாக- பொருளாதார சமத்துவமின்றி ஜனநாயகம் இல்லை என சிலர் வாதாடலாம். இனச்சமத்துவம் இல்லாமல் ஜனநாயகம் இல்லை என வேறு சிலர் வாதாடலாம் மேலும் ஜனநாயக அமைப்பிலுள்ள நிறுவனங்களான பாராளுமன்றம், நீதித்துறை, நிர்வாகத்துறை போன்றவற்றின் பலம், பலவீனங்கள் பற்றி ஜனநாயகவாதிகளுக்குள் வாதங்கள் ஏற்படலாம்.

இவ்வாதங்கள் தொடர்பாக எமக்குள் வேறுபாடுகள் ஏற்படலாம். ஆனால் ஜனநாயகத் தத்துவத்தில் ஆட்சி பற்றிய இத்தகைய வாதங்கள் இருக்கின்றன என்பதில் எமக்குள் வேறுபாடு இருக்க முடியாது. இங்கு சுயாடசிக்கான ஜனநாயக நியாயத்தில் ஆட்சி அலகு பற்றிய எவ்வித கருத்துக்களும் விவாதிக்கப்படவில்லை. அதாவது ஜனநாயகத் தத்துவத்தில் அரசியல் அலகு என்பது எடுகோளாகவே உள்ளது. எனவே அரசியல் அலகு பற்றிய வாதத்தினை நோக்குவதற்கு நாம் தேசியவாதத்தினை நோக்க வேண்டும்.

**சுயாட்சி தொடர்பான ஜனநாயக நியாயத்தில் ஓர் குறிப்பிட்ட அரசியல் அலகினுள் அங்கத்துவம் வகிக்கும் பிரஜைகள் சமத்துவத்தையும் சுதந்திரத்தையும் நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமான உரிமைகளைப்பற்றியும் அவ்வுரிமைகளை அனுபவிப்பதற்கு அவசியமான அமைப்புக்களைப்பற்றியும் வாதங்கள் உண்டு. உதாரணமாக- பொருளாதார சமத்துவமின்றி ஜனநாயகம் இல்லை என சிலர் வாதாடலாம். இனச்சமத்துவம் இல்லாமல் ஜனநாயகம் இல்லை என வேறு சிலர் வாதாடலாம் மேலும் ஜனநாயக அமைப்பிலுள்ள நிறுவனங்களான பாராளுமன்றம், நீதித்துறை, நிர்வாகத்துறை போன்றவற்றின் பலம், பலவீனங்கள் பற்றி ஜனநாயகவாதிகளுக்குள் வாதங்கள் ஏற்படலாம். இவ்வாதங்கள் தொடர்பாக எமக்குள் வேறுபாடுகள் ஏற்படலாம். ஆனால் ஜனநாயகத் தத்துவத்தில் ஆட்சி பற்றிய இத்தகைய வாதங்கள் இருக்கின்றன என்பதில் எமக்குள் வேறுபாடு இருக்க முடியாது. இங்கு சுயாட்சிக்கான ஜனநாயக நியாயத்தில் ஆட்சி அலகு பற்றிய எவ்வித கருத்துக்களும் விவாதிக்கப்படவில்லை. அதாவது ஜனநாயகத் தத்துவத்தில் அரசியல் அலகு என்பது எடுகோளாகவே உள்ளது. எனவே அரசியல் அலகு பற்றிய வாதத்தினை நோக்குவதற்கு நாம் தேசியவாதத்தினை நோக்க வேண்டும்.**

ராம் மாணிக்கலிங்கம்

## தேசியவாத நியாயம்

சிலர் சுயாட்சிக்கான தேசியவாத நியாயத்தை ஜனநாயகத்திலிருந்து நேரடியாக எடுக்க முயல்கின்றனர். அதாவது தேசியவாத நியாயமும், ஜனநாயக நியாயமும் ஒன்றே என வாதிக்க முயல்கின்றனர். அவ்வாறானால் தேசியவாதிகள் ஜனநாயக உரிமைகட்காகப் போராடுகிறோம் என்று கூறாமல் ஏன் தேசிய இன உரிமைகட்காகப் போராடுகிறோம் எனக்கூறுகின்றனர்? அவ்வாறு கோருவதிலிருந்தே அவர்கள் மறைமுகமாக தேசியவாத நியாயமும், ஜனநாயகவாத நியாயமும் வேறு வேறு என்பதை ஏற்றுக்கொள்கின்றனர்.

இப்பகுதியில் சுயாட்சி பற்றிய தேசியவாத நியாயத்தை ஆராய்ந்து, அந்நியாயம் ஒரு புறத்தில் தனிநபர் சமத்துவத்தை ஏற்றுக் கொண்டு மறுபுறத்தில் அதனை மறுதலிக்கும் விதத்தையும் பார்ப்போம். அதே போல், தேசியவாத நியாயத்தினுள் பிற இனங்களின் உரிமைகளை மறுக்கும் கருத்து எவ்வாறு நுழைகின்றதையும் மேலும் பார்ப்போம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**'யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் 'Inside report' என்ற ஆங்கில இதழின் மார்ச் 29 ம் திகதிய வெளியீட்டில் வெளியிடப்பட்ட கட்டுரை கீழே மொழி பெயர்த்து தரப்படுகிறது. இது சமாதான முயற்சிகளின் தோல்விக்கான காரணங்கள் என்ன என்பதை ஆராய்கிறது. சமாதான முயற்சிகள் முறிவுற்று, மீண்டும் யுத்த சூழ்நிலை ஆரம்பமாகிய பின், விடுதலைப்புலிகளால் லண்டனிலிருந்து வெளியிடப்பட்ட பத்திரிகை அறிக்கையில் இக்கட்டுரையின் பெரும்பகுதி எடுத்தாளப்பட்டுள்ளது. எனவே இக்கட்டுரையை புலிகளின் தரப்பு நியாயங்களாகக் கொள்வதில் தவறில்லை எனலாம்.''**

# உரிமைகளும் சலுகைகளும்

சந்திரிகாவுக்கும் பிரபாகரனுக்குமிடையில் சமாதானப் பேச்சுவார்த்தைகளோடொட்டி நடைபெற்ற அண்மைக்காலக் கடிதங்களை நோக்குகையில் அரசினது அணுகுமுறை மற்றும் அதன் நிகழ்ச்சி நிரல் என்பன குறித்த சந்தேகங்கள் தமிழர்கள் மனதில் எழுவது நியாயமானதே. அரசாங்கத்தின் 'இரகசிய திட்டங்கள்' சிலவற்றினை இங்கு நோக்குவோம்.

நிகழ்ச்சி நிரல் 1: சந்திரிகா அரசாங்கத்தின் நிலைப்பாடு என்னவென்பது அவர் பிரபாகரனுக்கு எழுதிய அண்மைய கடிதத்தில் வெளிப்படுள்ளது.

'' **தமிழர்களுக்குப் போதியளவு சலுகைகளும், நலன்களும் வழங்கப்பட்டுள்ளன. மேலும், எதனையாவது வழங்குவது என்பது தேசிய பாதுகாப்பிற்கு பாதகம் உண்டாக்குவதாகும்''** என்று அவர் அக்கடிதத்தில் எழுதியுள்ளார். இது எல்லாச் சிங்கள அரசாங்கங்களுமே தமிழர் பிரச்சினையை அணுகும் போது கடைப்பிடித்த அதே இரகசிய நிகழ்ச்சி நிரலையே இவரும் கடைப்பிடிக்கிறார் என்பதை தெளிவாக்குகிறது..

தமிழர்கள் தமது அடிப்படை மனித உரிமைகளென கருதுகின்ற அனைத்தையுமே, சிங்கள அரசாங்கங்கள் தமிழருக்குச் செய்யும் சலுகைகள், சிறப்புரிமைகள் எனப் பொருள்படுத்துகின்றன. இது தமிழர் குறைகளுக்கு ஒரு யதார்த்தபூர்வமான அணுகுமுறையை மேற்கொள்வதற்கு பாரிய தடையாக எல்லாச் சிங்கள அரசாங்கங்களுக்கும் இருந்துவந்துள்ளன. தமிழர்களாகிய நாம் தற்போதைய அரசாங்கம் இப்பாரிய தடையை தாண்டிவிட்டதெனவும் அடிப்படை மனித உரிமைகளுக்கான தமிழர் கோரிக்கைகளை ஒரு சிறந்த முறையில் அணுகுமெனவும் நம்பிக்கை மேல் நம்பிக்கை வைத்தோம். ஆனால் சந்திரிகாவின் இறுதி அறிக்கையான 'சலுகைகள், நலன்கள் வழங்குவது தேசிய பாதுகாப்புக்கு இடர் உண்டாக்குவதாகும்' என்பது **சுய கௌரவமுள்ள தமிழர்கள் அனைவருக்குமே ஒரு பாரிய ஏமாற்றமாகும்.** அவர் (சந்திரிகா) சமாதானத்துடன் ஒப்பிடுகையில் இரண்டாம் பட்சமான விடயமாகக் கருதப்படக்கூடியவற்றின் செல்வாக்கிற்கு உட்பட்டவராகக் காணப்படுகிறார்.

**அரசாங்கம் ஒன்றில் தமது இரகசிய நிகழ்ச்சி நிரலில் உள்ளபடி தமிழர்கள் எதுவித உரிமைகளையும் கோர முடியாத இரண்டாந்தரப் பிரஜைகளே என்று கூறின், அவர்களுக்கு இலங்கையிலிருந்து பிரிந்து செல்லும் விருப்புத் தேர்வை வழங்க வேண்டும். அல்லது இந்நாட்டிலுள்ள மற்றைய எவரையும் போலவே அடிப்படை மனித உரிமைகளுடன் கூடியவர்களே தமிழர்கள் என்று மீண்டும் மீண்டும் கோரும் அவர்களது உரிமைக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ள வேண்டும்.**

தமிழர்களின் அடிப்படை உரிமைகளை அங்கீகரிப்பதும், வழங்கப்பட வேண்டியவற்றை வழங்குவதும், பெரும்பான்மைச் சிங்களவர்களை சங்கடத்திற்குள்ளாக்காத பெருந்தன்மை மற்றும் அருள்பாலிக்கும் பண்புகளாலும் தீர்மானிக்கப்படும் சலுகைகள், நலன்களாகக் கருதப்படுமானால் எந்தச் சுயகௌரவமுள்ள தமிழர்களாலும் சிங்களவர்களுடன் வாழ முடியாது.

முன்னைய ஜனாதிபதியான டீ.பி. விஜேதுங்கவின் பிரபல்யம் வாய்ந்த அறிக்கையான ''தமிழர்கள் சிங்கள மரத்தின் மீது படரும் கொடிகள்'' என்பதனை எல்லாச் சுய கௌரவமுள்ள பிரஜைகளுமே எதிர்த்தார்கள். அவ்வாறான முட்டாள்தனமான அறிக்கைகளிலிருந்து தூர விலகித் தேர்தல்களில் தெளிவாக அதற்கெதிரான தீர்ப்பை அளித்தனர். நாம் சந்திரிகாவிடமிருந்து ஏதாவது கொஞ்சம் நல்லதாக எதிர்பார்த்தோம். ஆனால் எமது நம்பிக்கை கருகத் தொடங்குகிறது.

**நிகழ்ச்சி நிரல் 2: மோதல் தவிர்ப்பை ஒரு யுத்த நிறுத்தமாக மாற்றாது இழுத்தடித்தது இராணுவ அச்சுறுத்தலுக்கு ஈடாகக் குன்றாதிருக்கச் செய்யவாகும்.**

மோதல் தவிர்ப்பு ஒரு யுத்த நிறுத்தத்தினையும் மேலும் உறுதியான சமாதானத்தையும் அடைவதை நோக்கிய ஒரு முதற்படியென மட்டுமே ஏற்றுக்கொள்ளப்பட்டது. தமிழர்கள் பொதுவாகவும், புலிகள் குறிப்பாகவும் சந்திரிகா அரசாங்கத்தின் நல்ல நோக்கங்களை நம்பியதுடன் நிலைநிறுத்தக்கூடிய சமாதானத்தையும், அரசியல் தீர்வொன்றை எட்டவும் பேசக்கூடியதான மிகவும் சாதகமான நிலைமைகளை அடைவதற்கு ஏதுவான அடுத்த உறுதியான படியான யுத்த நிறுத்தத்தை எதிர்பார்த்தனர்.

சந்திரிகா 61 % சிங்கள வாக்குகள் யுத்தத்துக்கு எதிரர்கக் கிடைத்ததாகப் பெருமிதல் கொண்டாலும் பிரபாகரனால் வட கிழக்கிலுள்ள 100 % தமிழர்கள் சமாதானத்திற்காக நிற்கிறார்கள் அவர்களின் உண்மைத் தேவை அதுவே என்று உரிமை கோரமுடியும். உண்மையில் சமாதானத்தில் அதிக ஆர்வமுள்ளவர்கள் யார்? யுத்தத்தினால் அவதியுற்று, மூச்செடுக்கத்திணறும் தமிழர்களா அல்லது யுத்தம் மிகுந்த செலவை ஏற்படுத்துகிறது, தமது சொகுசு வாழ்க்கைக்குச் சுமையானது என்பதால் சமாதானத்தைத் தெரிந்தெடுத்தவர்களுக்கா? **தமிழர்களிடத்தில் உள்ள சமாதானத்திற்கான தாகத்தை எவரும் சந்தேகிக்க முடியாது.**

அவ்வாறானதொரு நல்லெண்ணப் புரிந்துணர்வினால் மட்டுமே புலிகள் முதற்கட்டக் கைதிகளை விடுவித்தனர். அரசாங்கம் ஒரு பகுதிப் பொருளாதாரத் தடையை அகற்றிப் பதிலளித்ததன் மூலம் நம்பிக்கைகளைப் பெற்றுக்கொண்டது. ஆனால் தற்போதைய நிலை என்ன? **பழைய இராணுவக் கண்ணோட்டம் மீண்டுமொருமுறை இலங்கை அரசாங்கத்தை பற்றிப் பிடித்துள்ளதாகத் தெரிகிறது**

இந்த மோதல் தவிர்ப்பை மேலும் ஒரு உறுதியான யுத்த நிறுத்தமாக்கி அதை சமாதானத் தீர்வை நோக்கியதாக வளர்த்தெடுக்கும் அடுத்த கட்டத்தில் புலிகள் நாட்டம் கொண்டிருந்தாலும், அவ்வாறான புலிகளின் நடவடிக்கைகள் தொடர்பாக அரசாங்கம் கவலையற்று இருப்பதுடன், அவ்விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடல்களைக் கூட சந்தேகக் கண்ணோட்டத்துடன் பின் போட்டது. அரசாங்கத்தின் இரகசியக் காரணங்கள் அல்லது நிகழ்ச்சி நிரல்கள் எவை? யுத்தநிறுத்தத்தை எட்டாத தற்காலிக மோதல் தவிர்ப்பைத் தொடர்வதால், **அரசாங்கம் தமிழர்கள் தொடர்பான எல்லா விடயங்களுக்கும் இராணுவ ரீதியான நியாயப்படுத்தல் செய்வதற்காக யுத்த நிலைமையைத் தொடர்ந்து பேணவே ஆவல் கொண்டுள்ளது. தமிழர்களின் ஏதாவது கோரிக்கைகள் பற்றிப் பரிசீலிக்கும் போது, அரசாங்கத்தின் இறுதியும், தீர்க்கமானதுமான கேள்வி, அது இராணுவத்தின் யுத்த தந்திரோபாயத்தைப் (Strategy)** பலவீனப்படுத்துமா என்பதே. இராணுவத்தை கேட்டே அது முடிவெடுக்கிறது..



***நிகழ்ச்சி நிரல் 3:*** **சமாதானம் பேசுவதானது இராணுவ அச்சுறுத்தலொன்றுக்குக் கீழ் தமிழர்களை வைத்திருப்பதற்காகவேயாகும்**

உயர்ந்து வரும் யுத்தச் செலவீனங்களைக் கட்டுப்படுத்தவும், வெளிநாட்டு உதவிகளைப் பெறவும் மோதல் தவிர்ப்புக்கு உடன்பட்ட நிலையில் அரசாங்கம், தனது இரகசிய நிகழ்ச்சி நிரலான தமிழர்களின் வாழ்வுக்கான அடிப்படை மனித உரிமைகளை மறுத்தல், அதே சமயம் இராணுவ அச்சுறுத்தலொன்றை அவர்களின் மீது நிறுவுதல் என்பனவற்றைத் தொடர எண்ணியுள்ளது.

மோதல் தவிர்ப்பில் மட்டும் ஆர்வம் காட்டியதும், யுத்த நிறுத்தமொன்றிற்குச் செல்லாததும் ஏன் எனத் தற்போது தமிழர்களுக்கு மிகத் துலாம்பரமாகத் தெரிகிறது. அது (அரசாங்கம்) அரசாங்கத்திற்கும், எல்.ரி.ரி.ஈ.க்குமிடையிலான உறவு, மோதல் தவிர்ப்பு இருந்த போதும், இன்னும் யுத்தநிலையிலேயே உள்ளது எனத்தர்க்கித்தது. அத்துடன் அதனூடாகத் தமிழர்கள் மீதான தமது இராணுவ தந்திரோபாயங்களையும், அமுக்கத்தையும் தொடர்ந்து பேணுவதை நியாயப்படுத்தவும் முயன்றது.

தமிழர்களை குடா நாடொன்றினுள் சிறை வைத்திருப்பதுடன் அவர்கள் மீது இராணுவ அழுத்தத்தையும் பேணிக்கொண்டே அவர்களுடன் சமாதானத்தை பெருமிதமாக பேசிக்கொள்வதே அரசாங்கத்தின் தற்போதைய தந்திரமாகும். தமிழர்களாகிய நாம் கடந்த நாற்பதாண்டு காலமாக ஏமாற்றத்தின் பின் ஏமாற்றப்பட்டுக் கசப்பான பாடங்களைக் கற்றுள்ளோம். இன்னுமொருமுறை அவ்வாறான ஒரு நிலை ஏற்படுவதை அனுமதிக்க முடியாது.

***நிகழ்ச்சி நிரல் 4:*** **பிரச்சாரத்திற்காகவும், சர்வதேச உதவிக்குமாக தமது நிகழ்ச்சிநிரலை இழுத்தடித்தல்.**

சந்திரிகாவே சமாதானப் - பேச்சுக்களுக்கான நிகழ்ச்சி நிரலை அனுப்பினார். அதில் அவர் குறிப்பிட்டவையாவன, முதல் கட்டமாக வடக்கிற்கான பொருளாதாரத்தடையை படிப்படியாகத் தளர்த்துவது, குடாநாட்டினுள் சிறைப்பட்டிருக்கும் மக்களுக்கு / சனத்தொகைக்கு ஒரு பாதையைத் திறத்தல், வட.- கிழக்குக் கரைகளில் மீன்பிடிக்க அனுமதியளித்தல். இரண்டாம் கட்டமாக மட்டுமே, அதிகாரப்பகிர்வுத் திட்டத்தின் வடிவிலானதொரு அரசியல் தீர்வு பற்றிக் கலந்துரையாடல் என்பன முன்வைக்கப்பட்டது. மக்களின் உடனடிச் சுமைகளைக் குறைக்கும் அதேசமயம் ஈழத்திற்கு மாற்றீடாக அதிகாரப் பகிர்வுத் திட்டத்தை கலந்துரையாட முடியுமென்பதால் புலிகள் இந்நிகழ்ச்சி நிரலை முழுமையாக ஏற்றுக் கொண்டனர்.

ஆனால் கலந்துரையாடலின் பாதி வழியில் ஏற்றுக்கொள்ளப்பட்டு வர்த்தமானியில் **(Gazatted)** பிரசுரிக்கப்பட்டவற்றில் ஒரு பகுதியேனும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

வவுனியாவைக் கடக்கும் ஒவ்வொரு தமிழருக்கும், இராணுவத்தினர் எவ்வாறு இவற்றை கண்மூடித்தனமாக மறுத்தனர் என்று தெரிந்திருக்கும். ஆனால் **அரசாங்கம் தனது பிரச்சார இயக்கத்தை அமைத்துத் தென்பகுதிக்கும், விசேடமாக உதவி வழங்கும் நாடுகளின் தொடர்பு சாதனங்களுக்கும், பொருளாதாரத்தடை முழுமையாக நீக்கப்பட்டுவிட்டதாகவும், புலிகள் புதிய கோரிக்கைகளை விடுப்பதாகவும் ஆர்ப்பரிக்கிற பொய்களைக் கூறுகிறது.**

பழைய பாக்கிகளைக் கேட்பதானது புதிய கோரிக்கைகளாக ஒரு போதும் கொள்ள முடியாது. அதே போல் செயற்படுத்தப்படாத உறுதிகள் வழங்கப்படுவதால் என்ன பயன்? **புதிய கோரிக்கைகளை** முன்வைப்பது யார்? அரசாங்கம் அதன் நிகழ்ச்சி நிரலிலிருந்து பின் வாங்குவது மட்டும் புதிய கோரிக்கையில்லையா?

மக்களுக்கு மறுக்கப்பட்டுள்ள நாளாந்த வாழ்க்கை வசதிகளை வழங்குமாறு கோருவதையும், தமிழர்களின் வாழ்வின் மீது விதிக்கப்பட்டுள்ள மனிதாபிமானமற்ற பொருளாதாரத்தடையை நீக்குமாறு கோருவதையும் புதியதும், நியாயமற்றதுமான புதிய புதிய புலிகளின் கோரிக்கைகளாக அரசாங்க பொதுசன தொடர்பு சாதனங்கள் படம் போட்டுக் காட்டுகின்றன! ஆயினும், இவற்றாலெல்லாம் பல வருடங்களாகத் தமிழர்களின் மனித உரிமை மறுப்பைத் தொடர்வதை எப்படியும் நியாயப்படுத்திவிட முடியாது. அவ்விடயம் தொடர்பாக எந்தவொரு அரசாங்கமோ அல்லது யாராவது சிந்திக்கத் தெரிந்த ஒருவரோ வடக்கிலுள்ள தமிழர்களின் அடிப்படை வாழ் - தேவைகளை மறுதலிப்பதனை நியாயப்படுத்தி தர்க்கிக்க முடியுமா? வடபகுதிக்கான பொருளாதாரத்தடையானது மிகத் தெளிவான மனித உரிமைகள் மீறல் இல்லையெனில் அது பெரும்பான்மையின் சிறுபான்மை மீதான குரூரமானதும், மனிதாபிமானமற்ற அச்சுறுத்தலாகும். அவ்வாறாயின் இது என்ன? **தமிழர்களை இந்நாட்டின் பிரஜைகளாகக் கருதுவதாகக் கூறும் அரசாங்கத்தினால் அடிப்படைத் தேவைகளான**

→15

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# யுத்தம் யாருடைய தவறு?




''எமது அரசாங்கமோ, நானோ, எந்த நேரத்திலும், புலிகள் இயக்கம் சமாதானத்தை விரும்புகின்றதென நினைக்கவில்லை. புலிகள் சமாதானத்திற்காக, அதாவது ஜனநாயக முறையில் செயல்பட விரும்புகிற ஒரு இயக்கமல்ல என்று எங்களுக்குத் தெரியும்.''

'' புலிகள் இயக்கம் பயன்படுத்தி வந்த உத்தி படுகொலையோடு தொடர்புடைய ஒன்றாகும். அந்த இயக்கமானது ஜனநாயக முறையிலும், நியாயமான முறையிலும் அறிவார்ந்த முறையிலும் யோசனை செய்து தமது மக்களது தேவைகளை நன்றாக ஆராய்ந்து, முடிவெடுக்கக்கும் பகுத்தறிவு கொண்ட நிலைக்கு வருதல் அரிதான காரியமென்றும் எமக்குத் தெரியும்.

எமது அரசாங்கத்தால் மேற்கொள்ளக்கூடிய சகல முயற்சிகளும் எடுக்கப்பட்டன. எமது பிரதான செயல்முறை பிழையற்றது என்றுதான் இப்பொழுதும் நினைக்கிறேன்.







வடக்கில் யுத்தம் ஏற்படும் போதெல்லாம் வடபகுதி மக்கள் பெரிதும் இடர்ப்படுவர். நாங்கள் அதனை ஒப்புக்கொள்கிறோம். அது பற்றி மிகவும் வருந்துகிறோம். அதனை தடுப்பதற்கு எமது அரசாங்கம் சகல முயற்சிகளும் எடுத்தது. யுத்தத்திற்கு ஒரு தீர்வாகவும், இனப்பிரச்சினைக்குத் தீர்வாகவும் நாங்கள் தயாரித்திருந்த சமாதான யோசனைகள் பற்றியும் அரசியல் யோசனைகள் பற்றியும் கலந்துரையாடுவோம் என்ற நிபந்தனையை மாத்திரமே நாங்கள் முன்வைத்தோம். ஆனால் அவர்களோ தமது நிபந்தனைகளுக்கு இணங்குவார்களாயின் மட்டுமே சமாதானப் பேச்சுவார்த்தைகளைப் பற்றி ஆலோசிக்க முடியும் என்று கடிதங்களில் குறிப்பிட்டிருந்தார்கள்.

சிலர் எதிர்பார்ப்பது போல ஒரு நாளில், இரண்டு நாட்களில், ஒரு வாரத்துக்குள், ஒரு மாதத்துக்குள் வடபகுதியில் சமாதானத்தை ஏற்படுத்த முடியும் என நான் நினைக்கவில்லை. நாங்கள் இயன்றவரை சமாதானத்தை ஏற்படுத்துவற்கு சகல நடவடிக்கைகளும் எடுத்தோம். சமாதானத்திற்கு முன்னுரிமை வழங்கினோம். ஆனால் புலிகள் சமாதானத்தை ஏற்றுக்கொள்ள தயாராக இல்லை என்பது இன்றைய நிலையைப் பார்க்கும் போது தெளிவாகின்றது.

புலிகள் இயக்கம் மீன் பிடிப்பு தடையினை நீக்குமாறு கேட்ட பொழுது, அந்தக் கோரிக்கை மீனவ மக்களது வசதிக்காக செய்யப்பட்ட கோரிக்கை அல்ல என்பதையும், புலிகளின் இராணுவ பலத்தை அதிகரிப்பதற்கு முன்வைக்கப்பட்ட கோரிக்கை என்பதையும் நாங்கள் அறிவோம். பொருட்களுக்கு நாங்கள் விதித்திருந்த தடகளை அகற்றினோம் எனினும், தாண்டிக்குளத்தில் இராணுவத்தினர் சோதனை செய்துதான் அனுப்புகின்றனர். அதற்கும் புலிகள் பிரதான இரு போக்குவரத்து பாதைகளுக்குத் தடை விதித்தமையே காரணமாகும். நாம் பல தடவை கேட்டும் அதை அவர்கள் நீக்கவில்லை.

''கொழும்பில் கடந்த ஆறு மாதங்களுக்குள் குண்டு வெடிப்புக்கள் இடம் பெற்றன. பாரிய அழிவுகள் ஏற்பட்டன. எமது சிங்களத் தலைவர்கள் கொல்லப்பட்டனர். சிங்கள சகோதரர்கள் கொல்லப்பட்டனர். அத்தனை கொடுமைகள் செய்த பின்னணயில் விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் சமாதானத்தை ஏற்படுத்திக்கொள்வதற்கு எங்களுக்கு அந்த ஆணையை வழங்கிய சிங்கள மக்களுக்கு தமிழ் மக்கள் தமது மரியாதையை செலுத்த வேண்டுமென நான் முதலாவதாக கூற விரும்புகிறேன். தமிழ் மக்களும் என்று மில்லாதவாறு சமாதானத்திற்கான ஆணையை வழங்கியுள்ளார்கள். சமாதானத்திற்கான சூழல் ஒன்று உருவானது. இவற்றையெல்லாம் ஒரு தலைப்பட்சமாக புலிகள் இயக்கம் மட்டுமே சிதறடித்தது.''

இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க பத்திரிகையாளர் லூசியன் ராஜ கருணாநாயக்கவுடன் ஒழுங்கு செய்யப்பட்ட கலந்துரையாடல் பேட்டியில் தெரிவித்துள்ளார். இது ரூபவாஹினியிலும், வா. னொலியிலும் மும்மொழிகளிலும் ஒலி/ஒளிபரப்பப்பட்டது.

''தமிழ் மக்களுக்கு நீதி வழங்குவோம் என்ற கோஷத்துடன் ஆட்சிக்கு வந்த சந்திரிகா அரசு, முந்திய ஆட்சியாளர் திணித்துவிட்ட இந்த (பொருளாதாரத்தடை போன்றவை) அநீதிகளை தாமாகவே நீக்கிவிட்டிருக்கலாம். ஆனால் சந்திரிகா அரசு அப்படிச் செய்யவில்லை.

'' நாம் முன்வைத்த கோரிக்கைளை தமிழ் மக்களின் பிரச்சினைகள் என்று பார்க்காமல், விடுதலைப் புலிகளின் நிபந்தனைகளா கருதியது. அது மட்டுமல்ல. இந்தப் பிரச்சினையை இராணுவக் கண்ணோட்டத்துடன் அணுகியது.''

''பேச்சுவார்த்தையின் போது சில வாக்குறுதிகளை அரசு தந்தது. ஆனால் அவற்றை நடைமுறைப்படுத்த தயங்கியது. இந்த விடயத்தில் அரசாங்கம் நேர்மையாகவும் உண்மையாகவும் நடந்து கொள்ளவில்லை. பழைய அரசுகள் போன்று ஏமாற்று வித்தையைக் கடைப்பிடித்தது.

'' வாக்குறுதிகள் வேறு, அவற்றை நடைமுறைப்படுத்துவது என்பது வேறு. ஜனாதிபதி சந்திரிகா சில வாக்குறுதிகளைத் தந்தார் என்பது உண்மை. ஆனால் அவற்றை நடைமுறைப்படுத்த ஆக்கபூர்வமாக நடவடிக்கைகளை எடுக்கவில்லை. வாக்குறுதிகளைத் தருவது, பின் செயற்படுத்தாமல் இழுத்தடிப்பது. ஒப்பந்தங்களை செய்வது பின் மீறுவது. இப்படியாகத்தான் காலம் காலமாக சிங்கள அரசுகள் தமிழினத்தை ஏமாற்றி வந்தன. இது வரலாறு. சந்திரிகா அரசும் இதற்கு விதிவிக்ககாலதல்ல.''

''யுத்த தவிர்ப்பு முறிவின் பின் மீண்டும் பொருளாதாரத் தடைகளை விதித்த நடவடிக்கை'' ஒன்றைத் தெட்டத் தெளிவாகக் காட்டுகிறது. அதாவது தமிழர் பிரச்சினையை சம்பந்தப்பட்ட மட்டில் இந்த அரசுக்கும் பழைய ஐ.தே.க. அரசுக்கும் மத்தியில் அடிப்படை வேறுபாடுகள் இல்லை. முந்திய அரசு இழைத்த அநீதியையே இந்த அரசும் தொடர்கிறது.

''தமிழ் மக்கள் நலனில் இந்த அரசுக்கு உண்மையான அக்கறை இருந்தால் இந்தத் தடைகளை மீண்டும் திணித்திராது. தமிழரின் அவலமான பிரச்சினைகளை அரசியல் நகர்வுகளுக்குப் பயன்படுத்துவதிலும் இராணுவ நலன்களைப் பேணுவதிலுமே அரசு அக்கறை கொண்டிருக்கிறது என்பதையே இந்த நடவடிக்கை எடுத்துக் காட்டுகிறது.''

'' புலிகளுக்கு சலுகைகள் வழங்கியதாக ஜனாதிபதி கூறுவது தவறு. நாங்கள் எமது மக்களின் பிரச்சினைகளை முன்வைத்தோமே. தவிர சலுகைகள் எதையும் கேட்கவில்லை. மக்களுக்கு மறுக்கப்பட்ட உரிமைகளை வழங்குவதை சலுகைகள் என்று சொல்ல முடியாது.

எமது சமாதானக் கதவுகள் இன்னும் திறந்தே இருக்கின்றன. அரசின் அணுகுமுறையில் நாம் அதிருப்தியும் ஏமாற்றமும் கொண்டிருக்கிறோம். என்பது உண்மை.

சமாதானத்திற்கான முன் முயற்சிகளை அரசாங்கமே எடுக்க வேண்டும்''.

எமது மக்கள் மீது மீண்டும் திணிக்கப்பட்டுள்ள பொருளாதார, மீன்பிடித்தடைகளை அரசாங்கம் முதலில் அகற்றிவிட வேண்டும். இந்தத் தடைநீக்கத்தை நடைமுறைப்படுத்திக் காட்ட வேண்டும். இதனைப் புலிகளுக்கு வழங்கும் சலுகைகளாக நோக்காமல் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதாக கருத வேண்டும்.

......... எமக்கும் எமது மக்களுக்கும் சந்திரிகா அரசின் மீதிருந்த நம்பிக்கை இழந்து போயிற்று. இதனால் சமாதானப் பேச்சுக்களை தொடர்வதில் அர்த்தமில்லை என்று முடிவுக்கு நாம் வந்தோம்.

- இவ்வாறு பிரபாகரன் பி.பி.சி.யுடனான தனது பேட்டியில் தெரிவித்துள்ளார்.



தொகுப்பு:
H.A.S.செல்லம்மா

படங்கள் நன்றி: Counter Point

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இனப்பிளவு: ஒரு பிரித்தானிய சதி!

1915 முஸ்லிம் - சிங்கள கலவரத்தைக் காரணமாக வைத்து ஏகாதிபத்திய, எதிர்ப்புணர்வை வெளிப்படுத்திய மதுவிலக்கு இயக்கம் நசுக்கப்பட்டது. அதன் தலைவர்கள் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டார்கள். சிலர் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். முதலாம் உலகமகாயுத்தம் வெடித்திருந்த ஆபத்தான சூழலில் அதையும் பொருட்படுத்தாமல் இங்கிலாந்துக்கு உயிரைப்பணயம் வைத்து பொன்.இராமநாதன் சென்று சிங்களத் தலைவர்களின் விடுதலைக்கும், சிங்களவர்கள் அச்சம் நீங்கி வாழ்வதற்கும் வழிவகுத்தார். நாடு திரும்பிய அவரை கொழும்பு துறைமுகத்திலிருந்து தேரில் ஏற்றி அத்தேரை சிங்களத்தலைவர்கள் வடம்கட்டி இழுத்து நன்றியையும் மகிழ்ச்சியையும வெளிப்படுத்தினர். இதைவிட அநகாரிக தர்மபாலா தலைமையிலான பௌத்த மறுமலர்ச்சி இயக்கமும் ஆறுமுக நாவலர் தலைமையிலான இந்து மறுமலர்ச்சி இயக்கமும் ஏகாதிபத்திய எதிர்ப்பு அணியில் கை கோர்த்துச் சென்றன.

இதற்கு மானிங் முற்றுப்புள்ளி வைத்தார். அவரது 1920 - முதலாவது யாப்பு சீர்திருத்தம் அறிமுகப்படுத்தப்படும் வரைக்கும் உத்தியோகத்தர்கள் அல்லாத பிரதிநிதிகளின் எண்ணிக்கை பழைய சட்ட சபையில் அநேகமாக சமமாக இருந்தது. ( ஐரோப்பியர் - 3; சிங்களவர் - 1; தமிழர் - 1; பறங்கியர் - 1) ஆனால் மானிங்கின் தேர்தல் முறையின்படி பிரதேசவாரியான தேர்தல் தொகுதிகளிலிருந்து 13 சிங்களவரும், 3 தமிழரும் தெரிவாகினர். இனவாரியான பிரதிநிதித்துவத்தின் சமநிலை பாதிக்கப்பட்டதும், இலங்கை தமிழ் தலைமைகள் முதற்தடவையாக தமது நிலையை உணரத்தொடங்கின. பொன்.அருணாசலம் நிலைமையின் பாரதூரத்தை முன் உணர்ந்தார். 1917ல் இலங்கை பல்லின தலைமையின் ஒற்றுமைச் சின்னமாக அவரால் உருவாக்கப்பட்ட இலங்கை தேசிய காங்கிரசின் தலைமைப்பதவியிலிருந்தும் அவ்வமைப்பை விட்டும் 1921ல் அவர் வெளியேறினார். மேல் மாகாணத்தில் தமிழருக்கென தனியான தேர்தல் தொகுதியொன்றை அமைத்துத் தருவதாக உறுதியளித்த சிங்கள தலைவர்கள் (ஜேம்ஸ் பீரிசும், ஈ.ஜெ.சமரவிக்கிரமவும்) பின்னர் அதற்கு எதிராக செயற்பட்டமை இதற்கான உடனடிக் காரணமாக இருந்தாலும் ஜேம்ஸ் பீரிசின் கை ஓங்கும் போதே சிங்களத் தலைமைகள் தமிழ் தலைமையை நிராகரித்து தமது ஆதிக்கத்தை நிலை நாட்டும் பிரயத்தனங்களும் போக்கும் மெல்ல மெல்ல தலையெடுத்து உறுதியாக வளர்ந்து வந்தன.

ஆயினும் பெருந்தோட்ட தொழிலாளருக்கு எதிராக 1930கள் வரை இனவாத செயற்பாடுகள் இடம் பெறவில்லை. அநகாரிக தர்மபாலா போன்ற பௌத்த வாத தலைவர்கள் ''ஆங்கில நிர்வாகம் சாதியில் குறைந்த தென்னிந்தியர்களை இத்தீவுக்குள் வருவதற்கு அனுமதித்துள்ளது'' என குறைப்பட்டுக் கொண்டாலும் கூலிகள் என இழிவாகக் குறிப்பிட்டாலும் கூட 30களில் உருவான இந்திய எதிர்ப்பு இயக்கம் நகர்ப்புற இந்திய வர்த்தகர்களுக்கு எதிராக வளர்ந்து நகர்ப்புற இந்திய தொழிலாளர்களுக்கும் உத்தியோகத்தர்களுக்கும் எதிராக பரவியதே தவிர தோட்டத்தொழிலாளர்களுக்கெதிராக அது இருக்கவில்லை.

இதற்குப் பல காரணங்கள் இருந்தன. பெரும்பாலான சிங்கள அரசியல்வாதிகள் தோட்ட சொந்தக்காரராக இருந்தனர். நகர்ப்புற இந்திய முஸ்லிம் வர்த்தகர்களுடன் போட்டியிட்ட புதிய சிங்கள வர்த்தக அணியொன்று உருவானமையே முஸ்லிம்களுக்கும் இந்தியர்களுக்கும் எதிரான சிங்கள இனவாதம் தோன்றியதற்கான அடிப்படையாகும். இப்புதிய சிங்கள வர்த்தக அணி பெருந்தோட்ட நகரங்களிலும் வர்த்தகப் போட்டியில் இந்திய முஸ்லிம் வர்த்தகர்களுடன் மோதிக்கொண்டிருந்தாலும் தோட்டத்தொழிலாளர்களுடன் அவர்கள் முரண்படவில்லை. பாதை அமைத்தல், கட்டிடம் நிர்மாணித்தல், தச்சுவேலை, கூடை தயாரித்தல், தேயிலைப் பெட்டி தயாரித்தல் போக்குவரத்துப் போன்ற பல்வேறு தொழில் வருமான வாய்ப்புக்கள் பெருந்தோட்டங்களின் உருவாக்கத்தால் ஏற்பட்டமை. இவற்றால் கொந்தராத்துக்காரர்களும் சிங்கள கைவினைஞர்களும் பெரிதும் பலனடைந்தனர். உதாரணமாக மோட்டார் வாகனங்கள் இன்னும் பிரதான போக்குவரத்து சாதனமாக மாறாத அக்காலகட்டத்தில் மாட்டு வண்டிகளே கோப்பி, தேயிலையை ஏற்றிச் செல்லும் பிரதான பணியைச் செய்தன. 1901ல் பதினேழாயிரம் மாட்டு வண்டிகள் இலங்கையில் இருந்தன. 1910ல் இத்தொகை 23,000ஆயிரமாக அதிகரித்தது. இவற்றில் சுமார் 75% மானவை பெருந்தோட்டப்பகுதிகளிலேயே இருந்தன. இவை சிங்களவரின் கட்டுப்பாட்டிலேயே முழுக்க முழுக்க இருந்தன.

1920 களின் பின்னர் எண்ணிக்கையிலும் சமூக - பொருளாதார பலத்திலும் தமிழ் தலைவர்களைப் பின்தள்ளிக்கொண்டு புதிய சிங்கள மேல்தட்டு அணியொன்று உருவானதைத் தொடர்ந்து 'பிரித்தானியரிடமிருந்து கிடைத்த அரசியல் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வதிலும் பொது சேவைப் பதவிகள் பெறுவதிலும்' இருதரப்பினரிடையேயும் கடும் போட்டி ஏற்படத்தொடங்கியது. ஆரம்பத்தில் தமிழ் தலைவர்களின் விசுவாசத்தைப் பெறுவதற்கு முயன்ற பிரித்தானியர் பின்னர் விசுவாமிக்க சிங்கள தலைவர்களை இனங்கண்டு அவர்களை ஆதரிக்கத் தொடங்கிய போது ஏமாற்றமடைந்த தமிழ் தலைமைகள் மிதவாதபாணியில் தமது எதிர்ப்பை வெளிக்காட்டத் தொடங்கினர்.

> பலம் வாய்ந்த இரு சமூகத்தின் தலைவர்கள் ஒன்றுபட்டிருப்பது தமது நலனுக்கு ஆபத்தானது என்பதை 1915 இன் பின்னர் உணர்ந்து கொண்ட பிரித்தானியரின் இனப்பிளவுகளை ஆழப்படுத்தும் பணியை 'மானிங்' தொடக்கி வைத்தார்; டொனமூர் அதனை முடித்து வைத்தார். பிரதேசவாரியான பிரதிநிதித்துவ முறையின் மூலம் இப்பணி சாத்தியமானது.

## டொனமூர் அரசியல் யாப்பு – 1931

''மானிங் சீர்திருத்தங்கள் தமிழ் - சிங்கள தலைவர்களுக்கிடையிலான பிளவை ஆழப்படுத்தியது. ஆரம்பத்தில் கடைப்பிடிக்கப்பட்ட இனவாரி பிரதிநிதித்துவ முறையின் கீழ் இனப்பிளவுகளை விட சாதிபிளவே முதன்மை வகித்தது. சாதி சிங்கள - தமிழ் உயர்வகுப்பு தலைவர்களை இணைத்து வைத்திருந்தது.


பிரதேசவாரியான பிரதிநிதித்துவம் தமிழ் தலைவர்களின் செல்வாக்கை குறைத்து தமது ஆதிக்கத்தை நிலைநிறுத்தும் என்பதனால் சிங்களத் தலைவர்கள் அதனை வலியுறுத்தினர். தமிழ் தலைவர்கள் இனவாரி பிரதிநிதித்துவத்தைக் கோரினர். சிங்களத் தலைமைக்கு சாதகமான பிரதேசவாரி பிரநிதித்துவம் தமிழர்களை நிரந்தரமான சிறுபான்மையாக, பிரதிநிதிகள் சபையில் மாத்திரமல்ல, முழு அரசியலிலும் ஆக்கியதன் மூலம் இனப்பிளவு வெளிப்படையான ஒன்றாகவும் ஆழமானதாகவும் ஆகிவிட்டது. இதற்கு முன்னர் இது சிங்கள - முஸ்லீம் கலவரம் வெடித்த போது கூட அவ்விரு சமூகங்களுக்கிடையிலான பிளவு இவ்வளவு ஆழமாக சமூகவடுவை ஏற்படுத்தவில்லை. ஏனெனில் அது அரசியல் ஆதிக்கத்திற்கான போட்டியை அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை. தமிழ் - சிங்கள ஆளும் வர்க்கத்திற்கிடையே ஏற்பட்ட பிளவு இரு பெரும் அணிகளுக்கிடையிலான பிளவாக இருந்தது.

பலம் வாய்ந்த இரு சமூகத்தின் தலைவர்கள் ஒன்றுபட்டிருப்பது தமது நலனுக்கு ஆபத்தானது என்பதை 1915 இன் பின்னர் உணர்ந்து கொண்ட பிரித்தானியரின் இனப்பிளவுகளை ஆழப்படுத்தும் பணியை 'மானிங்' தொடக்கி வைத்தார்; டொனமூர் அதனை முடித்து வைத்தார். பிரதேசவாரியான பிரதிநிதித்துவ முறையின் மூலம் இப்பணி சாத்தியமானது.

**பி.ஏ.காதர்**




- மகாஜனன்



## கானல் நீர் – (கவிதைத் தொகுதி)

**அ. கந்தசாமி**

**நான்காவது பரிமாணம் வெளியீடு**

நேரிடையாகச் சொல்வதெனில், திருப்தி தராத கவிதைத் தொகுதிதான் இது. கவிதைகள் இத்தொகுப்பினில் கானல் நீராகவும், கனவாகவும் போய்விட்டது. தொகுப்பிற்குப் பொருத்தமான தலைப்பு.

ஓசையைக் கவனித்ததனால், கவித்துவத்தைத் தொலைத்து விட்ட கவிதைகள் இவருடையவை. இதனைக் கவனியுங்கள் - '' **பகற் காலங்கள்/ குறைப்பிரசவக்/ குழந்தையைப் போல/ மிகவும் சோம்பலாக/ நெட்டிச் சுள்ளிகள்/ முறிபடும் ஓசைகளில்/ நிமிடங்களைக் கரைத்து....**''

இப்படியே போகின்றன இவரது எல்லாக் கவிதைகளும். இடையிடையில் பலவரிகளை உதாரணமாகத் தரலாம். எழுமாற்றாக ஒரு பக்கத்தைப் புரட்டிய போது கிடைத்த கவிகள் இவை:

'' **பிரபஞ்சப் பெருவெளியில்/ மின்னல் இழைபரப்பி/ ஒரு வையம் தேடும்/ துளிவிந்தின் சிதறல்கள்/ கோலோச்சும் வட்டங்கள்..**''/

மோனைத் தொடருக்காக கவிதை தன் உயிரை இழந்து விடுகின்றது. எத்தகைய அனுபவத்தையும் தொற்ற வைக்கத்தவறி விடுகின்றன அ. கந்தசாமியின் கவிதைகள்.

தொகுப்பினது தலைப்புக் கவிதையும் அவ்வாறானதே. பத்தோடு பதினொன்றாகப் போய் விடுகிறது.

குறை சொல்வதற்காகத்தான் இத்தொகுப்புப்பற்றி இப்பத்தியில் எழுத முனைந்ததல்ல/ இத்தொகுப்பு ஏன் குறைவு பட்டு நிற்கின்றது எனும் வினாவை எழுப்பி சில கருத்துக்கள் கூறலாம். வைரமுத்து முதலான தமிழ் நாட்டுக் கவிஞர்களின் பாதிப்பு இவரிடம் காணப்படுகின்றது. வைரமுத்து தரமான கவிஞரா எனக் கேள்வி எழுப்பினால் பதில் இல்லை என்றுதானே கூறமுடியும். அப்படியான ஒருவரது பாதிப்புக் கொண்ட கவிதை எப்படி சிறப்பாக அமைய முடியும்? இதனால் அ.கந்தசாமியினது கவிதை தோற்றுப்போகின்றது.

இவரது தொகுப்பில் அனுபவங்களும், கற்பனையும் விரவிக் காணப்படுகின்றது. இத்தகைய அனுபவங்களும், கற்பனையும் இணைந்து கவிதையாகவும் அவை வெளிப்பட்டிருந்தால் இத்தொகுப்பு பேசப்படும் ஒன்றாக அமைந்திருக்கும்.

'' **கூடல் நகரில்/ கூத்தியாளோடு/ குதித்தாடும் நாயகன் மேல்/ நாலு வசவெடுத்து/ நல்லதொரு/ பாட்டொன்று நான் பாட வேண்டும்./ அம்மா கலைவாணி/ ஆளிழுக்க முடிந்தால்/ தூளடிக்கத் தெரிந்தால்/ ஏவறைகள் விடுவதையே/ எழுத்தாக்க முடிந்தால்/ பாட்டொன்று கேட்டா/ பாவம் உன்னிடத்து/ பல்லிளித்து நிற்பேன்?**''/ என்று வரிகளில் கவிதைக்கான முயற்சி தென்படுகிறது.

இலங்கையிடமிருந்தும் புலம் பெயர்ந்தோரிடத்திலிருந்தும் தரமான கவிதைகள் வெளிவரும் சூழலில் அ.கந்தசாமியும் அவற்றை வாசிப்பதனால் பயன் பெறலாம். தொகுப்பு அழகாக வந்திருக்கின்றது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மத்திய மாகாணசபை ஆசிரியர் இடமாற்ற விவகாரம்:

## –மலையக கல்வியில் யாருக்கு அக்கறை?

**-வேலுச்சாமி**

மத்திய மாகாணசபைக்கு உட்பட்ட தோட்டப்பகுதி ஆசிரியர்களுக்கான இடமாற்றங்களை மேமாதம் 2 ஆம் திகதிக்கு முன்னர் முடித்துவிட வேண்டும் என மத்திய மாகாண கல்வி, உள்ளூராட்சி, காணி அமைச்சின் செயலாளர் எச்.எம்.பீ எல்கடுவ மத்தியமாகாண பிரதிகல்வி இயக்குனர்களுக்கு அனுப்பிய சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளார். இச்சுற்றறிக்கையைத் தொடர்ந்தும் தவணை விடுமுறை முடிந்து பாடசாலைகள் திறக்கப்பட்டதைத் தொடர்ந்தும் மத்தியமாகாண தமிழ் கல்வி அமைச்சர் புத்திரசிகாமணிக்கும் மலையகமக்கள் முன்னணியினருக்கும் இடையிலான பனிப்போர் மீண்டும் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது.

தோட்டப்பகுதி பாடசாலைக்கென நியமனம் பெற்றவர்களில் பலர் தற்போது தோட்டப்பிரதேச நகர்ப்புறங்களில் பணியாற்றுகின்றனர். அவர்களின் நியமனம் தோட்டப்புற பாடசாலைகளாதலால் அவர்கள் மீளவும் தோட்டப்பகுதி பாடசாலைக்கு சென்றே கடமைகளைப் பொறுப்பேற்க வேண்டும் என்பது அமைச்சர் புத்திரசிகாமணியின் வாதம். மேற்படி ஆசிரியர்களில் நியமனம் பெற்றபின் பட்டதாரிகள், பயிற்சிபெற்ற ஆசிரியர்கள் இருப்பின் அவர்கள் தரமுயர்த்தப்பட்ட தோட்டப்புற பாடசாலைகளில் கற்பிப்பதற்கும் ஒழுங்குகள் செய்து தரப்படும் எனவும் இது தொடர்பாக புத்திரசிகாமணி குறிப்பிட்டுள்ளார்.

மறுபக்கத்தில் தோட்டப்பிரதேசத்தை தோட்டப்புறம் தோட்ட நகர்ப்புறம் எனப்பிரிக்க முடியாது என்றும் இருபகுதி பாடசாலைகளிலும் தோட்டங்களைச் சேர்ந்த மாணவர்களே கல்வி கற்கின்றனர் என்றும் இப்பாடசாலைகளில் இருந்து எவ்வித மாற்றீட்டு வசதிகளும் இல்லாமல் ஆசிரியர்கள் இடமாற்றப்படுவது அப்பாடசாலை மாணவர்களின் கல்வியைப் பாதிக்கும் என்றும் மலையக மக்கள் முன்னணியினர் குறிப்பிடுகின்றனர். மேலும் இவ்வாசிரியர்கள் நீண்டகாலம் தோட்டப்பகுதிகளில் பணிபுரிந்தே நகர்ப்புறத்திற்கு வந்துள்ளனர். இதன் பின்னரும் அவர்களை மீண்டும் தோட்டப்பாடசாலைகளுக்கு அனுப்புவது அவர்களை அவமானப்படுத்துவதாக அமையும் என்றும் குறிப்பிடுகின்றனர். எல்லாவற்றுக்கும் மேலாக இவ் ஆசிரியர்களில் பெரும்பாலானவர்கள் மலையக மக்கள் முன்னணியின் ஆதரவாளர்கள் என்பதால் தான் பழிவாங்கப்படுகின்றனர் என்றும் குறிப்பிடுகின்றனர். இடமாற்றப்பட்டவர் பட்டியலில் மலையக மக்கள் முன்னணி தலைவர் சந்திரசேகரனின் மனைவி, சகோதரி என்போர்களும் அடங்குகின்றனர் எனச்செய்திகள் தெரிவிக்கின்றன. இடமாற்ற முயற்சிகள் அம்பேகமுவ பகுதியில் அதுவும் பொகவந்தலாவ பகுதியில் இருந்து ஆரம்பிக்கப்பட்டதே தமது ஆதரவுத்தளத்தை உடைப்பதற்குத்தான் என இவர்கள் மேலும் குறிப்பிடுகின்றனர்.

மேலோட்டமாகப் பார்க்கின்ற போது இப்பிரச்சினை மலையக ஆசிரியர்களுடைய பிரச்சினையைப் போலவும் அது தொடர்பாக மலையக மக்கள் முன்னணிக்கும், புத்திரசிகாமணி + இ.தொ.கா. குழுவினருக்கும் இடையிலான சச்சரவு போலவுமே தோன்றும். ஆனால் நுணுக்கமாக அவதானிக்கின்ற போதே மலையக சமூகம் இதனால் எதிர்நோக்கப்போகும் அரசியல் அபாயத்தைக் கண்டு கொள்ள முடியும்.

மலையக சமூகம் அதன் வாழ்நிலையையொட்டி இன்று இரண்டாகப் பிரிந்துள்ளது. தோட்டங்களில் தொழிலாளர்களாக தொழில்புரியும் தோட்டசமூகம், தோட்டங்களுக்கு வெளியே நகர்ப்புறங்களில் தங்கள் வாழ்நிலைகளை அமைத்துக்கொண்ட நகர்ப்புற சமூகம் என்கின்ற இரண்டுமே அப்பிரிவுகளாகும். இவற்றில் நகர்ப்புற சமூகம்



> **1. முழு மலையகத்திற்கும் தேவையான போதிய ஆசிரியர்கள் உடனடியாக நியமிக்கப்படல் வேண்டும்.**
> **2. பயிற்சி பெற்ற ஆசிரியர்களை உருவாக்கும் வகையில் ஸ்ரீபாத கல்விக்கல்லூரி உடனடியாக திறக்கப்படவேண்டும்.**
> **3. இடமாற்றங்களில் அரசியல் பழிவாங்கல்கள் இருக்கக்கூடாது.**
> **4. இடமாற்றத்துக்குள்ளான பாடசாலைகளில் ஆசிரியர் வெற்றிடங்களுக்கு உடனடி மாற்று ஏற்பாடுகள் செய்யப்படல் வேண்டும்.**
> **5. தோட்ட மக்களையும் நகர மக்களையும் பிளவுபடுத்துகின்ற எந்தச் செயற்பாட்டையும் இல்லாமல் செய்தல் வேண்டும்.**

ஓரளவு படித்த விழிப்புணர்வு கொண்ட சமூகமாக உள்ளது. சிறு வர்த்தகர்கள் ஆசிரியர்கள் கடைச்சிப்பந்திகள் சாரதிகள், வேறு அரச கூட்டுத்தாபன ஊழியர்கள் என்போர்கள் இவற்றுக்குள் அடங்குகின்றனர். இவர்களின் பிள்ளைகள் நகர்ப்புறம் சார்ந்த பாடசாலைகளிலேயே கற்கின்றனர். இச்சமூகத் தொகுதி இந்தியாவிலிருந்து தொழிலாளர்கள் அல்லாதவர்களாக இலங்கைக்கு வந்தவர்களையும், தோட்டங்களில் இருந்து ஓரளவு கல்விகற்று வேறு தொழில் நாடி வெளியேறியவர்களையும் உள்ளடக்குகின்றது.

தோட்டங்களில் அதன் நிர்வாக அமைபபு வடிவத்தின் இறுக்கம் காரணமாக தோட்டங்களுக்கு வெளியே உள்ளவர்களுக்கும், தோட்டத்தில் வசிப்பவர்களுக்கும் இடையே தொடர்புகள் மிகக் குறைவு இதனால் இரண்டும் உறவுகள் குறைந்த வெவ்வேறு சமூகத் தொகுதிகளாகவே வளர்ந்து வருகின்றன. தோட்டங்களைவிட்டு வேறு தொழில் நிமித்தம் வெளியேறியவர்கள் கூட தோட்டங்களோடு உறவுகளை வைத்துக்கொள்ள தோட்ட அமைப்பு வடிவம் அனுமதிப்பதில்லை.

இவ்விரு சமூகத்தொகுதிகளிலும் நகர்ப்புற சமூகம் ஓரளவு விழிப்புணர்வு கொண்ட சமூகமாக இருப்பதனால் இ.தொ.காவின் ஏமாற்று அரசியல் அவர்கள் மத்தியில் நீண்டகாலம் நிலைக்க முடியவில்லை. அவர்கள் முன்னேறிய அரசியலையும் அதற்கான அமைப்பையும் எதிர்பார்த்து நின்றனர். மலையக மக்கள் முன்னணி ஓரளவுக்காவது அதனை நிறைவு செய்யமுன்வந்த போது அதன் பின்னால் அணிதிரளத் தொடங்கினர். இவ்வணி திரளல் மலையக மக்கள் முன்னணியை ஒரு மாற்றுச்சக்தியாக மலையகத்தில் வளரவிட்டிருந்தது. மலையக தேசியவாதத்தையும், அதன்வழி மலையக மக்களுக்கான தனியான நிர்வாக அலகுக் கோரிக்கையையும் முன்னெடுக்கின்ற ஒரு அமைப்பாக அது எழுச்சியடைந்துள்ளது. இவ் எழுச்சியின் தாக்கம் தோட்டப்புறத்தையும் அடைந்து நகர சமூகத்தையும், தோட்ட சமூகத்தையும் மலையக தேசியவாதம் எனும் கோட்பாடு இணைப்பதற்கு முயற்சித்துவரும் ஒரு சூழலிலேயே, இவ் ஆசிரிய் இடமாற்றப்பிரச்சினை தோன்றியுள்ளது.

இவ் இடமாற்றப் பின்னணியில் இ.தொ.கா புத்திரசிகாமணி குழுவினரின் நோக்கம் மிகவும் வெளிப்படையானது. அவர்கள் இரு நோக்கங்களில் மிகவும் தெளிவாக உள்ளனர். ஒன்று தோட்ட சமூகத்தில் தங்களது செல்வாக்கை தக்கவைக்கும் வகையில் தோட்ட சமூகத்திற்கும் நகர சமூகத்திற்கும் இடையே இருக்கும் முரண்பாடுகளை மேலும் கூர்மையாக்குவது, அதன் வழி மலையக தேசியவாத அரசியலையும், மலையக மக்கள் முன்னணியையும் தோட்டங்களுக்குள் நுழைய விடாமல் பார்ப்பது. இரண்டாவது மலையக நகர சமூகத்தில் மலையக மக்கள் முன்னணிக்கு இருக்கும் ஆதரவுத்தளத்தை உடைப்பது. இவ்விரு நோக்கங்களையும் அடைந்து கொள்ளுவதற்கான வழிவகைகளுள் ஒன்றாகவே இடமாற்றத்தையும் அது கையாண்டது.

இந்நோக்கத்தில் புத்திரசிகாமணி + இ.தொ.கா குழுவினர் ஓரளவு வெற்றியடைந்துள்ளனர் என்றே கூறவேண்டும். இடமாற்றப் பிரச்சினையை மலையக மக்கள் முன்னணி எதிர்க்கின்றமையால் தோட்ட மக்கள் மலையக மக்கள் முன்னணியை எதிரிக் கண்ணோட்டத்துடன் நோக்க ஆரம்பித்துள்ளனர். எங்களுடைய கல்விவளர்ச்சிக்கு மலையக மக்கள் முன்னணியினர் எதிராக நிற்கின்றனர் என்பதே அவர்களது அபிப்பிராயமாக உள்ளது. இது விடயத்தில் நகர்ப்புறப் பாடசாலைகளிலும் தோட்ட மாணவர்களே கற்கின்றனர் என்ற கருத்து பெரிதாக அவர்களிடம் எடுபடவில்லை. ஒரு சில இடங்களில் அவ்வாறு இருக்கின்றதே தவிர முழு மலையகத்திலும் அவ்வாறு இல்லை என்பதே அவர்களது கருத்தாக உள்ளது.

மறுபக்கத்தில் மலையக மக்கள் முன்னணி அரசுடன் சேர்ந்து நிற்கின்ற போதும் இடமாற்றத்தை தடுத்து நிறுத்த முடியவில்லை என்ற அபிப்பிராயம் நகர்ப்புற சமூகத்திலும் இடமாற்றத்துக்குட்பட்ட ஆசிரியர்கள் மத்தியிலும் எழுந்துள்ளது. இந்நிலைமை நகர்ப்புற மக்கள் மத்தியில் மலையக மக்கள் முன்னணிக்கு இருக்கும் ஆதரவு தளத்தினை ஆட்டம் காணச்செய்துள்ளது.

இதுவிடயத்தில் தனது அரசியல் நோக்கங்களையே ஆட்டம் காண வைக்கும் பிரச்சினை தொடர்பாக மலையக மக்கள் முன்னணி சரியான கவனத்தைச் செலுத்தவில்லை.

மலையக மக்கள் முன்னணி, இடமாற்றத்தை ரத்துச் செய்யுங்கள், இடமாற்றத்துக்கு எதிராக இறுதி வரை போராடுவோம் என்ற ஆக்ரோஷமான கோஷங்களை முன்வைப்பதற்கு பதிலாக, இப்பிரச்சினையின் மூலகாரணமாக இருக்கின்ற ஆசிரியர் பற்றாக்குறையை நீக்குங்கள் என்பதையை பிரதானமான கோஷமாக முன்வைத்திருக்க வேண்டும். இடமாற்றம் செய்வது பிரச்சினைக்கு தீர்வல்ல, புதிய ஆசிரியர்களை நியமிப்பதே பிரச்சினைக்கு நீர்வு என்பதை ஆணித்தரமாக முன்வைத்திருக்க வேண்டும். இதன் வழி ஆசிரியர்களை உருவாக்க ஸ்ரீபாத கல்விக்கல்லூரியை திறவுங்கள் என்பதையுமே கோரிக்கையாக வைத்திருக்க வேண்டும். இவை பற்றியும் மலையக மக்கள் முன்னணி ஆங்காங்கே குறிப்பிட்டாலும் இக்கருத்துக்கள் பிரதானமான கருத்தாக ஆணித்தரமான கருத்தாக வெளிவரவில்லை.

எனவே மொத்த மலையக சமூகத்தின் நலன்கருதி மலையக மக்கள் முன்னணியினரும் மலையக மக்கள் மீது அக்கறை கொண்டவர்களும் பின்வரும் கோரிக்கைகளை முன்வைத்து நடவடிக்கைகளை முன்னெடுப்பது அவசியமானதாகும்.

1. முழு மலையகத்திற்கும் தேவையான போதிய ஆசிரியர்கள் உடனடியாக நியமிக்கப்படல் வேண்டும்.

2. பயிற்சி பெற்ற ஆசிரியர்களை உருவாக்கும் வகையில் ஸ்ரீபாத கல்விக்கல்லூரி உடனடியாக திறக்கப்படவேண்டும்.

3. இடமாற்றங்களில் அரசியல் பழிவாங்கல்கள் இருக்கக்கூடாது.

4. இடமாற்றத்துக்குள்ளான பாடசாலைகளில் ஆசிரியர் வெற்றிடங்களுக்கு உடனடி மாற்று ஏற்பாடுகள் செய்யப்படல் வேண்டும்.

5. தோட்ட மக்களையும் நகர மக்களையும் பிளவுபடுத்துகின்ற எந்தச் செயற்பாட்டையும் இல்லாமல் செய்தல் வேண்டும்.

இறுதியாக மலையக சமூகத்தின் விடுதலை மலையக நகர்புறமும் தோட்டப்புறமும் ஐக்கியப்பட்டு கருமமாற்றுவதிலேயே தங்கியுள்ளது. எனவே விழிப்புணர்வு பெற்றவர்கள் இவ்விடயத்தில் மிகவும் கவனம் செலுத்தி இரண்டு சமூகங்களையும் ஐக்கியப்படுத்துவதற்கான வழிவகைகளை கண்டறிதல் வேண்டும். இதைவிடுத்து இருதரப்பும் தங்கள் தங்கள் நலன்களையே முதன்மைப்படுத்துவார்களாக இருப்பின் மலையக மக்களை கூறு போடும் எதிரியின் சதித்திட்டவலைக்குள் நீங்களும் விழுந்தவர்கள் ஆவீர்கள்.

---

சரஜிவோ நகரிலிருந்து யுத்தத்தின் கொடுமை தாளாது தப்பியோடிய அட்மிரா - பொஸ்கோ என்ற இளம் காதலர்களை எதிரிகளது துப்பாக்கிகள் குறிவைத்துக் கொன்றன. ''விர்பானா'' என்ற இடத்தில் அவர்கள் காவியமாகிப் போனார்கள். அவர்களது நினைவாக சிங்கள மொழியில் எழுதப்பட்ட கவிதையின் தமிழாக்கம்.

மரணமென்பது
வாழ்க்கையைப் போன்று
பெறுமதியானது அல்ல
என்பதை
இந்த உலகத்தாருக்குச் சொல்லிக்கொடுக்க
என்னால் எழுந்திருக்க முடியவில்லை
அட்மிரா........

அன்பு என்பதும்
வாழ்க்கையைப்போன்று
பெறுமதியானதே என்பதையும்
இந்த உலகத்தாருக்குச்
சொல்லிக் கொடுக்க வேண்டியுள்ளது.
எனினும்,
அதைச் சொல்லக்கூட
என்னால் எழுந்திருக்க முடியாதுள்ளது
பொஸ்கோ.......

மரணிப்பது
எமது மூச்சல்ல;
மனிதத்தின் அன்பெனும்
உயிர்த்துடிப்பே

நாம் இழந்தது எம்மையல்ல
ஒரே நிறத்து இரத்தமுடைய
முழு மனித இனத்தினது
இழப்புத்தான் நாங்கள்...

நாம்
இன்னுமொரு மூச்சுவிட்டு
இந்த உலகத்தாருக்கு
அன்பையும் சொல்லி...,
இதையும் சொல்லுவோம்....
''இது - சரஜிவோ நகர் அல்ல,
'விர்பானா'வில் இருக்கும்
எமது கல்லறைகள்..''



சிங்களத்தில்:- ஷாந்த ஜயசேகர
தமிழில்:-

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 16 மாடிகளும் 17 வருடங்களும்

வானுயர நிமிர்ந்து நிற்கும் 16 மாடிக் கட்டிடத்தை அண்ணார்ந்து பார்த்தபடி நுழைவாயிலில் நின்று யோசித்தேன்.

உள்ளே போவதா....? அமைச்சரையும் அவரைச் சுற்றி மோப்பமிடும் கொசுக்களையும் சந்திப்பதா இல்லையா...? கழுத்தில் ஓர் அழகான ''டை'' யையும் தனக்கு எந்தவிதத்திலுமே பொருத்தமில்லாத ''கோட்''டையும் அணிந்து கொண்டு, சுழல்' நாற்காலியில் எயர்கண்டிசன் றூமில் இருக்கும் ''சேர்'' அல்லது தவளை இன்று இன்முகத்துடன் இருக்குமா...? அல்லது வழமை போலவே - யாருடையதாவது ஒரு ரெலிபோனை நம்பி அல்லது என்னிடம் ஏதாவதொரு வேலை முடியாமல் போனவனின் பேச்சைக் கேட்டு என்னைக் கடுமையான வார்த்தைப் பிரயோகங்களுடன் வரவேற்குமா...?

உள்ளே போகாமல் விட்டால் என்ன...? அதெப்படி முடியும்...! என்னோடொத்த சில மூத்த அதிகாரிகளும் கூட இந்தப் படிக்கட்டுக்களில் ஏறி... இறங்கி.... முகம் குப்புற வீழ்ந்து..... - முகத்தில் கிடக்கும் புழுதியைத் துடைத்தபடி - சிரித்துக் கொண்டு மாடிகளிலிருந்து வெளியே வந்து கொண்டிருக்கும் போது....?

நுழைவாசலில் காவலுக்கு நின்ற சிப்பாய்களில் ஒன்று வந்து வாகனத்தின் முன் பகுதியைத் திறந்து ஆராய்ந்தது. இன்னொன்று தடியில் பொருத்தப்பட்ட முகம் பார்க்கும் கண்ணாடியை வாகனத்தின் அடிப்பகுதியில் பிடித்து குண்டு சோதித்தது. மனிதக் குண்டுகள் வெடிக்கும் இந்த யுகத்தில் இந்த இரண்டும், பின்னர் எனதும் எனது தமிழ் சாரதியினதும் 650014412 V களை இரண்டு தடவைகள் பார்த்தன.

சிப்பாய்களின் தோள்களில் தொங்கிய - நவீன ரக துப்பாக்கிகளை எண்ண எ்ண்ண ஆச்சரியமாக விரிந்தது. அவற்றின் மேல் இரக்கமும், என்னவென்று புரியாத ஒருவகை வெறுப்பும் ஏற்பட்டன. எந்த எழுத்துக்களுக்குமில்லாத மதிப்பு..., எந்த மதகுருவுக்கும்.... ஏன் மத நூல்களுக்குக் கூட இல்லாத கௌரவம் ..., எந்த பீ.ஏச்.டிக்குமில்லாத சிறப்பு.... எந்த தெய்வத்துக்குமில்லாத பயம்.... நெருப்பைக் கக்கி நெஞ்சைப் பிளக்கும் இந்த இரு இரும்புக் குழல்களுக்கும் உண்டு.

இந்த இரண்டு சிப்பாய்களும் ஏதோ பெர்ழுது போக்காகப் பேசியபடி உலாவிக்கொண்டிருந்த போதுதான் நாங்கள் அகப்பட்டோம். எங்களைக் கண்டதும் முதலில் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். அவர்களுக்கு ஒன்றுதான் தெரியும். தமது சொல்லுக்குக் கட்டுப்படாவிட்டால் அவதூறுகளால் பேசுவது, வடகிழக்கிலென்றால் சுட்டுத் தள்ளுவது.

அந்த உத்தரவு மூளைகளின் ஒரு பகுதியில் ஆணித்தரமாகப் பதிய வைக்கப்பட்டுள்ளன. உண்மையில் - துப்பாக்கி வைத்திருப்பவர்களால் தானா யுத்தங்கள் ஆரம்பிக்கப்படுகின்றன...? இல்லை....!

சிப்பாய்களுக்கு எம்மை உள்ளே விடவும் மனமில்லை. திருப்பி அனுப்பவும் காரணமில்லை. பல தடவைகள் எமது 650014412 V களைப் புரட்டிப் புரட்டிப் படம் பார்த்துவிட்டு -

''மினிஸ்டர் வரச்சொன்னாரா...'' - என்று கேட்டன.

மினிஸ்டர் வரச்சொல்லவில்லை....... நாங்கள் தீவிரவாதிகள்....... வடகிழக்கிலிருந்து குண்டு வைப்பதற்கும், கொலை செய்வதற்கும் வந்துள்ளோம்..... சரியா... எங்களைக் கைது செய்யுங்கள் - என்று யாராவது கூறுவார்களா...?

''....ஆம் ... மினிஸ்டர் வரச்சொல்லியுள்ளார்...'' என்றேன். எனக்கு மட்டும் அனுமதி கிடைத்தது.

கண்ணன்... எங்கேயும் போய்விடாமல் இந்த மரத்திற்குக் கீழே பத்திரமாக இருந்து கொள் என்று எனது சாரதியை எச்சரித்துவிட்டு - சிற்றெறும்புகள் போல் படிக்கட்டுகளில் நிரம்பி வழியும் ஜனக்கூட்டத்தின் மத்தியில் நானும் நுழைந்தேன். இந்தப் 16 மாடிக்கட்டிடத்தின் 7வது மாடிக்கும் எனக்கும் கடந்த 1991லிருந்து 3 வருடங்களாக ஒரு மலட்டுறவு. மற்ற மாடிகளில் என்ன நடக்கிறது என்று பார்க்க ஒரு நாளேனும் எண்ணம் வந்ததே இல்லை.

பிற்பகல் 4 மணியாகியிருந்ததால் - அழகாகவும், சுத்தமாகவும் உடுத்து வரவேற்பு பீடத்தில் காத்திருந்து ஒரு நடிகை போல சிரிக்கும் பெண்ணை இன்று காண முடியவில்லை. அதனால் - மிக நளினத்துடன் தனது தோள்களை உயர்த்திக் குலுக்கி - ஆம்... அமைச்சர் உள்ளே இருக்கிறார்.... - என்ற அவளது ஆங்கிலத் தேன்மதுரத்தையும் கேட்கமுடியவில்லை.

டாக்டர் ஒருவரின் றூமுக்கு முன்பாக தங்களது முறைக்காக மரக்கட்டில்களில் காத்திருக்கும் நோயாளிகள் போல பலர் காத்திருந்தனர். இவர்கள் அனைவரும் நோய்களால் பாதிக்கப்பட்டிருப்பது வெளிப்படையாகவே தெரிந்தது.

சிலருக்கு - தகுதியில்லாத பெரிய பதவிகளில் மோகநோய் பீடித்திருந்தது. சிலருக்கு அரசாங்க செலவில் வாகனம் ஓடும் ஆசை உடம்பெல்லாம் ஏறியிருந்தது. இன்னும் சிலர் - தமக்குப் பிடிக்காத - தம்மோடு ஒத்துழைக்காத உத்தியோகத்தர்களை - தண்ணீர் இல்லாத காட்டுக்கு அல்லது அரசின் கட்டுப்பாடில்லாத பகுதிகளுக்கு மாற்றி விட வேண்டும் என்ற ஆட்கொல்லி நோயால் பாதிக்கப்பட்டிருந்தனர்.

நானும் போயமர்ந்தேன். எனது நோய்பற்றி எனக்கே தெளிவில்லை. எனது நோய்க்கு மருந்து இந்த அருவருப்பான இடத்தை விட்டுக்காலி செய்வதுதான். நான் வந்திருப்பதற்குக் காரணமே இல்லை. முகத்தைக் காட்டிவிடவேண்டும். அவ்வளவுதான். கிளினிக்குக்கு வரும் பிள்ளைத் தாய்ச்சி மாதிரி.

உள்ளே சீனாவிருந்து வந்த வர்த்தகக் குழுவொன்றுடன் மிக முக்கியமான பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருப்பதாகப் புதிதாக வருபவர்களுக்கு விளக்கம் கூறப்பட்டது.

காத்திருத்தல் என்பது ஒரு பொல்லாத வேதனை. அதுவும் நமக்கு எந்தவிதமான நன்மையுமில்லாமல் காத்திருக்க நேரும் போது வேதனையுடன் ஆத்திரமும் சேர்ந்தல்லவா பொங்குகின்றன.

ஏனக்கு ஒரு வருத்தமுமில்லை...?
பின்னர் ஏன் காத்திருக்கிறாய்...?

மனமே... எனக்கிருப்பது வருத்தமில்லை.... எனது தொழிலுக்குப் புற்றுநோய் ஆரம்பத்திருக்கின்றது.... ஆரம்பித்திலேயே நடவடிக்கையில் இறங்குவது நல்லதென அபிப்பிராயப்பட்டு இங்கு வந்துள்ளேன்...

ஊரிலும்... கொழும்பிலும்.... சேரைச்சுற்றி மோப்பமிடும் மூன்றாம் தரப்பிரஜைகள் சிலர் வாயைப் பிழந்து பிழந்து சிரித்தனர். வாய்களா இவை...? இவற்றினுள்ளே தொங்குபவை நாக்குகளா..? இந்தக் காவிபடிந்த பற்களுடன் கூடிய வாய்களுக்கு - எவரையாவது பற்றிய எடுத்துரைப்பு அவசியம் தேவை. தமது இருப்பை உறுதிப்படுத்திக்கொள்ள இது அவசியம். அந்த ஒரு கைங்கரியத்துக்காக மட்டும் 380 கி.மீற்றர் கடந்து வந்திருக்கின்றனர்.



கொசுககளுககு வேறு என்னதான் வேலை - மலத்தைச் சுற்றி வட்டமிடுவதைத் தவிர.... புழுக்களுக்கு வேறு என்னதான் வேலை பிணத்தைச் சுற்றி நாற்றம் குடிப்பதைத் தவிர....

அடட்டா... கயவர்கள், பச்சை அயோக்கியர்கள் இன்னும் இன்னும் பல முக்கியஸ்தர்களைக் காணும் ''மியூசியம்'' போலல்லவா மிளிர்கிறது இந்த இடம். இங்கே தரவேறுபாடு இல்லாமலல்லவா வியாபாரம் நடக்கிறது.... ஏற்றுமதியும், இறக்குமதியும் வாணிபமும் சேர்ந்து நடக்கிறது.

இந்த வர்த்தக வாணிபச் சந்தையில் ஒரு உத்தியோகஸ்தருக்கு இன்னுமொருவர் குறைந்த செலவில் குழிவெட்ட முடிகிறது. ஒரு நேர்மையான உத்தியோகஸ்தரின் பதவியுயர்வுக்கு சிரமமில்லாமலேயே வேலிகட்ட முடிகிறது. முதுகை மாத்திரம் சொறிவதன் மூலம் தகுதிகளுக்கு அப்பாற்பட்ட பதவிகளுக்கு குறிவைக்க முடிகிறது.... வேறு என்ன வேண்டும்...?

மேசையின் ஒரு மூலையில் முழங்கையை வைத்து சோகம் ததும்பிய தனது முகத்தை அதில் தாங்கிப் பிடித்தபடி இருப்பவரையும் எனக்கு நன்கு தெரியும். நான் ஆசிரியனாக இருந்த போது - எனது பகுதியில் பொலிஸ் பொறுப்பதிகாரியாக இருந்த ரபுஸ்ஸாலி. இன்றைக்கு எனக்கு மிகவும் பொருத்தமானவர் இவர்தான்.

''நீங்கள் என்ன இங்கே...'' - என்று எனது கதை ஆரம்பிக்கின்றது. வெட்கத்தை மென்று விழுங்கியபடி மெல்லப் புன்னகைத்தார். அந்தப் புன்னகை ஒன்றே போதும் - 100 கதை சொல்ல.

''... இல்லை... நான் சும்மா இருக்கிறேன்...''

இங்கு யார்தான் பிரயோசனத்துடன் இருக்கின்றனர் என்றேன் மனதுக்குள். ''நானும் சும்மா தான் வந்தேன்... மினிஸ்டரைப் பார்த்திட்டுப் போவம் எண்டு...''

''...நீங்க...'' - என்று இழுத்தார்.

''...நான் ஏ.ஜி.ஏ. நேற்று கொழும்பில ஒரு மீற்றிங்...

''... ஓ யெஸ்... உங்கள நான் கேள்விப்பட்டிருக்கிறேன்... இன்றுதான் முதன் முதல் சந்திக்கிறேன்.... இப்ப உங்கட இடத்துக்கு பிரதேச செயலாளராக வேறொருவரை மினிஸ்டர் போடப் போறார் போல... பரவலாய்க் கதைக்கிறாங்க...''

முன்பு அவர் புன்னகைத்தது போல - நான் வெட்கத்தால் புன்னகைக்கிறேன்.

''...உங்கள எனக்கு முன்பே தெரியும்... கலவர காலங்கள்ள நீங்க செய்த உதவிகளை இப்பவும் சனங்கள் நினைச்சுக் கதைப்பாங்க....'' - என்றேன்.

''... அந்தப் பிரபல்யம் தான் எனக்கு அபாயமாகி விட்டது.... அதோட நான் மினிஸ்டரைப் பற்றி பிழையாகக் கதைச்சுத் திரியிறனாம் எண்டு சிலர் போய்ச் சொல்லியிருக்காங்க.... அதால எங்களுக்குள்ள பிரச்சினை பெருத்துப் போச்சு... ஆறு வருஷமாய் ஆள்ள முகத்தில முளிக்கவேயில்லை... நான் நாலுதரம் ஏ.எஸ்.பி இன்ரவியூவுக்குப் போயிருந்தன்.... என்னை விடத்தரம் குறைந்தவர்களெல்லாம் இப்போது ஏ.எஸ்.பியாகி விட்டனர்...''

''...ஓம்... நாங்களும் உங்கள் புரமோசன் பற்றிக் கதைப்பதுண்டு... மனஸ்தாபப்படுவதும் உண்டு...''

''... அதுதான் இம்முறை மினிஸ்டரைக் கண்டு கதைப்பம் எண்டு வந்திருக்கன்...''

''செக்கியூரிட்ட சொல்லிப் போட்டு உள்ளே போவோமா...''

''... ஆள் என்ன ''மூட்ல'' இருக்குதோ தெரியல்ல... என்னோட அவருக்குச் சரியான கோபம்... கொலை செஞ்சுபோட்டு வந்த ஒருவனை விடுவிக்கச் சொன்னார்.... விடுவிக்கலாம் எண்டு எல்லாவழிகள்ளயும் யோசிச்சன்.... சட்டத்தைப் பற்றித் தெரிஞ்ச இந்தக்காலத்தில அப்பிடி லேசில விட்டிட முடியுமா...''

''... அதுதான் எனக்குமுள்ள பிரச்சினை... மாடிக் கடை வச்சிருக்கிற முதலாளிக்கு மாத வருமானம் இரண்டாயிரம் தான் எண்டு கடிதம் கொடுத்து அவனை வருமானவரியிலிருந்து காப்பாற்ற வேணும்.... றைஸ் மில்லே இல்லாத ஒருவனுக்கு மில் பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்டதென்று சொல்லி ஐந்து இலட்சம் ரூபா நஷ்டஈடு எடுத்துக் கொடுக்க வேணும்.... அவர்ர செயலாளரும் அடிவருடிகளும் கூட்டங்களுக்குப் போய்வாறத்துக்கு ஜீப் கொடுக்க வேண்டும்.... அவர் சொல்ற ஆளுக்கெல்லாம் வெள்ள நிவாரணமும், உணவு முத்திரையும் கொடுக்க வேணும்... அவருக்கு விசுவாசமான விதான ஊழல் செஞ்சால் தட்டிக் கேட்கக் கூடாது... இதனால் தான் எங்களுக்கிடையிலும் விரிசல் கூடிப்போச்சு...''

''எனக்கு இப்ப நாலாவது இடத்துக்கு ட்ரான்பர் கிடைச்சிருக்கு...''

''...எனக்கும் ட்ரான்ஸ்பர் வரும் போல இருக்கு...''

''இந்த மனிசனோட வேலை செய்யிறதெண்டான் சட்டப்புத்தகம் இருக்கக்கூடாது...'' - என்றார்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சிரித்தபடி. நானும் சிரித்தேன். சிறிது நேரத்தின் பின் சொன்னார்.

''...தம்பி ... எனக்கு இந்தப் பதவி உயர்வுகள்ள அப்படியொன்றும் ஆசை இல்லை.... ஆனால் என்னைவிடத்தகுதி குறைந்தவர்களெல்லாம் பதவி உயர்வு பெற்றுச் செல்லும் போது - எனது மனப்பக்குவத்தையும் மீறி சலனம் வருகிறது... என்ர தரத்துக்கும் அனுபவத்துக்கும் பதவி உயர்வு தானாக வரும்... இவர்தான் தடையாக இருக்கிறார்...''

''............''

''.... எனக்குப் பதவியொன்றுதான் தேவையென் றிருந்தால் எப்பவோ இங்க வந்திருப்பேன்.... இங்கே வராமல் எத்தனையோ வழிகளிலெல் லாம் முயற்சித்துப் பார்த்தன்.... முடியவில்லை.... தொடர்ந்து வேலைக்குப் போகவும் மன மில்லை.... இன்ரவியூவுக்குப் போகவும் நம்பிக் கையில்லை.... சந்திப்பவர்களெல்லாம் பிடிவா தத்தை விட்டிட்டு இங்கேதான் போகச் சொல் றாங்க....'' - என்றபடி மூச்சுவிட்டார்.

எனக்குத் தெரியும் அதிகமான உயர்அதிகாரிகள், என்னசெய்து கொண்டிருக்கிறார்களென்று. அவர்களும் என்னைப் போலவே செத்துக் கொண்டிருக்கிறார்கள். மரம் வெட்டித் தறித்ததும் - வேருடன் எஞ்சியிருக்கும் அடிமரக் குற்றி போல அவர்கள் செத்துக்கொண்டிருக்கிறார்கள் என்ற - 1993ல் இலக்கிய நோபல் பரிசுபெற்ற அமெரிக்க நீக்ரோ பெண் டொனி மோர்சனின் வசனங்கள் தான் என் ஞாபகத்திற்கு வந்தன.

ஒரு மனிதனை அடிக்கலாம்... அடித்து வீழ்த்த லாம்... ஏறிமிதித்துக்கொண்டிருக்க அனுமதிக்க முடியுமா....?

அதற்கிடையில் ஒருவன் வந்து என்னைச் சுரண்டி - ''மினிஸ்டர்ர ட்ரைவர் உங்களைக் கொஞ்சம் அந்தப் பக்கம் வரட்டாம் சேர்....'' - என்றான்.

''... பிறகு வாறன் எண்டு போய்ச் சொல்லுங்க...''

என்னை நன்கு அவதானித்த ரபுஸ்ஸாலி - ''... போய் என்னென்று பாருங்கள்....''- என்றார்.

அந்தக் கொசுவிடம் போக முடியாது. இரண்டு மாதங்களுக்கு முன் என்னை ஒரு உயர்அதிகாரி என்று கூடப்பாராமல் மக்கள் மத்தியில் என்னு டன் வாக்குவாதப்பட்டான்.

தனது மகனுக்கு உத்தியோகம் ஒன்று எடுப்பதற் காக - வேறொரு கிராமத்தில் மரணித்த அவரது சொந்தக்கார் ஒருவரை - புலிகள் சுட்டதாக சிபார்சு செய்து தரும்படி மினிஸ்டர் மூலம் கேட்டி ருந்தான். இறந்தவனின் மரணப்பதிவில் இயற்கை மரணம் என்றிருக்கும் போது அது எப்படி முடி யும்....? என்று மினிஸ்டருக்கு விளங்கப்படுத்திய போது - அக்கணத்திலேயே ட்ரைவருக்கு ஏசி னார். அதன் பின்னர் பகைமை முற்றிவிட்டது.

மினிஸ்டரை ஏற்றிக்கொண்டு பிரயாணத்தில் போகும் போது - நான் எதிர்க்கட்சிக்காரர்க ளுக்கே வேலை செய்வதாகவும், தமது கட்சிக்கா ரர்களைப் புறக்கணிப்பதாகவும் அள்ளி வைத் தான். இதனை அமைச்சரே என்னிடம் ஒரு நாள் நேரடியாக கேட்டார்.

மினிஸ்டருக்கு என்மேல் சந்தேகம் வலுத்துவிட் டது. அச்சந்தேகம் இன்றுவரை விஸ்வரூபம் எடுத்துவிட்டது. ஒரு முறை அவருக்கு சந்தேகம் வந்துவிட்டால் அதனைப் போக்க எத்தனை முறை பாடுபட்டாலும் அது பலனளிக்காது. கட் டிய மனைவியை கணவன் சந்தேகித்த கதையா கவே அது முடியும்.

பின்பொருநாள் ட்ரைவர் என்னுடன் ஆத்திரம் பொங்க மோத முன் வந்தான்.

''.... நீங்கதான் சேர் என் மகனுக்கு முதல்வி ரோதி... உங்களப்போல களவெடுத்து என் மகன் தொழில் செய்யத் தேவையில்ல...''- என்று முழங்கினான். என் உடம்பெல்லாம் கூசியது. அமைச்சரின் ஆதரவாளர்கள் வியந்து நின்றனர். அன்றுடன் இந்தப் பக்கமே வரக்கூடாது என்று சத்தியம் செய்தேன். சத்தியம் நிலைக்கவில்லை.

அப்படிப்பட்டவனிடம் நான் ஏன் போக வேண் டும். விரும்பினால் வந்து தொலைக்கட்டும் என்று இருந்துவிட்டேன்.

ட்ரைவரே வந்தான்.

''சேர்...... ஒரு நிமிடம்...''

நான் நிமிர்ந்து பார்த்தேன், அசையவில்லை.

''...ஒரு நிமிடம் மட்டும் சேர்...''

நான் எழுந்து வெளியே சென்ற போது - என்கை களை ஆரத்தழுவி அழுதான். ''.... சேர்.... நான் ஏதும் தவறுகள் செய்திருந்தால் மன்னிச்சுடுங்க.... ''

நான் மலைத்துப் போய் நின்றேன். எனக்குப் புரிந்த அளவில் பகைதான் நிரந்தரமானது. அது தான் சுகமானதும் கூட. சமாதானம் தற்காலிகமா னது. அது அபாயமானதும் கூட. மனிதர்கள், இனங்கள், நாடுகள் எதுவானாலும் - சமாதான மாய் இருந்து பயந்து பயந்து சாகுவதை விட - நிரந்தரப் பகையாக இருப்பதே நல்லதாகப்பட் டது. நான் ஒன்றுமே பேசாமல் எனது கைகளை ட்ரைவரின் கைகளிலிருந்து விடுவித்து முகத்தில் தேய்த்தபடி திரும்பினேன்.

இப்போது எல்லோரையும் மினிஸ்டர் உள்ளே வரும்படி அழைப்பு வந்தது. எங்களுடன் இருந்த ஒரு வாலிபரை அவரது செயலாளர் எழுப்பிக் காட்டி - அவர் பொருளியல் புத்தகம் ஒன்றை எழுதியிருப்பதாகவும், அதனை அமைச்சர் மூலம் வெளியிட்டு வைப்பதற்கு ஒரு நாளைக்கு நித்து வழங்க வேண்டும் என்றும் கூறினார். எங்க ளுடன் அமர்ந்திருந்த அமைச்சருக்கு உடம்பெங் கும் மகிழ்ச்சி புரண்டோடியது.

''... தம்பி என்ன ஃபுரோபொசரா....'' - என்று கேட்டார்.

''... இல்ல... கொழும்பு கெம்பசில அண்டர்கிரா ஜுவட்....''

''...அட புத்தகமெல்லாம் எழுதியிருக்கீங்க.... இப்படியான புள்ளயளப் பாராட்ட வேணும்.... நம்மிட ஹனிபாவெல்லாம் (இவரும் ஒரு பிர தேச செயலாளர்) இருக்காங்க.... இப்படியொன் றும் எழுதிறதில்ல...''

''... வருகிற 28ம் திகதி ஒரு ஞாயிற்றுக்கிழமை வருகுது... அதுல வைக்கலாம்.... வேற நாள் என் றால் பட்ஜட் தொடங்கிவிடும்...'' என்றார் செய லாளர்.

''.... தம்பி கூட்டத்துக்கு ஆட்கள் நிறைய வரவே ணும்..... அப்படியென்றால்தான் என்னைக்கூப் பிட வேணும்...''

''....ஓம் சேர்.... கொழும்பில மட்டும் எனக்கிட்ட நானூறு பிள்ளையள் ரியூசன் எடுக்கிதுகள்....''

''... பேரென்ன தம்பி....''

''....ஜாபீர் ... அக்கரைப்பற்று....''

''... புத்தகத்தைத் தாங்க.... இதன் தகுதி பார்த்துத் தான் பேச வேணும்.....''

''..... நல்லாப் படிச்சுப் பாருங்க சேர்.... திட்டமி டல் அமைச்சில இருக்கிற செல்வநாயகம்தான் அணிந்துரை தந்திருக்கிறார்....''

''.... அப்படியென்றால் நல்ல புத்தகமாகத்தானி ருக்கும்....'' - என்று புத்தகத்தைத் தடவி வியந்த படி - ''... நல்ல அழகான புத்தகம்....'' - என்றார். இறுதித் தறுவாயில் இளைஞன் கலகம் பிறப்பித்து விட்டான்.

''.... சேர் அமைச்சர் அஸ்வரும் தேவராஜும் வருவாங்க....''

''..... என்னடா....'

அமைச்சரின் முகம் கறுத்தது. மேலும் மேலும் கருத்துச் சுருங்கியது. முகத்திலிருந்த கண்ணாடி மேசைக்கு வீசப்பட்டது கையிலிருந்த புத்தகம் திருப்பி ஒப்படைக்கப்பட்டது. என்னெய்

## நற்பிட்டிமுனை பளீல்

திரண்டு வருகையில் தாழி உடைந்துவிட்டது. தாலி கட்டும் வேளையில் கல்யாணம் குழம்பி விட்டது.

தோரணங்களை அறுத்தெறியுங்கள்....! அழைப்பிதழ்களைக் கிழியுங்கள்..... என்ற நிலைமை.

''... டேய் தம்பி அவனுகளெல்லாம் வாரதென் டால் என்னைக்கூப்பிடாதே.... அவனுகளெல் லாம் பிரபல்யம் தேடி அலைகிறானுகள்....''

''.... சேர் அவங்க வரமாட்டாங்க... ஒரு ஐடியாக் குத்தான் கேட்டன்....''

''.... ஐடியாவும் கத்தரிக்காயும்.... நீ போ... என் னால் வரமுடியாது....'' என்றபடி கதிரையிலி ருந்து எழுந்தார். எல்லோரையும் பார்த்து எல் லோரும் போயிட்டு வாங்க என்றுவிட்டு விறுவி றுவென வெளிக்கிளம்பினார். காலை 10.00 மணி லிருந்து காத்துக்கிடந்தவர்கள் உட்பட சகலரும் 7 மாடிகளின் படிகளையும் தாண்டி இறங்கிக் கொண்டிருந்தனர்.

அயோக்கியர்களுக்கான திணைக்களமொன்றை உருவாக்கினால் அதற்கான அமைச்சையும் இங் கேதான் நிறுவவேண்டும் என்று முணுமுணுத்த படி எனது கால்களும் வெறியேறிக் கொண்டிருந் தன.




ஹறபாப்போ...
கொஞ்சமும் நாகரீகமில்லாத
ஒரு சமூகம்தான்
இது

கொள்கைப் பிடிப்பில்லாத
மாட்டாங்கி சமூகத்தில்
குந்தி இருக்கவும் விருப்பமில்லை
கொஞ்சமும்

எனக்கொன்றால்
அப்படியே ஓடித்திரியணும் போல
அல்லது
ஓங்கி அறைய வேண்டும் போல
சமூகத்துக்கு

சொட்டென்றாலும்
கிளிமின் நாக்கையாவது அறுத்து
தின்னக் கொடுத்திருக்கலாம்தான்
நாகரீகமாய்ப் பேச

ஒருவனைக் கேட்டால் காலை
உடைப்பானாம்
ஒருவனைக் கேட்டால் பல்லை
உடைப்பானாம்
ஒருவனைக் கேட்டால் தலையையே
உடைப்பானாம்
அதுவும்
ஆணம் ஒழுக...ஒழுக...
அப்படியென்றால்
உடைப்பதற்கு என்னதான் இருக்கிறது
இன்னமும்...

சிக்க...
இவ்வளவுக்குள்ளும்
என்னமாதிரிதான்
வெறுத்தே பெய்து தெரியுமா
வாழ்க்கை.

காற்றின் நுனியை
கவ்விப் பிடித்துக் கொண்டே
தலைகீழாய் தொங்குகிற
பட்டங்களைப் போல
என்ன மாதிரித்தான் தொங்குகின்றன
உணர்வுகள்

வயசுதான் கடுமையாக ஏறுகிறதென்றால்
விலைவாசிகளைப்போல
வருமானமும் தான் போதாதே...
காலங் கடத்த

ஏதாவது
செம்பகத்தின் கூடவாவது கிடைக்குமென்றால்
பூட்டை உடைக்க:
ப்பா...!

பல்லைக் கடித்துக் கொண்டாவது
தூங்கலாமென்றால்
அதுவும் முடியாது!
அறவே முடியாது!!

இப்படி...இப்படியே...
எத்தனை இரவுகளை தொலைத்திருக்கிறேன்,
எத்தனை சந்திகளை சபித்திருக்கிறேன்,
எத்தனை உயிர்களை இழந்திருக்கிறேன்,
இன்னாளில்.

அதனை விடவும்
என்னையே நான்
அதிகம் தொலைத்திருக்கிறேனே...
ராணுவத்திடமும்.

அப்படியென்றால்
தொலைப்பதற்கு என்னதான் இருக்கிறது
இன்னமும்...

அதனால்தான் சொல்கிறேன்
அல்லது
தொண்டை கிழிய
திரும்ப...திரும்ப...கத்துகிறேன்
நான்
வரமாட்டேன் என்று.

நானில்லாத வெறுமை
உனக்கு வெறுப்பையே தருமெனில்
என்
இருப்பிடத்தையாவது நீ
கல்லாலெறிந்து கொல்லு,
நான்கு வார்த்தையாவது கடிந்து பேசு,
காயப்படுத்து,
அல்லது
காறித்துப்பு.

ஆனால்–
வரமாட்டேன் என்றுதான்
கத்துவேன்.

துப்பித் தீர்க்கிற அந்த இரவிலும்
மடித்துப் போடப்பட்ட
நாற்காலிகளைப்போல
நீயும், நானும்
சளித்துக் கிடந்தோமே...
உனக்கு ஞாபகமிருக்குமே...

அந்த நிமிடங்களின் இறுக்கங்களின் மீது
சத்தியமாக...
இப்போதெல்லாம்
உன்னைப்பற்றிய–
எனது ஞாபகங்களின் வியாபகம்
என்
உச்சியில் இருந்தான
ஒரு சாண் கீழ்வரை மட்டுமே

அதுவரையில்
யாராகிலும், எந்த வாகனமும்
உன் பார்வையை அறுத்து விடலாம்.
உன் ஞாபகங்களை கத்தரித்துவிடலாம்.
ஆனால்...
உண்மையில் அறுந்தே கிடக்கின்றன
அவை.

-விளைபூமி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# "சமாதானமா...? அதை யாழ்ப்பாணத்தில் போய்ச் சொல்லு"

**-என்.எஸ்.குமரன்**

நாள்: 1995 ஏப்ரல் 25

இடம்: கொழும்பு பொது நூலக மண்டபம். வாயிலில் 'அரசியலமைப்புச் சீர்திருத்தமும், சமஷ்டியும்' என்ற குறிப்பிடப்பட்டிருந்தது. ஏற்பாடு தேசபிரேமி பிக்கு முன்னணி என்ற பெனர் தொடங்கியது வாயிலில் நான் அறிந்த சிங்கள நண்பர்கள் சிலர் துண்டுப்பிரசுரம் விநியோகித்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் 'சமாதானக் குழுவை'ச் சேர்ந்தவர்கள் என்பதை நான் அறிவேன். எனவே அவர்களது கையில் இருப்பது என்ன என்பதும் எனக்குத் தெரிந்திருந்தது. என்னைக் கண்ட சிங்கள சகோதரி சிங்களத்தில், '

'ஆங் தோழர் எப்படி'

'சுகம். என்ன சிக்கலான இடத்தில் வந்து பிரசுரம் விநியோகிக்கிறீர்களே!,

'என்னத்தை கேட்கிறீர்கள். இப்பதான் ஜினதாச நியத்தபால எங்களோடு பிரச்சினைப்பட்டு விட்டுப் போகிறார்'

'என்ன நடந்தது'

'யுத்தமல்ல..., சமாதானத்துக்காக...' என்ற பிரசுரத்தை அவர் பார்த்துவிட்டு இதைக் கொண்டு போய் யாழ்ப்பாணத்தில் விநியோகிக்கட்டாம். நாங்கள் சொன்னோம் இதை விநியோகிக்க வேண்டிய இடம் இதுதான் என்று. அவர் 'இனி சமாதானமில்லை யுத்தம் தான்' என்றார். நாங்களும் 'அப்படியென்றால் நீங்கள் போய் யுத்தம் செய்வதுதானே' என்றோம். அவர் எங்களோடு தகராறுக்கு வந்தார். பின் கூடியிருந்தவர்களின் தலையீட்டால் கலைந்து போனார்கள். எங்களின் துண்டுப்பிரசுரங்களை மக்கள் வாங்கவிடாமல் தடுக்கிறார்கள்' என்றார்.

'நானும் கூட்டத்தைப் பார்க்கத்தான் வந்தேன். கூட்டம் தொடங்கிவிட்டது போல் தெரிகிறது. நான் வருகிறேன்' எனக்கூறி கருத்தரங்கு மண்டபத்தை அடைந்தேன். மேடையில் இலங்கையில் இனவாதத்துக்குப் பேர் போன நளின் டி சில்வா, எஸ்.எல்.குணசேகர, குணதாச அமரசேகர, பெங்கமுவே நாலக ஹிமி ஆகியோர் உட்பட இன்னும் சில பிக்குகளும் காணப்பட்டனர். அவர்களால் வெளியிடப்பட்ட இனவாதத்தை நியாயப்படுத்தும் பல புத்தகங்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன. கூட்டத்தில் அனல் பறக்க பேசிக்கொண்டிருந்தார் பெங்கமுவே நாலக ஹிமி.

**பெங்கமுவே நாலக ஹிமி**

"போலி சமாதான தூதுவர்கள், சமாதான பிரதிநிதிகள் சொல்லுவதைக் கேளாதீர்கள். வடக்கு கிழக்கில் என்ன நடக்கிறது என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும். வவுனியாவுக்கு அப்பால் சிங்களவர்கட்கு போக முடிகிறதா? ஆனால் புலிகளுக்கு இங்கு வரமுடிகிறது. இல்லாத ஒரு இனப்பிரச்சினையைப் பற்றி கத்திக் கொண்டிருக்கும் துரோகிகள் முன்னெடுத்துச் செல்லும் செயற்பாடுகளை நாங்கள் உறுதியாகக் கண்டிக்கிறோம்.

முப்படையினர் அவர்களது அனுபவத்தையும் பலத்தையும் பிரயோகித்து இந்த பயங்கரவாத பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சகல வசதிகளையும் பெற்றுக் கொடுக்குமாறு அரசாங்கத்துக்கு அறைகூவல் விடுகிறோம். இப்பிரச்சினைகளைத் தீர்க்க எமது படையினருக்கு தைரியமுண்டு. எனவே அரசாங்கம் மகாசங்கத்தினரின் ஆலோசனைப்படி செயற்பட வேண்டும்...

அரசியலமைப்புச் சீர்திருத்தத்தின் போது பிரதானமாக கவனத்தில் எடுக்க வேண்டிய விடயம் தான் தலைமைப்பிக்கு பதவியை ஏற்படுத்துவதற்கு. அரசியலமைப்பில் திருத்தம் கொண்டு வருவது. இது மிக முக்கியமானது. இதன் மூலம் பல பிரச்சினைகளைத் தீர்க்கலாம்.


**எஸ்.எல்.குணசேகர**

"அரசியலமைப்பு சீர்திருத்தம் பற்றி நான் உரையாடுவதற்கு இங்கு வரும் போது இத் துண்டுப்பிரசுரத்தை ஒரு குழு விநியோகித்தது. 'புலிகள் அப்படித்தான் அவர்கள் யுத்தம் புரிவார்கள். அதற்காக நாங்கள் யுத்தம் புரிய தேவையில்லை' என்பதுதான் அத்துண்டுப் பிரசுரத்தில் இருந்த சாரம். சமாதானத்தை கொண்டுவர சிங்கள - தமிழ் மக்களிடையே பாலம் போடட்டாம். ஏன் பாலம்? நாங்கள் தான் ஒன்றாக இருக்கிறோமே,...

ஐக்கிய இலங்கையில் எல்லா இனங்களும் ஒன்றாக இருப்பதையே நாங்கள் விரும்புகிறோம். ஏனைய ஏழு மாகாணங்களிலும் நாங்கள் ஒற்றுமையாகவே இருக்கிறோம். வடக்கு கிழக்கும் அப்படித்தான் இருந்தது. புலிகள் அவ்வொற்றுமையை சிதைத்துவிட்டனர்.....

புலிகள் சிங்கள மக்களை, பௌத்த மதகுருமார்களை துடிக்கத்துடிக்கக் கொன்றார்கள். ஆனால் சிங்களவரால் தமிழருக்கு அப்படி ஒரு போதும் நடக்கவில்லை என்பதற்காக நாங்கள் பெருமைப்பட வேண்டும்....

இப்போது கடற்படையை தாக்கியவர்கள் புலிகள். நாங்கள் கையை கட்டிக்கொண்டா இருப்பது. பைபிள் வேண்டுமானால் ஒரு கன்னத்தில் அறைந்தால் இன்னொரு கன்னத்தை காட்டச்



சொல்லும். தேவாலயங்களில் சொல்வதற்கும், எழுதுவதற்கும் அது சரி. ஆனால் நடைமுறையில் அப்படியிருக்க முடியாது.

இந்த உலகில் ஒரு கன்னத்தில் அறைந்தால் இன்னொரு கன்னத்தைக் காட்டும் எவராவது இருக்கின்றனரா? ஆயர் கென்னத் பெர்ணான்டோ கூட அப்படி செய்வாரென்று நான் நினைக்கவில்லை.

புலிகளின் இயல்பைப்பற்றி இன்னமும் அறியவில்லையா? அவர்களின் இயல்பு பற்றி ஒரே ஒரு உதாரணம், இனப்பிரச்சினை பற்றி பேசும் ஏதாவது ஒரு தமிழ்க்கட்சியாவது வடக்குக்குச் செல்ல முடிகிறதா? எங்கே சிவசிதம்பரத்துக்கு செல்ல முடிகிறதா? வாசுதேவ கூடப் போய்வருகிறார். ஏன் தமிழ்க் கட்சியினருக்கு போக முடியவில்லை. அவர்களுக்குத் தெரியும் புலிகளின் சுபாவத்தைப் பற்றி. ஆனால் சிங்களவர்களுக்கு சொல்கிறார்கள் புலிகளை நம்பட்டாம். நம்பி பேச்சுவார்த்தைக்கு போகாவிட்டால் சிங்களவர் இனவாதிகள் என்பர்.

யாழ்ப்பாண தமிழருக்கா, மட்டக்களப்பு தமிழருக்கா, கொழும்பு தமிழருக்கா உண்மையான சுதந்திரம் இருக்கிறது? பொலிஸ்படை, கடற்படை, ஆகாயப்படை, தரைப்படை ஆகியோரின் பாதுகாப்பின் கீழ் சிங்களவருடன் வாழும் தமிழருக்குத்தான் சரியான பாதுகாப்பும், சுதந்திரமும் கிடைக்கும்...

எமது நாட்டில் ஒரு அங்குலத்தைக் கூட எவருக்கும் விட்டுக்கொடுக்க முடியாது. சமஷ்டி என்ற பேரில் எமது மொத்த கடற்பரப்பில் 60 %த்தையும், நிலப்பரப்பில் 2/3 பங்கையும் அபகரிக்கப்பார்க்கும் இந்த மோசடிச் செயலுக்கு ஒருவரும் இணங்கிவிடக்கூடாது'

இப்படி அவர் பேசிக்கொண்டிருக்கையில் வெளியில் கூச்சல்கள் கேட்டன. பலர் மண்டபத்தைவிட்டு அதைப் பார்க்க போனார்கள். சூழ்நிலையை ஓரளவு உணரக்கூடியதாக இருந்தது. சமாதானக்குழுவினரைச் சேர்ந்தவர்களை தகராறுக்கு இழுத்திருந்தனர் இந்த இனவாத கோஷ்டியினர்.

'சமாதானக்குழுவுடன் தொடர்புள்ள கொழும்பு பல்கலைக்கழக அரசியல் துறை விரிவுரையாளர் நிர்மல் ரஞ்சித் தேவசிறியே தகராறுக்கு இழுக்கப்பட்டிருந்தார்.

என்ன நடந்தது என விசாரித்த போது கிடைத்த தகவல்கள் இவை, நிர்மல் போய்க்கொண்டிருந்த போது 'துண்டுப்பிரசுரத்தை விநியோகிக்க மட்டுமா தேவாலயம் பணம் கொடுத்திருக்கிறது. கருத்தரங்கை பதிவு செய்வதற்கு பணம் கொடுக்கவில்லையா? என இனவாதிகள்' வீம்புக்கு கேட்டதற்கு நிர்மல், 'இல்லை துண்டுப்பிரசுரத்தை விநியோகிக்க மட்டும் தான் பணம் கொடுத்திருக்கிறார்கள்' எனப் பதிலளித்திருக்கிறார்.

'ஏன் போகிறாய், இருந்து கருத்தரங்கில் கேட்கப்படுபவைக்கு பதில் கொடுத்துவிட்டுப் போ' என்று மீண்டும் கேட்டதற்கு நிர்மல் 'பதிலளிக்க வேண்டுமென்றால் நான் தயார். ஆனால் என்னை வற்புறுத்த உனக்கு உரிமை கிடையாது' எனக்கூறியிருக்கிறார்.

இதனோடு பேச்சு உக்கிரமடையவே சூழலிருந்தோர் அவ்விடத்தில் கூடினர்.

நளின் டி சில்வா வந்து 'கருத்தரங்கிற்கு வந்தவர்கள் உள்ளே செல்லுங்கள். சமாதானக் கோஷ்டிக்கு நாம் கூட்டத்தில் பதிலடி கொடுப்போம்' என்று கூறிக்கொண்டே நிர்மல் ரஞ்சித்துடன் இருந்தவர்களையும் பார்த்து அநாயசமாக கையை அசைத்துப் போகச்சொன்னார்.

பல இளைஞர்கள் உள்ளே போக மறுத்தனர். நிர்மல் ரஞ்சித்தை கண்ணிமைக்காமல் முறைத்துப் பார்த்துக்கொண்டு போனார்கள்.

நீண்டகால இனப்பிரச்சினையை சமஷ்டி

→15

மறுபக்கம்

# கடலுக்கு அப்பால், புயலில் ஒரு தோணி

பல்வேறு நாடுகளிலுமிருந்து நெருக்கடி மிகுந்த சூழ்நிலைகளில் எழுத்தாளர்களும், கலைஞர்களும் வேறு நாடுகளுக்கு பெயர்ந்து தமது ஆக்கங்களை புனைந்து வந்துள்ளனர்.

"கார்க்கி"யின் உலகப் புகழ் பெற்ற நவீனமான "தாய்" கூட அமெரிக்காவில் தான் முதலில் வெளியாயிற்று. அந்நாட்களில் ரஷ்யாவுக்குள் அது மிகவும் தணிக்கை செய்யப்பட்ட நிலையிலேயே, "உசார்" குறைக்கப்பட்ட நிலையிலேயே வாசிக்க கிடைத்ததாம். இவ்வாறு எத்தனை எத்தனையோ எழுத்தாளர்கள், கலைஞர்கள் புலம் பெயர்ந்து எழுதியதும் எழுதிவருவதும் வரலாறு. சமீப காலத்தில் தஸ்லிமா நஸ்ரினும், சல்மான் ருஷ்டியும் மிகுந்த பரபரப்பாக பேசப்படுகிறார்கள்.

"தமிழில் புலம் பெயர்ந்தோர் இலக்கியம்" எப்போது ஆரம்பமாயிற்று என்றொரு கேள்வி எழுவது இயல்பே. "புலம் பெயர்ந்தோர் இலக்கியம்" என்னும் சொற்றொடர் மிகச் சமீப காலங்களாக புதிய ஒரு கண்டுபிடிப்பு போலப் பாவிக்கப்பட்டு வருகிறது. அதுவும் இலங்கைத் தமிழர்களே புலம் பெயர்ந்தோர் இலக்கியத்தின் மூலகர்த்தாக்கள் எனும் கருத்தும் பரவலாக உள்ளது. தமிழில் புலம் பெயர்ந்தோர் இலக்கியத்தின் ஜனனகாலத்தை 80களில் நடுக்கூறாக கருதுவதும் உண்டு.

ஆனால் "புலம் பெயர்ந்தோர் இலக்கியம்" தமிழில் அறுபதுகளின் முற்கூறில் ஆரம்பமாயிற்று எனக்கொள்வது தான் சரியானது என்பது எனது கருத்து.

கமல்ஹாசனின் ' தேவர் மகன்' தமிழ்த்திரைப்படத்தில் சிவாஜி கணேசன் ஒரு 'வசனம்' பேசுகிறார். "நேதாஜி சுதந்திரப் போராட்டத்துக்கு ஆள் தேடறப்போ..... முதல் ஆளாக அரிவாளைத்தூக்கிக் கொண்டு போய் நின்னவன் நம்ம பயலுக தான்....."

அந்த முதல் ஆட்களில் ஒருவர் தான் ப.சிங்காரம் அவருடைய இரண்டு நாவல்களை பல வருடங்களுக்கு முன்பே நான் வாசித்திருக்கிறேன். மிகச் சமீப நாட்களில் திரும்பவும் வாசித்தேன்.

தமிழின் சிறந்த நாவலாசிரியர்கள் வரிசையில் கட்டாயமாகச் சேர்க்கப்பட வேண்டியவர் அவர். ஏன் தான் தவற விட்டார்களோ தெரியவில்லை! நான் அறிந்தவரை தமிழ் நாவல்கள் பற்றி ஆராய்ந்தோர்கள் அவரது பெயரை ஓரிடத்தில் கூடக் குறிப்பிடவில்லை.

"புயலில் ஒரு தோணி", "கடலுக்கு அப்பால்" என்னும் இருநாவல்கள் எனக்குப் படிக்கக் கிடைத்தன. வேறு நாவல்களை எழுதியிருக்கிறாரா, நாவல் தவிர்ந்த சிறுகதை, கட்டுரை, கவிதை போன்றவற்றையும் எழுதினாரா, என்பவை குறித்து எனக்குத் தகவல்கள் கிட்டவில்லை.

ப.சிங்காரம் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர். நாவல்கள் கூறும் செய்திகளின் படி திருநெல்வேலி அல்லது அதை அண்டிய மாவட்டங்களில் ஒன்று அவரது சொந்த ஊராதல் வேண்டும்.

"பினாங்" இல் வட்டிக்கடை ஒன்றில் தொழில் பார்த்த சமயத்தில், இந்திய விடுதலைப் போராட்டத்தால் உந்தப்பெற்று நேதாஜியின் இந்திய தேசிய விடுதலை இராணுவத்தில் சேர்ந்து போரிடுகிறார். அவரது சொந்த அனுபவங்கள் பற்றியன இந்த நாவல்கள் இரண்டும். சிங்காரம் பழந்தமிழ் இலக்கியங்களை ஓரளவு கற்றறிந்திருக்கிறார். நாட்டார் இலக்கியத்திலும் நல்ல புலமை அவருக்கிருந்திருக்கிறது. மிகவும் நகைச் சுவை உணர்வும் போர்க்குணமும் மிக்கவராக காணப்படுகிறார்.

2ம் உலகமகா யுத்தத்தின் இறுதியில் ஜப்பானின் படுதோல்வியும் நேதாஜி மர்மமான முறையில் மரணமடைந்ததும் இந்திய தேசிய விடுதலை இராணுவத்தை சின்னாபின்னமாக்குகின்றது. இராணுவத்தில் இருந்த போராளிகள் சாதாரண வாழ்க்கைக்குத் திரும்புகின்றனர். அங்கும் இல்லாது, இங்கும் இல்லாது திரிசங்கு சொர்க்கநிலையில் அல்லல் படுகின்றனர்.

ஒப்பீட்டு அடிப்படையில் 'புயலில் ஒரு தோணியை" விடவும் "கடலுக்கு அப்பால்" கட்டிறுக்கம் மிகுந்த தொற்றவைக்கும் உணர்வு கூடிய சிறந்ததொரு நாவல்.

இந்திய சுதந்திரப் போராட்டத்தைப் பற்றி தமிழில் பல பேர் எழுதியிருக்கிறார்கள். கல்கி, அகிலன், ரா.சு. நல்லபெருமாள் ஆகியோரின் கற்பனைக் காந்தியப்படைப்புக்களை விடவும் சொந்த அனுபவத்தின் உளைச்சல்களின் காரணமாக எழுதிய ப.சிங்காரம் அவர்கள் மிகுந்த மரியாதைக்குரியவராகிறார்.

அத்துடன் "தமிழில் புலம்பெயர் இலக்கிய"த்தின் தந்தையுமாகிறார்.

எதிர்காலத்தில் "தமிழில் புலம் பெயர் இலக்கியம்" பற்றி ஆராய்பவர் ஒருவர் ப.சிங்காரத்திலிருந்தே தமது ஆராய்ச்சியைத் தொடங்க வேண்டியவராக இருப்பார்.

அத்துடன் இப்போது வெளிவந்து கொண்டிருக்கிற "தமிழின் புலம் பெயர் இலக்கியத்"துக்கும் ப.சிங்காரத்தின் இலக்கியத்துக்குமிடையில் பெரிய வேறுபாட்டையும் அதாவது தேய்வையும் - கண்டு கொள்ள வேண்டியவராகவும் இருப்பார்.

**- ஆழ்வார்க்குட்டி**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## தமிழோசை...

வெட்டையில் விசேட அதிரடிப்படையின் அடிக்குப் பயந்து ஓடிய ஒரு இளைஞர் கொல்லப்பட்டார். இன்னொரு இளைஞருக்கு பேனட்டால் (Baynet) குத்திக்காயம். அவரை விசேட அதிரடிப்படையினரே கொண்டு சென்று வைத்தியம் செய்துள்ளனர். முதலைக்குடா, முனைக்காடு சுற்றிவளைப்பில் கைதாகிய பல ஆண்களுக்குக் கடும் அடி. பலத்த உள், வெளிக்காயங்களுடன் பலர் உள்ளனர். இதில் முனைக்காட்டை சேர்ந்த முருகேசு விஜயரத்தினம் என்னும் இளைஞர் மரணத்தோடு போராடும் நிலை. ஆனால் தம்மிடம் அடி உதை வாங்கி காயப்பட்ட எவரும் ஆறு கடந்து வைத்தியசாலைக்குச் செல்லக்கூடாது என விசேட அதிரடிப்படை கூறியுள்ளது.

**சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் உதவமறுப்பு**

இதனால் பலர் மருத்துவ உதவியின்றி பயத்தில் காயங்களுடன் பேசாமல் உள்ளனர். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் அவரது பெற்றோர் கெஞ்சியதாகவும் அதற்கு அவர்கள் மறுத்து விட்டதாகவும் ஊரார் தெரிவித்தனர். இப்பகுதியில் பிற்பகல் 6 மணிக்குப் பின் ஒரு உத்தியோக பூர்வமற்ற ஊரடங்கு விசேட அதிரடிப்படையினால் நடைமுறைப்படுத்தப்படுகிறது. வளவிற்குள்ளோ அல்லது ஒழுங்கைகளிலோ நடமாடுவதானால் ஒரு அடையாள விளக்குடனேயே எவரும் செல்லலாம்.

**ரெலோஸ்டுக்களின் கைவரிசை**

இதனிடையில் மகிழடித்தீவு முகாமில் உள்ள ரெலோஸ்டுகள் (T.E.L.O) மூவர் மீண்டும் தம் கைவரிசையை பொதுமக்கள் மீது காட்டத் தொடங்கிவிட்டனர். பிடிபட்டவர்களை எடுப்பதாகக் கூறி பணம் கறக்கின்றனர். ஏழை விவசாயிகளிடம் கப்பமும் கேட்டு மிரட்டுகின்றனர்.

**குணபாலவின் கொடூரம்**

இப்பகுதியின் மேற்குப் புறம் உள்ள காட்டுப்பகுதியான புழுகுநாவி என்னும் இடத்தில் இருக்கும் விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பாளரான குணபால என்னும் அதிகாரி மிகக் கொடூரமான போர்வழி எனப் பல விஷயமறிந்த படுவான்கரைப் பிரமுகர்கள் தெரிவிக்கின்றனர். பெண்களை நிர்வாணமாகக் கட்டி வைத்து அடிப்பது போன்ற பல கோர கிருத்தியங்களில் இந்நபர் ஈடுபட்டு வருவதாக அவர்கள் கூறுகின்றனர். பாதிக்கப்பட்ட பெண்கள் சிலர் தமது பெயரைக் குறிப்பிட்டு குணபால பற்றிய இத்தகவல்களை ஊர்ஜிதப்படுத்த மிகவும் பயப்படுகின்றனர்.

***வெரித்தாசும் தமிழோசையும் புறக்கணிக்கிறதா கிழக்கை?***

யாழ்ப்பாணத்தில் ஒரு சிறு அடி விழுந்தாலும் உடனே கூக்குரலிட பி.பி.சி. தமிழோசையும், வெரிட்டாசும் உண்டு. இம்மக்கள் ஏழைகள், படிப்பறிவற்றவர்கள் எனவே அவர்களது சொல்லொணா வேதனைகளும், மரணங்களும், நாளாந்த பயங்கரங்களும் அவர்களோடு. ஆனாலும் ஒன்று அவர்களே தமிழீழ விடுதலைப் போருக்குத் தாராளமாக தம் பிள்ளைச் செல்வங்களை அள்ளிக் கொடுத்தவர்கள். கொடுத்துக் கொண்டிருப்பவர்கள். இங்கு நான் கண்ட ஒருவர் சொன்னார். ''என் மருமகன் பூநகரிச் சண்டையில் போய் செத்துவிட்டான். அங்குள்ளவர்களுக்கு பாதை திறந்து கொடுக்க. இங்கு இந்த விசேட அதிரடிப்படையை பயங்காட்டக்கூட நம்மட பொடியன் ஒருவன் கூட இல்லை. மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்ததைப் போல் பட்டிப்பளைக்கு வந்து வாய்த்திருக்கும் உதவி அரச அதிபர் சிவானந்தனின் நடவடிக்கைகள் உள்ளன என இப்பகுதி மக்கள் பலரும் அங்கலாய்க்கின்றனர். அதிலும் குறிப்பாகப் பெண்கள்.

***துறைநீலாவணையில் பொலிஸார் தாக்கி 20 பேர் காயம்***

அம்பாறை மட்டக்களப்பு மாவட்ட எல்லையில் உள்ள துறைநீலாவணைக் கிராமமும் ஏப்ரல் 26 அன்று சுற்றிவளைக்கப்பட்டது. ஆண், பெண் சிறார் எனப் பேதமின்றி யாவருக்கும் நல்ல அடி. அடி காரணமாக 20 பேர் கல்முனை வைத்தியசாலைக்கு அனுமதிக்கப்பட்டனர். அடித்தவர்கள் விசேட அதிரடிப்படையுடன் நிற்கும் உள்ளூர் பொலிஸ்காரர்களே என அடிவாங்கிய துறை நீலாவணைக்காரர்கள் கூறுகின்றனர். இச்சம்பவம் பற்றி உடன் விசாரிக்குமாறு ஜோசப் பரராஜசிங்கம் (பா.உ) சந்திரானந்த விடம் கேட்டுள்ளார். ''இப்பிடி இவனுகளிடம் அடிவாங்கிறத விட புலிகளோட போய்த்திரலாம்'' என ஆத்திரப்பட்டார் பொல்லடி வாங்கிய ஒரு துறைநீலாவணை இளைஞர்.

**புலி உபத்திரவம்**

எது எப்படியாயினும் புலி மட்டக்களப்பில் இன்னும் வரி அறவிடுவதிலேயே குறிப்பாக இருக்கிறாப் போல் தெரிகிறது. ஏப்பிரல் 30 அன்று நகரில் புலி வரிக்கு டிமிக்கி கொடுத்ததாகக் கருணா என்பவரை புலிகள் சுட முற்பட்டதாகவும் காரியம் பிழைத்ததால் ஓடி விட்டதாகவும் ஒரு சலசலப்பு உண்டாயிற்று.

களுவாஞ்சிக்குடியைச் சேர்ந்த புலி வரித்துறை நபர் கல்முனையில் மாணவன் வேடத்தில் தன் கடமையில் ஈடுபட்டிருந்தபோது பிடிபட்டுவிட்டார். இவர் தற்போது பொம்மையாக மாறி கடும் அட்டகாசம் பண்ணுகிறார். . களுவாஞ்சிக்குடியில் புலிகளுக்குத் தண்ணீர் கொடுத்தவன். சோறு கொடுத்தவன், கொடிகட்டியவன் என யாவரையும் இராணுவத்திற்குக் காட்டிக் கொடுப்பதை தற்போது சிரமேற் கொண்டு செய்து வருகின்றார்.

**டி.சி**

## ரத்து...

வாரம் சென்றுள்ளது. அவ்விமானப் படைக் குழுவில் எயா வைஸ் மாஷல் அன்ஸ்லெம் பீரிஸ், எயா கொமொடோ ஜயலத் வீரக்கொடி, எயா எல்மோ பெரேரா, குழுத்தலைவர் லால் பெரேரா, ப்ளைற் லெப்ரினன்ற் றணவீர, மற்றும் திறைசேரியைச் சேர்ந்த ரீ.ஏ.எஸ்.றணவீரவும் அடங்கியிருந்தனர்.

விமானப்படை மூன்று ANTONOV AN 32B விமானங்களையும், ஆறு ஹெலிகொப்ரர்களையும் வேண்டி நிற்பதாகத் தெரியவருகிறது.

(படையினரைக் கொண்டு செல்லக்கூடிய ) கவச வாகனங்களையும், கனரக ஆயுதங்களையும் (Artillery Weapens) பார்க்கவென இராணுவக் குழுவொன்று மேஜர் ஜெனரல் றொஹான் தலுவத்த தலைமையில் அம்ஸ்ரடாம் வழியாக மொஸ்கோ செல்லலாமென எதிர்பார்க்கப்படுகிறது. கூடவே எல்.சீ.ஆர்.குணவர்த்தனவும், பிரிகேடியர் டபிள்யூ.ஜே.சீ. குணரத்னவும் செல்லவுள்ளனராம். திறைசேரியைச் சேர்ந்த ரீ.ஏ.எஸ்.றணவீர இக்குழுவுடன் மொஸ்கோவில் வைத்து இணையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

மொஸ்கோவிலுள்ள இலங்கைத் தூதருக்கு இலங்கை விமானப் படையின் தேவைகள் குறித்து இலங்கை அரசு ஏற்கெனவே எழுத்து மூலம் அறிவித்துள்ளதாகவும் தெரியவருகிறது. உக்ரெய்னிலுள்ள கீவ் விமான உற்பத்தி தொழிலகத்துடன் (Kiev Aircraft Production Plant) தொடர்பு கொண்டு , எந்த விமான உற்பத்தி தொழிலகம் ஆயுதங்களை தர உத்தரவாதமளிக்கும் என ஒப்பிட்டுப்பார்க்கும்படி இலங்கைத் தூதரை அரசு கேட்டுள்ளதாக மேலும் தெரியவருகிறது. தூதரிடம் ஏற்கெனவே இரு தொகுதி விமானங்களின் இலக்கங்களின் பட்டியல் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

1993 இல் உருவாக்கப்பட்ட ஒரு (Set) தொகுதி விமானத்தின் விலை 14 மில்லியன் அமெரிக்க டொலராகும் எனவும், 1995 இல் உருவாக்கப்பட்ட மற்றைய (Set) தொகுதி விமானத்தின் விலை 9.6 மில்லியன் அமெரிக்க டொலராகும் எனவும், 1993 இல் உருவாக்கப்பட்ட விமானம், பொ.ஐ.மு. அரசாங்கத்தினால் முன்பு இரத்துச் செய்யப்பட்ட 72 மில்லியன் அமெரிக்க டொலர் ஆயுதக் கொள்வனவில் உள்ளடக்கப்பட்டிருந்த அதே விமானமாகுமெனவும் தெரியவருகிறது.

இதேவேளை, இராணுவத்துக்குப் புதிதாக பத்தாயிரம் பேரைச் சேர்த்துக் கொள்ளும் நேர்முகப்பரீட்சை நாடு முழுவதிலுமுள்ள இராணுவ முகாம்களிலும், தலைமைக் காரியாலயங்களிலும் இன்று முதல் ஆரம்பிக்கப்படுகிறது.

## யுத்தத்திற்கு...

இதேவேளை மேஜர் ஜெனரல் றொகான் தழுவத்த மற்றும் நடவடிக்கை பொறுப்பாளர் பிரிகேடியர் றொகான் குணவர்தன போன்றோர் ஆயுதங்களை கொள்வனவு செய்வதற்கென சீனா, செக்கோஸ்லோவேகியா ஆகிய நாடுகளுக்கான விஜயமொன்றை மேற்கொண்டிருப்பதாகவும், விமானப்படை அதிகாரி என்ஸ்லீன் பீரிஸ் தலைமையிலான குழுவொன்றும் ரஷ்ய தலைநகரமான மொஸ்கோவுக்கு சென்றுள்ளதாகவும், இன்னொரு குழு 'டோரா' வர்க்கத்துக்கு இணையான அதிவேக படகுகளை வாங்குவதற்கு சீனா சென்றுள்ளதாகவும் தெரியவருகிறது.

## உரிமைகளும்...

**உணவு, மருந்து, போக்குவரத்து, தொலைத்தொடர்புகளையும் கூட நியாயமாக மறுக்க முடியுமா?** அதனை ஒரு அச்சுறுத்தலாகவும், ஒரு இராணுவ தந்திரோபாயமாகவும் வைத்திருப்பது அதை விட மோசமானதாகும். தமிழர்களுக்கு மேலும் ஏதாவது 'சலுகைகள் அல்லது சிறப்புரிமைகள்' வழங்குவதானது தேசிய பாதுகாப்புக்கு ஆபத்தை ஏற்படுத்தும் என அவர் (ஜனாதிபதி) தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார். வேறு சொற்களில் கூறுவதானால் தமிழருக்கு அடிப்படை உரிமைகள் வழங்குவதானது தேசிய பாதுகாப்பிற்கு ஆபத்தை ஏற்படுத்தும் என்பதாகும். எனவே, தமிழர்களின் அடிப்படை உரிமைகளை மறுத்துச் சிங்கள தேசத்தைப் பாதுகாப்புச் செய்யுங்கள் என்பதே ஜனாதிபதிக்கான இராணுவத்தின் ஆலோசனையாகும்.

**தமிழர்களுக்கு கொடுக்க வேண்டிய பாக்கியை விட அதிகமாகவே தான் வழங்கியிருப்பதாகச் சந்திரிகா கூறியுள்ளார். இது அவர் பழைய அரசியல்வாதிகளிடமும் தற்போதைய இராணுவத்திடமும் இருந்து கற்றுக் கொண்ட புதியதோர் மொழியாகும். அவரின் ஆரம்ப மனநிலையில், அரசியல் மெய்யறிவும் அவ்வாறு இருக்கவில்லை. அப்போது அவர் தமிழர்களின் நியாயமான குறைகள் பற்றியும், குறை தீர்க்க வேண்டிய தேவை பற்றியும் பேசினார்.**

**தற்போது அவர் ஏன் நாட்டுக்குச் சேவையாற்றுவதைவிடப் பணம் சம்பாதிப்பதில் குறியாயுள்ள இராணுவத்திற்குத் தலை குனிகிறார்? வவுனியா சோதனைச் சாவடிகளில் இராணுவம் எவ்வாறு இலஞ்சம் சேகரிக்கிறது அல்லது சர்வதேச மட்டத்தில் ஆயுதக்கொடுக்கல் வாங்கலில் ஈடுபடுகிறது என்பதை உற்று நோக்கினால் உயர் அதிகாரிகளின் மறைந்துள்ள இலட்சியங்கள் புலப்படும். இந்நாட்டின் சமாதானத்தில் உண்மையிலேயே ஆர்வமுள்ள இராணுவமாக இவ் இராணுவம் இருக்க முடியுமா?**

**தமிழில்: வினோத்**

## உடின் மித்ரு...

கோரிக்கைகளைக் கைவிட்டிருந்தது. இவ்வாறான நிலைமைகள் காரணமாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் நியாயமற்ற கோரிக்கைகளை முன் வைக்கிறது என்று அரசு இலகுவாகக் கூறியது. சிங்கள அரசாங்கங்களின் போலியான நியாயத்தின் முன் வட - கிழக்கு மக்களின் நியாயங்கள் அடிபட்டுப்போக வழியேற்பட்டது. வடக்கு கிழக்கு மக்களின் ஒரு பிரதிநிதியாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் உள்ளது. அவ்வாறான தமிழீழ விடுதலைப் புலிகளின் கோரிக்கைகளைத் தென்பகுதி அரசியல் நிலைமைகளுடன் ஒப்பிடுகையில் அவை அரசாங்கத்திற்கு நியாயமற்றவைகளாகப்படுவது ஆச்சரியப்பட வேண்டியதொன்றல்ல.

அவ்வாறான கோரிக்கைகளினால் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் உயிர் வாழக்கூடியதாக இருக்கலாம். இருந்தாலும் அரசாங்கத்திற்கு, வடபகுதி மக்களின் உயிர் வாழ்வு பற்றிய கடைமையும், பொறுப்பும் உள்ளது.

இன்னொருபுறம், ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்கவின் இந்திய விஜயம் காரணமாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரனின் 'சந்தேகம்' இரட்டிப்பு, மும்மடங்காக மேலோங்கியது. இச்சந்தேகமானது இந்தியாவிடம் பிரபாகரனை ஒப்படைக்கக்கூடும் என்பதால் எழுந்ததாகும். இவ்வாறாகச் சிந்திப்பது இயல்பானதே.

ஏனெனில், கெரில்லாக்கலை அமைப்புச் (Pattern of Guerilla Art) சிந்தனையானது எதனையும் எப்பொழுதும் சந்தேகக் கண் கொண்டும், எதிர் மறையாகவுமே பார்ப்பதாகும். கெரில்லா அரசியலின் யதார்த்தம் அதுவாகும்.

அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ள இம்சை, வன்முறை மீது அதி விசாலமான எதிர்பார்ப்புகளை வைத்துள்ள ஒருவரே பிரபாகரன் ஆவார். அவரது சிந்தனையின்படி அவர் தனிநாடொன்றைப் பெற்றுக் கொண்டாலும் அங்கு முதலாளித்துவ அரசாங்கமொன்றே நிலவும். ஆனால் தென்பகுதியுடன் ஒப்பிடுகையில் அது பிற்போக்கு முதலாளித்துவ அரசாங்கமொன்றாக இருக்காது போகலாம்.

எவ்வாறெனினும், பிரபாகரனின் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களின் மனதில் விதைக்கப்பட்டுள்ள யுத்த மனநிலையானது சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்குப் பாரிய சவாலை விடுத்ததான குற்றச் சாட்டொன்றும் உள்ளது. குறிப்பாகக் கடற்புலிகள் தொடர்பாக அவ்வாறானதொரு குற்றச்சாட்டொன்றும் விடுக்கப்பட்டுள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மிகச் சிறந்த கெரில்லாத் தந்திரோபாயங்களைக் கையாண்டாலும், அவர்களின் முன்னணித் தலைவர்களுக்கு முறையான அரசியல் அறிவு புகட்டப்படாத நிலைமையொன்றே இருக்கிறது. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கச் சாதாரண உறுப்பினர்கள் **அரசியல் கெரில்லா இயக்கம்** ஒன்றின் பிரதிநிதிகள் அல்லர். அவர்கள் **யுத்த கெரில்லா இயக்கம்** ஒன்றினது உறுப்பினர் மட்டுமேயாவர்.

**அரசாங்கத்திற்கும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்குமிடையேயான சமாதான நடவடிக்கைகளில் முன்னேறி ஈடுபடுவதில் மிகக் கடினமான விடயமாக இருந்தது ''உதட்டளவில் நண்பர்கள், மனதளவில் எதிரிகள்'' - ('உடின் மித்ரு - யட்டின் ஹத்துரு') என்ற கொள்கையைக் கடைப்பிடித்ததனாலாகும். அவ்வாறான நிலையை இருசாராரும் வைத்துக் கொண்டு செயற்பட்டால் இலங்கையின் சாதாரண மக்களின் தலைவிதிக்குப் பொறுப்பு கடவுள் மட்டுமேயாவார்.**

## சமாதானமா...

சமஷ்டி முறையிலான தீர்வொன்றின் மூலம் தீர்ப்பதற்கும், இந்நாட்டிலுள்ள சிறுபான்மை இனங்கள் தமக்கான அரசியலுரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்கும், தடையாக சிங்கள, பௌத்த பேரினவாதம் எவ்வாறு திட்டமிட்டுக் கடமையாற்றுகிறது என்பதனை இக்கருத்தரங்கும், நடந்த சம்பவங்களும், அவர்களது வெளியீடுகளும் புலப்படுத்துகின்றன.

யுத்தம் நிறுத்தப்பட்டு, சமஷ்டி முறையாலான தீர்வு காணப்படவேண்டும் என்று வலியுறுத்தும் சிங்கள மக்கள் மத்தியிலான ஜனநாயக சக்திகள், இச்சிங்கள பௌத்த பேரினவாத சக்திகளால் துரோகிகளாகப் பிரச்சாரப்படுத்தப் படுவதையும் அவதானிக்க முடிகிறது.

இலங்கையில் ஆட்சியேற்ற பிரதமர் / ஜனாதிபதிகளுள் தாராள சிந்தனை உடையவரும், புலமையாளரும், இனப்பிரச்சினை தொடர்பான ஆழ்ந்த அறிவும் உள்ளவர் எனப் புகழ்ந்துரைக்கப்பட்ட ஜனாதிபதி சந்திரிகாவே, தன்னுடைய நாட்டின் ஒரு பகுதி மக்களுக்கு நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த அந்தியாவசியப் பொருட்களை அனுப்பி வைக்க உத்தரவை இட்டுவிட்டு 'தமிழர்களுக்குப் போதிய சலுகைகளும் நலன்களும் வழங்கப்பட்டுள்ளதாக' கூறும்போது இந்த சிங்கள பௌத்த பேரினவாதிகளின் உரைகளும், நடவடிக்கைகளும் தமிழர்களுக்கோ, அல்லது இலங்கையின் எந்த சிறுபான்மையினருக்கோ ஆச்சரிய மூட்டும் ஒன்றாக அமையப் போவதில்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

SARINIHAR
சரிநிகர்

## ஜனாதிபதியின் தீர்வும் அதுதானா?

சென்ற இதழில் இப்பந்தியில் 'செஸ்' ஆட்டம் பற்றி குறிப்பிட்டிருந்தோம்.

''அரசியல் சதுரங்கம்''

அந்த ஆட்டம் இப்போது முடிந்துவிட்டது. மூன்றாவது ஈழப்போருக்கான சங்கு ஊதப்பட்டு விட்டது.

ஏப்பிரல் 18ம் திகதிய காலக்கெடு முடிந்த கையோடு மறுநாள் அதிகாலையில் கடற்படை ரோந்து கப்பல்கள் மீதான புலிகளின் தற்கொலைத் தாக்குதலை அடுத்து இந்த யுத்தம் ஆரம்பமாகிவிட்டது.

யுத்தம் தொடங்கிய உடனேயே அரசாங்கம் செய்த முதல் வேலை, வடக்கு கிழக்குக்கு திறந்து விடப்பட்டிருந்த பொருட்கள் மீதான தடையை மீளக்கொண்டுவந்ததாகும்.

யுத்தம் தொடங்கிய 12 நாட்களில் அரசுதரப்பில் 200க்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டுவிட்டனர். புலிகள் தரப்பில் 50 பேர் வரையில் கொல்லப்பட்டுவிட்டதாக அரச தகவல்கள் தெரிவிக்கின்றன. பொதுமக்களில் 20 பேர் வரையில் தரக்கப்பட்டு கொல்லப்பட்டோ காயங்களுக்குள்ளாகியோ உள்ளதாக பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. சாம்பல் தீவில் தமிழருக்கு சொந்தமான வீடுகள் 'புல்டோசர்'களால் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன.

யுத்தம் எப்போதையையும் போலவே அழிவுகளையும் இழப்புக்களையுமே மக்களுக்கு வழங்கும் என்பதற்கு இது ஒரு சின்ன உதாரணம்.

வடக்கு கிழக்கின் இனப்பிரச்சினையை அரசியல் ரீதியாகப் பேசித் தீர்த்துவைக்க முடியும் என்று கூறிக்கொண்டு ஆட்சிக்கு வந்தது இந்த அரசு.

ஆனால், ''அரசியல் ரீதியாக'' இப்பிரச்சினையை எப்படித் தீர்க்கப் போகிறது என்பதற்கு அரசிடம் இன்றுவரை எந்தப்பதிலும் இல்லை.

புலிகளுடனான 8 மாத பேச்சுவார்த்தைக் காலத்திலும் சரி, 3 மாத போர் தவிர்ப்பு நேரத்திலும் சரி இவை பற்றி அரசு எதையும் தெரிவித்ததில்லை.

புலிகளுடன் அன்றாடப் பேச்சுக்களை நடாத்திய அரசு இராணுவ காரணங்களுக்காக தடைசெய்யப்பட்ட பொருட்களை வடக்குக்கு அனுமதிப்பது தொடர்பாகவும், இராணுவ தாக்குதல்களின் போது உடைக்கப்பட்ட கட்டிடங்களையும் பாதைகளையும் திரும்ப புதுப்பிப்பது தொடர்பாகவுமே பேசப்பட்டன.

அரசியல் ரீதியாக பேசுவது என்பது, இவ்வாறுதான் நடைபெற்றது. இந்த, இராணுவம்/ யுத்தம் சம்பந்தப்பட்ட விவகாரம் பேசப்படும் போதே அதோடு தொடர்புடைய பாதை திறப்பும் பூநகரி முகாம் அகற்றலும் பேசப்பட்டு பிணக்கு ஏற்பட்டது.

முடிவாக இன்று யுத்தம் ஆரம்பித்துவிட்டது.

ஆக, இதுவரை நடைபெற்றவைகளும் இராணுவ/ யுத்த சம்பந்தப்பட்ட விடயங்களே தவிர தமிழ் மக்களின் பிரச்சினை குறித்த அரசியல் தீர்வு சம்பந்தப்பட்ட விவகாரங்கள் அல்ல.

பேச்சுவார்த்தை மேசையிலும், கடிதங்களிலும் நடந்த யுத்தம் இப்போது நிஜ யுத்தமாக வெடித்துவிட்டது.

இந்த நிலைமைதான் ஏற்கெனவே பிரேமதாச - அரசு காலத்திலும் நிலவியது.

பேச்சுவார்த்தை காலத்தில் பல தடவைகளில் அரசு, புலிகளை அசெளகரியத்துக்குள்ளாக்கும் அறிக்கைகளை வெளியிட்டது; சந்தேகத்துடனே பேசியது; யுத்தத்துக்கும் நாம் தயாரே என்று வேறு குறிப்பிட்டது.

பூநகரி விவகாரத்தை ஒரு சவாலாக கருதி 'ஒரு அங்குலமும் பின்னோக்கி நகரமாட்டோம்' என உணர்வு பொங்க கூறியது.

இப்போது யுத்தம் மீண்டும் தொடங்கிவிட்டது.

ஓரிரவில் தீவிரவாதிகள் பயங்கரவாதிகள் ஆகிவிட்டனர். படைபலத்தை பெருக்க அரசு தீர்மானித்துவிட்டது; ரூபவாஹினி தனது யுத்தப் பிரச்சாரத்தை ஆரம்பிக்க தொடங்கிவிட்டது; கொழும்பில் சுற்றி வளைப்புக்களும் கைதுகளும் தொடங்கிவிட்டன; கிழக்கில் மீனவர்கள் தாக்கப்பட தொடங்கிவிட்டனர்.

ஆக, அரசு தான் இன்னொரு ஐ.தே.க. அரசே என்று நிரூபிப்பதில் கவனம் செலுத்துவதாகவே தெரிகிறது.

ஆனால், சமாதானம் என்பது இவ்வாறு சாதிக்கப்படக் கூடிய ஒன்றல்ல!

நாம் திரும்ப திரும்ப பலதடவை கூறியது போல அதற்கு வெளிப்படையான திறந்த மனது வேண்டும்!

'எமது அரசியல் தீர்வை புலிகளுக்கே முதலில் தருவதாக இருந்தோம். ஆனால் இப்போது அதை விரைவில் முன்வைக்க உள்ளோம்' என்கிறார் ஜனாதிபதி.

அதற்கு நாள் கோள் நட்சத்திரம் பார்க்க வேண்டிய அவசியம் என்ன? மருந்து கொடுக்க நேரமல்ல முக்கியம்; நோயாளியின் நிலைதான் முக்கியம்.

தவிரவும், இது இரகசியமாக செய்யக்கூடிய ஒன்றல்ல. பகிரங்கமாக செய்யப்பட்டு மக்களால் அங்கீகரிக்கப்பட வேண்டிய ஒன்று.

யுத்தம் பற்றிய முடிவு எடுப்பதற்கு சில நிமிட அவகாசம் போதுமென்றால், இதை அறிவிக்க மட்டும் ஏன் தயக்கம்?

ஒரு தீர்வு திட்டத்தை யார் என்ன செய்துவிட முடியும்?

தீர்வு யுத்தத்தின் மூலம்தான் என்றால் மட்டுமே ஒருவர் அரசியல் தீர்வை வெளியிடுவதை இழுத்தடிக்க முடியும்.

ஜனாதிபதியின் தீர்வும் அதுதானா?

## தமிழோசையும் வெரித்தாஸும் கிழக்கைப் புறக்கணிக்கிறதா?

மூன்றாம் ஈழப்போர் தொடங்கிய கையோடு மட்டக்களப்பில் பழையபடி சுற்றிவளைப்புக்களும் கைதுகளும் ஆரம்பமாகியுள்ளன. இம்முறையும் புலிகள் எதுவித சந்தடியுமில்லாமல் காட்டுப் பிராந்தியங்களை நோக்கி மாயமாகிவிட்டனர். அடிக்கடி பொலிஸார் மீது சிறு சிறு தாக்குதல்கள் புலிகளால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஏறாவூரை அண்டிய தளவாய் என்னும் இடத்தில் மேதினத்தன்று ஒரு பொலிஸார் பலி. வலையிறவுப் பாலத்திலும் ஏப்ரல் 27 அன்று ஒருவர் சரி. கடந்த சனி அதிகாலை மட்டு. பொலிஸ் நிலையம் மீது பெரும் தாக்குதல் ஒன்றை நடத்த ஏறத்தாழ 150 புலிகள் ஊடுருவி வந்திருந்தனர் எனவும், உரிய நேரத்தில் தகவல் கிடைத்ததால் அதை முறியடிக்கக் கூடியதாயிற்று என்றும், பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டாலும், அச்சம்பவத்தில் நகரத்துள் ஏற்கெனவே ஊடுருவியிருந்த ஒரு சில புலிகளே ஈடுபட்டிருக்கலாம் என்பதே உண்மை' எனத்தெரியவருகிறது. சனி அதிகாலை கடைகள் தட்டித் திறக்கப்பட்டு பலருக்கு நல்ல அடி. யாவரும் திரண்டு ஜோசப் பரராஜசிங்கத்திடம் (பா.உ) சென்ற முறையிட்டனர்.

### சித்தாண்டி இளைஞர் புலியெனக் கைது

மேதினத்தன்று காலை கல்லடிப் பால இறக்கத்திலுள்ள சோதனைச் சாவடியில் மகேந்திரன் என்ற சித்தாண்டி இளைஞர் அவரது மனைவியுடன் (மணமுடித்து இரண்டு மாதங்கள் மட்டுமே ஆகின்றன) வரும் போது கைதானார். புலிகளுடன் பல காலம் தொடர்பாக இருந்தவர் எனவும் தற்போது கல்லடியில் இருந்து கொண்டு நகரத்தினுள் நடக்கும், நடக்கவிருக்கும் தாக்குதல்களுக்குத் தேவையான தகவல்களைச் சேகரித்து புலிகளுக்கு அனுப்புகிறார் இவர் எனவும் கூறுகிறதாம் பொலிஸ்.

அன்னை பூபதி நினைவு தினத்திற்காக பொதுமக்களை சோடனை வேலைகளில் புலிகள் ஈடுபடுத்திய வேளையில் அப்பொதுமக்களோடு மக்களாக சிவிலுடையில் பொலிஸாரும் கூடத்திரிந்து வேலை செய்து ஊர்களுக்குள் புலிகளுடன் திட்டவட்டமான சம்பந்தமுடையவர்கள் யார், யார் என்பதை அறிந்து வைத்துள்ளதாலும், பல சந்தர்ப்பங்களில் அன்னை பூபதி நினைவு நாள் நிகழ்ச்சிகளை வீடியோ பண்ணி அதில் பல புலி ஆதரவாளர்களை இனங்கண்டதாலேயுமே இப்படியாகப் பலர் கைதாகின்றனர் எனச் சொல்லப்படுகின்றது.

### இளம் பெண்கள் மூவர் பொலிஸாரால் கைது

ஏப்.25 அன்று சந்திவெளி சுற்றிவளைக்கப்பட்டு மிகக் குறிப்பாக இரு இளம் பெண்கள் கைது செய்யப்பட்டு கல்லடி இராணுவ முகாமிற்குக் கொண்டு செல்லப்பட்டனர். அத்துடன் அன்று ஏறாவூரை அண்டியுள்ள ஐயங்கேணியில் ஒரு பெண் கைதானார். இவர் மகிழவெட்டுவானில் புலிகளுடன் தொடர்பு கொண்டு பலநாள் சென்று தங்கியிருந்தவர் என பொலிஸ் கூறியுள்ளது. இப்பெண்ணைப் பற்றித் தகவல் கொடுத்தவர் இவருடன் சண்டையிட்டுப் பிரிந்து வாழும் இவரது கணவன் என்றும் பேசிக்கொள்கின்றனர். சமாதான காலத்தில் பொலீஸும் இராணுவமும் கணிசமாக உள்ளூரில் தகவல் சேர்த்துள்ளனர் என இங்கு நடைபெறும் சில குறிப்பான கைதுகளைப் பார்க்கும் போது தெரிகிறது. ஆயினும் சுற்றிவளைப்புக்களின் போது சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்படுவோரில் அநேகர் அப்பாவிகளே.

இவர்களை மீட்டிட ஜோசப் பரராஜசிங்கம் (பா.உ) வீட்டில் பழையபடி பலர் குழுமிய வண்ணம் உள்ளனர்.

### விசேட அதிரடிப்படையால் இளைஞர் ஒருவர் பலி. மற்றவர் மரணப்படுக்கையில்

விசேட அதிரப்படையின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதியில் நிலைமை மிகக் கவலைக்கிடமாக உள்ளது. படுவான்கரையில் வவுணதீவு உதவி அரச அதிபர் பிரிவு இராணுவத்தின் கட்டுப்பாட்டிலும், பட்டிப்பளை உதவி அரச அதிபர் பரிவு விசேட அதிரப்படையினர் ஆணையின் கீழும் உள்ளன. ஏப்ரல் 25 அன்று மகிழடித்தீவு விசேட அதிரடிப்படை முகாமின் கீழ்வரும் முதலைக்குடா, முனைக்காடு ஆகிய இரு கிராமங்களும் சுற்றிவளைக்கப்பட்டன. இவ்வூரின் ஆண்கள் அநேகர் விசேட அதிர்டிப் படை முகாமிற்குக் கொண்டுவரப் பட்டனர். அவர்கள் பின் குய்யோ முறையோ எனக்கதறி ஓடிவந்த பெண்டுகள் பிள்ளைகள் அடித்து விரட்டப்பட்டனர். அவர்களை விரட்டியடிப்பதற்காக சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகமும் செய்யப்பட்டது. அடுத்த நாள் கொக்கட்டிச் சோலைக்கு மேலாகவுள்ள சோதையன் கட்டு என்னும் வயல்

→ 15

## திருமலை: சுற்றிவளைப்பும் சோதனையும்!

ஏப்ரல் 19 யுத்த நிறுத்த மீறலைத் தொடர்ந்து திருமலை நகரம் சோபை இழந்து காட்சியளிக்கின்றது. இடி மழை மத்தியில் இரவோடிரவாக விடுதலைப் புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட இரண்டு பீரங்கிப் படகுகள் மீதான தாக்குதல் பாதுகாப்பு வட்டாரத்தை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. இலங்கையில் மிகப் பெரியதும் பாதுகாப்பானதுமான கடற்படைத்தளத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த படகுகள் மீது இடம் பெற்ற இத்தாக்குதலில் விடுதலைப் புலிகள் தங்களால் எத்தகைய பாதுகாப்புத் தடைகளையும் மீறிச் செயலாற்ற முடியும் என நிரூபித்திருக்கிறார்கள்.

### பழிவாங்கல்கள் இல்லை

தாக்குதலைத் தொடர்ந்து கடற்படைத் தளத்தில் கடமைக்காக மறுநாட்காலை சென்ற சிவிலியன்கள் பிரதான பொலிஸ் வாயிலில் வைத்தே திருப்பி அனுப்பப்பட்டார்கள். அதுமட்டுமன்றி கடற்படை வீரர்களும் தளத்தை விட்டு வெளியேற அனுமதிக்கப்படாததால் பழிவாங்கல் நடவடிக்கைகள் எதுவும் இடம் பெறவில்லை.

எனினும் மக்கள் பதற்றமடைந்தே காணப்பட்டனர். எந்த நேரத்திலும் எதுவும் நிகழக்கூடும் எனப் பயந்தனர். தெருக்கள் வெறிச்சோடிக் கிடந்தன. வியாபார நிலையங்கள் நேரகாலத்தோடு மூடப்பட்டு மக்களும் மாலையாகும் முன்னரேயே அடங்கி விட்டனர்.

பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டன. வீதிகள் தோறும் வழமைக்கு மாறாகப் பொலிசார் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தனர். வீதிச் சோதனைச் சாவடிகளில் சோதனைகள் கடுமையாக்கப்பட்டன. எனினும் நகரப்பகுதியில் அசம்பாவிதங்கள் எதுவும் நிகழவில்லை.

### சாம்பல்தீவில் தாக்குதல்

சாம்பல்தீவு ஆறாவது மைல் கல்லில் விடுதலைப் புலிகள் பொலிசார் ஐவரைச் சுட்டுக் கொன்றதைத் தொடர்ந்து அன்று மாலை அந்த வழியில் பயணம் செய்தோர் சிலர் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டன. அந்தப் பகுதிகளில் வன்செயலில் பாதிப்புக்குள்ளாகி அரை குறையாகக் கிடந்த வீடுகள் யாவும் புல்டோசர் போட்டு தரைமட்டமாக்கப்பட்டன. மெதுமெதுவாகக் குடியேறிய மக்கள் பலர் திரும்பவும் திருமலைக்கே வந்துவிட்டார்கள்.

தற்போது சுற்றிவளைப்புக்கள் தேடுதல் வேட்டைகள், கைதுகள் என்பன இடம்பெறத் தொடங்கியுள்ளன. திருமலைவீதி, சி.வி. றோட், மாணிக்கவாசகர் வீதி என்று ஒவ்வொரு பகுதிகளாக சுற்றிவளைத்து படையினர் தேடுதல் வேட்டைகளை நடாத்துகின்றனர். வளர்ந்த பிள்ளைகளை வைத்துக் கொண்டிருக்கும் பெற்றோர்கள் அஞ்சி ஒடுங்கிப் போயிருக்கிறார்கள். இந்தியாவிலிருந்து அண்மையில் தாயகம் திரும்பியோர் மனவேதனையுடனேயே காணப்படுகின்றனர். இன்னும் கொஞ்ச நாள் அங்கு இருந்திருக்கலாம் என்று அவர்கள் அபிப்பிராயப்படுவது தெரிகிறது.

### வெள்ளை வேனுக்கு அச்சம்

''வெள்ளை வேன் பணி மீண்டும் தலைதூக்கலாம் என்ற அச்சம் மக்களிடமே பரவலாகக் காணப்படுகிறது. எனினும் அரசாங்க நடவடிக்கை, மக்கள் பிரதிநிதிகள் உடனிருத்தல் என்பவை காரணமாக 90ம் ஆண்டு காலப்பகுதி போல் அடாத்தான சம்பவங்கள் இடம் பெறாது என்றும் நம்புகிறார்கள்.

### நகர முதல்வர் படையினரிடம் கோரிக்கை

''யாராவது கைது செய்யப்பட்டால் நகர முதல்வர் என்ற வகையில் அதுபற்றி எனக்கும் அறிவிக்கப்பட வேண்டும்'' என சூரியமூர்த்தி அவர்கள் பாதுகாப்புத் துறையினரிடம் கேட்டிருக்கிறார். மக்கள் பாதுகாப்பு சம்பந்தமாக அண்மையில் நடந்த கூட்டமொன்றில் நகரபிதா சூரியமூர்த்தி ஆளுநருடன் சற்றே சூடாகவும் கருத்துக் கூறியிருந்தார்.

த.வி.கூ. செயலாளர் நாயகம் இரா. சம்பந்தன் அவர்களும், தங்கத்துரை (பா.உ.) அவர்களும் திட்டமிட்ட அடாத்துக்கள் கடந்த காலங்களைப் போல இடம்பெற அனுமதிக்கப்படமாட்டோம் என்பதில் உறுதியாக இருக்கிறார்கள்.

### கடற்படையின் தாக்குதல்

எனினும், மக்கள் மனதில் பீதியே நிறைந்து கிடக்கிறது. கடலுக்குச் செல்ல தடைவிதிக்கப்பட்டமையால் கடற்தொழிலாளர்கள் மத்தியில் பட்டினி தலைதூக்க ஆரம்பித்துவிட்டது. கரையிலிருந்து தூண்டில் போடுபவர்களைக் கூட கடற்படை வள்ளங்கள் துரத்தித் தாக்குகின்றன. சில கடற்படை வீரர்கள் தங்கள் வள்ளத்தை விட்டிறங்கி தரையில் இருப்பவர்களையும் தாக்க முற்படுகின்றனர்.

விவேகி

சரிநிகர் பிரதம ஆசிரியர் - சேரன். எல்லாத் தொடர்புகட்கும்: இல 4, ஜெயரட்ன மாவத்தை, திம்பிரிகஸ்யாய, கொழும்பு - 05. ☎ : 593615
வெளியீட்டாசிரியர் - ச.பாலகிருஸ்ணன்.
02-05-1995
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்